நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

WOMEN'S ... RESEARCH LIBRARY

இதழ்- 176 ஜுலை 22 - ஓகஸ்ட் 04, 1999 விலை ரூபா பத்து



"வன்முறை எதிர்த்தரப்பாலேயே கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருக்கையில் எங்களை மட்டும் ஆயுதங்களை கைவிடச் சொல்வது கேலிக்கூத்தாகும்"

-அப்துல்லாஹ் ஒகலான்

## வெளிநாட்டுப் பணிப்பெண்கள்:

பிரச்சினைகள் மாற்றங்கள் குறித்து சில அவதானங்கள்ள

## பொ.ஐ.மு:அளித்த வாக்குறுதிகள் என்னாச்சு..?



## முஸ்லிம்

## அரசியல்போக்குகள்!



நன்றி - நூலகத்திட்டம்



# இது எப்படி இருக்கிறது?

தமிழ் இயக்கங்கள் அப்பாவித் தமிழர்களைத் தாகுவது ஒன்றும் புதிய விடயமல்ல. இயக்கங்கள் ஆரம்பமான காலந்தொட்டு பச்சை மட்டையடி போடுவதும் கைது செய்து தாக்குதல் நடத்துவதும் வடகிழக்கில் ஒரு சாதாரண நிகழ்ச்சி. இந்த வகையில் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்க்கட்சிகள் (இயக்கங்கள்) புலிகள் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தினால் மட்டும் அவர்களை பாசிசப் புலிகள் அராஜகவாதிகள் என்று அறிக்கை விடத்தயங்குவதில்லை.

இதே போல் இராணுவம் பொது மக்கள் மீது தாக்குதல் நடந்தினாலும் இராணுவத்தினரின் வன்முறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம் என விழுந்தடித்துக் கொண்டு அறிக்கை விடுவார்கள். ஆனால் சிறீலங்கா என்ற முடிக்குரிய சாம்ராஜ்யத்தின் கீழ் கப்பம் செலுத்திக் கொண்டு (கையை உயர்த்திக் கொண்டு) வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் சிற்றரசு செலுத்தி வரும் புளொட்டினதும், ஈ.பி.டி.பி. யினதும் அடாவடித்தனங்கள் மக்கள் அறியாதது அல்ல.

இவர்கள் மக்களுக்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. புத்தூர், ஏழாலை, மல்லாகம் போன்ற இடங்களில் இடம் பெற்ற கண்ணி வெடிச் சம்பவங்களையடுத்து பொது மக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதும் ஈ.பி.டி.பி இராணுவத்தினரின் செயலை வன்மையாகக் கண்டித்தது. இதே ஈ.பி.டி.பி அப்பாவிப் பொது மக்களைத் தாக்கியிருக்கும் என்பதை நீங்கள நம்புகிறீர்களா, ஈ.பி.டி.பியின் வீணை உங்கள் இதய வீணையல்லவா. அதுவும் தனக்கு வாக்களித்த மக்களையே ஈ.பி.டி.பி. தாக்கியிருக்குமா? நல்லூர் பிரதேச சபை ஈ.பி.டி.பி. யின் கட்டுப்பாட்டில் உள்ளது. நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் கூட வீணைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. கடந்த 16.7.99 அன்று திருநெல்வேலிச் சந்தைக்குள் வைத்து ஈ.பி.டி.பி. திருநெல்வேலி முகாம் பொறுப்பாளர் பியசேன கருணாரத்த புலிகளின் பிஸ்டல் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் நல்லூர் பிரதேச சபையின் உப தலைவர் பதவிக்கு நியமிக்கப்படவிருந்தார். இவரின் கொலையைத் தொடர்ந்து சந்தைக்கு விரைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அங்கு வெற்றிலை வியாபாரம் செய்து கொண்டிருந்த நீர்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வரத்தினம் (செல்வம்) 38 வயது, திருநெல்வேலியைச் சேர்ந்த பத்மநாதம் 35 வயது ஆகியோர் மீது துப்பாக்கிப் பிடியால் தாக்கியுள்ளனர். இதனால் செல்வரத்தினத்தின் காது வெடித்து இரத்தம் வடிந்த நிலையில் இவர் யாழ் போதன வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சந்தைக்குள் நின்றோர் நாலா பக்கமும் சிதறி ஓடினர். வியாபாரிகள் மரக்கறிகளையும் அப்படியே விட்டு விட்டு ஓடினர். பின்னர் சிங்கள இராணுவம் வந்து நிலமையினை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. அதன் பின்னர் திருநெல்வேலி இயல்பு நிலைக்குத் திரும்பியது.

கவனிக்க: சிங்கள இராணுவம் வந்து நிலைமையைக் கட்டுப் பாட்டிற்குள்கொண்டு வந்தது.

இது எப்படி இருக்கிறது?

# வரணி மக்கள் முறையீடு

வரணி இராணுவ முகாமில் கடமையாற்றும் கொடித்துவக்கு, மாத்தையா, கஜன், இம்புலான, சம்பத் ஆகியோர் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் பெண்களுடன் சேட்டை விடுவதாகவும் அடையாள அட்டையை பறித்து வைத்துக் கொண்டு திருமணம் செய்யுமாறு வற்புறுத்துவதாகவும் வரணிப் பொது மக்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

படையினரின் இந்நடவடிக்கைகளால் சிறுவர்கள் பாடசாலை செல்லப் பயப்படுகிறார்கள். இளந்தலை முறை ஒழுக்க வீனமாக உருவாக்கப்படுகிறது. உடனடியாக இந்த இராணுவத்தினர்களை வரணியிலிருந்து வன்னிக்கு இடமாற்றம் செய்யுமாறும் அந்த முறைப்பாட்டில் வரணி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் காரணமாக மாணவர்கள் புலிகளுடன் இணைந்து வருவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த யூன் மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் படையினரால் கைது செய்யப்பட்டோர் விபரம்

| திகதி | பெயர் | முகவரி |
|---|---|---|
| 02.06.99 | ஐ.குணசீலன் | குருநகர் |
| 02.06.99 | முருகதாஸ் சிவதர்ஷன் | கம்பர்மலை |
| 02.06.99 | கொ.ராஜேஷ்குமார் | கம்பர்மலை |
| 03.06.99 | கந்தையா அன்ரனி | கம்பர்மலை |
| 03.06.99 | மில்டன் சந்திரசிறி | ஈச்சமோட்டை |
| 04.06.99 | நவரத்தினம் தர்மதாஸ் | கைதடி |
| 04.06.99 | இ. அருள்தாசன் | குருநகர் |
| 04.06.99 | பீற்றர் பிறையாண்டி | குருநகர் |
| 04.06.99 | முடியப்பு விமலச்சந்திரன் | குருநகர் |
| 05.06.99 | குணரத்தினம் குணசீலன் | புத்தூர் |
| 08.06.99 | மாடாசாமி விஜயபாலன் | நல்லூர் |
| 08.06.99 | குலசிங்கம் கணேஷ் | நல்லூர் |
| 08.06.99 | துரைசாமி ரதீஸ் | உடுவில் |
| 08.06.99 | சிறில் கெல்லின் நிரேஷ் | குருநகர் |
| 10.06.99 | இராசரத்தினம் சத்தியசீலன் | நல்லூர் |
| 11.06.99 | நாகேஸ்வரி சிவகுமார் | நல்லூர் |
| 11.06.99 | சின்னராசா அந்தோனிராசா | நல்லூர் |
| 11.06.99 | பிரான்சிஸ் செபஸ்தியாம்பிள்ளை | நல்லூர் |
| 13.06.99 | கந்தசாமி கிருபைநாதன் | ஊர்காவற்றுறை |
| 15.06.99 | சின்னத்தம்பி கிருஷ்ணகுமார் | வல்வெட்டித்துறை |
| 15.06.99 | இராசரத்தினம் பஞ்சலிங்கம் | வல்வெட்டித்துறை |
| 15.06.99 | விஜயரத்தினம் விஜகுமார் | வல்வெட்டித்துறை |
| 15.06.99 | த. ராஜ்குமார் | வல்வெட்டித்துறை |
| 15.06.99 | பாலசிங்கம் நிரஞ்சன் | சுண்ணாகம் |
| 19.06.99 | உருத்திரமூர்த்தி பேரின்பமூர்த்தி | சுழிபுரம் |
| 22.06.99 | ஜோசப் அருள்ராஜ் | குருநகர் |
| 22.06.99 | தேவதாஸ் இம்மானுவெல் | குருநகர் |
| 22.06.99 | தேவதாஸ் ரொபின்சன் | குருநகர் |
| 23.06.99 | சிறினிவாசகம் சிவநாதன் | பருத்தித்துறை |
| 24.06.99 | சிவராசா சுதர்ஷன் | வல்வெட்டித் துறை |

# பாக்கியத்தின் பாக்கியம்

அண்மையில் சாவகச்சேரிச் சந்தைக்குள் வியாபாரம் செய்து வந்த ராஜன் என்பவர் ஊடங்கு வேளையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.


மறுநாள் காலையில் இவரது சடலத்தினருகில் இராணுவச் சீருடை (புலிச் சீருடை ஒன்றும் கிரனைட் ஒன்றும் காணப்பட்டதாம்.

மயிலிட்டியைச் சேர்ந்த சிவபாக்கியம் என்பவர் அண்மையில் தனது வீட்டைப் பார்க்க இராணுவத்தினரின் அனுமதியுடன் சென்றிருந்தார்.

வீட்டைப் பார்த்ததும் இவர் மயக்கம் போட்டு விழுந்தார். காரணம் இவரது வீடு இருந்த இடத்தில் ஒரு கற்குவியல் மட்டுமே காணப்பட்டதாம். ஐந்து லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட வீடு. பால் காய்ச்சி ஐந்தாவது நாள் வீட்டை விட்டு வெளிக்கிட்டனர். இன்று வீட்டின் எந்தப் பகுதியுமே காணப்படவில்லையாம். வீடு இருந்த இடத்தை அடையாளம் காணவே அரை மணி நேரம் சென்றதாம்.

சும்மா சொல்லக் கூடாது யாழ்ப்பாண விடுவிப்பு அந்த மாதிரித் தான் இருக்கிறது.

பாக்கியம் செய்த பாக்கியம் அந்தளவு தான்!



## 'பெண்டாட்டி இல்லாட்டி திண்டாட்டம் இல்லை'

சிரித்திரன் பத்திரிகையைப் பற்றி இன்றைய மாணவர்கள் அதிகம் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் மாணவர்களாக இருந்தவர்களில் சிரித்திரன் பத்திரிகையை படிக்காத மாணவர்களே இல்லை என்று சொல்லிவிடலாம்.

சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களது கேலிச்-சித்திரங்கள் நகைச்சுவைத் துணுக்குகள், மகுடி கேள்வி பதில் என்று அவரது எழுத்துக்களாலும் சித்திரங்களாலும் ஆகர்சிக்கப்படாத இளந்தலைமுறையினரை அன்று கண்டிருக்க முடியாது. நகைச்சுவையை மற்றவர் மனதைப் புண்படுத்தவும், வக்கிரங்களை வெளிப்படுத்தவும் மட்டுமே பயன்படுத்தத் தெரிந்த ஒரு உலகில், அதை ஒரு சமூகவிமர்சனமாக வெளிப்படுத்திக் காட்டியவர் அவர்.

மகுடி கேள்வி பதில் பகுதியில் அவர் அளிக்கின்ற விடைகளில் பொதிந்திருக்கும் அர்த்தங்களின் சுருக்கமான ஆனால் சுருகென்று தைக்கின்ற சமூக விமர்சனங்கள் கண்டு வியப்படையாதவர்கள் இல்லை என்று கூறலாம்.

இலங்கைத் தீவு பற்றிய கேள்வி ஒன்றிக்கு அவர் ஒரு முறை அளித்திருந்த பதில் எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது 'சுற்றிவர கடலுள்ள ஒரு நாடு நாம் டின் மீன் இறக்குமதி செய்கிறோம்'

(இது என்றுடைய வசனம். அவரது வசனம் மறந்து விட்டது. ஆனால் அர்த்தம் இது தான்)

ஆம், இலங்கையில் இப்போது தாராளமாக விற்பனையாகிற இறக்குமதிப் பண்டங்களில் ஒன்று டின் மீன்.

பல விதமான 'பிராண்ட்'களில் அடைக்கப்பட்டு விற்பனையாகும் இந்த மீன்களில் பெரும்பாலானவை எமது கடல் பிராந்தி-யத்திலேயே பிடிக்கப்பட்டு, கப்பலில் வைத்தே அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றும் கூறுகிறர்கள் . அந்த விபரம் எனக்குத் தெரியவில்லை.

நான் இவ்வளவும் எழுதுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இப்போது தொலைக்காட்சியில் விளம்பரப் படுத்தப்படும் பிரிமியர் ரின் மீனுக்கான விளம்பரத்தில் இப்படி ஒரு வாசகம் வருகிறது.

'பெண்டாட்டி இல்லாட்டி திண்டாட்டம் இல்லை'

சக்தி எப்.எம் ூில் வேந்தனின் குரலில் ஒலிக்கிற இந்த வாசகத்தைக் கேட்கும் போதெல்லாம் ஒரு-வருக்கு மீன் மீது விருப்பம் வருகிறதோ இல்லையோ நிச்சய-மாக அருவருப்பு வராமல் இருக்கப் போவதில்லை.

இதற்கு முன்பு இப்படி ஒரு விளம்பரம் வந்தது. அது அரலிய ரின் மீனுக்கு. அதில் மனைவி தனது தலையைப் பிய்த்து விட்டதாக ஒரு மொட்டந்தலையர் காட்சி தருவார். பிறகு டின் மீன் வந்த பின் அவரது தலையில் முடி வளர்ந்து விட்டதாகக் காட்டப்படும். இப்போது அவள் முடியைப் பிய்ப்பதில்லையாம்.

இந்த விளம்பரங்கள் என்னத்தைத் தான் சொல்ல முயல்கின்றன.

மனவை ஒரு சமையல்காரி அல்லது ஆவேசக்காரி என்பதையா அல்லது டின்மீன் சமையலுக்கு இலகுவானது என்பதையா?

நகைச்சுவை செய்வதாக நினைத்துக் கொண்டு பெண்களை இழிவு படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் காட்சிகளை காட்டுவதும் தமது வியாபாரத்தைப் பெருக்க உதவுவதாக விளம்பரதாரர்கள் நினைக்கக் கூடும்.

ஆனால், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகையாளர்-களுக்கு விளம்பரப் பணம் கிடைத்தால் மட்டும் போதும் என்று நினைத்த எதை வேண்டுமானாலும் பேசவும் எழுதவும் காட்சிப்படுத்தவும் அனுமதி வழங்குவது சுத்தமான சமூகப் பொறுப்பற்ற தனம் இல்லையா?

தென்னிந்திய கழிசடைப் படங்களையும் அதில் வரும் அருவருப்-பூட்டும் கீழ்த்தரமான (நகைச்சுவைக்காகவாம்!) வார்த்தைப்-பிரயோகங்களையும் காட்டி வியாபாரம் பண்ண விளம்பர தாரர்கள் விரும்பக் கூடும். ஆனால் இந்த அசிங்கங்களை எத்தனை இளம் சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற எந்தப் பொறுப்பும் இவர்களுக்குக் கிடையாதா?

குறிப்பாக சக்தி தொலைக்காட்சிக்கு?

சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்வார்களா?

### ஜப்பானியர்க்குக் கற்றுக் கொடுத்த நம்மவர்கள்

ரெலிக்கொம் ரெலிபோன்களினூடாக தந்திச் செய்திகளை அனுப்ப முடியும் என்று அந்நிறுவனம் தனது பட்டியல் புத்தகத்தில் தெளிவாக எழுதி வைத்திருக்கிறது.

ஆனால் இந்த வசதியை அது தன்னுடைய எல்லா வாடிக்கை-யாளர்களுக்கும் வழங்குவதில்லை போலத் தோன்றுகிறது.

132 அல்லது 133 ஐ சுழற்றி நீங்கள் தொடர்பு கொண்டு தந்திச் செய்தியை அறிவிக்க விரும்பு-வதாகச் சொன்னால், அவர்கள் உங்கள் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு செய்தியைப் பெற்றுக் கொள்வர்கள். இந்த வசதி இரவு 12 மணி வரை வாடிக்கையாளர்-களுக்கு கிடைக்கிறது என்று அவர்களுடன் தொடாபு கொண்ட போது சொன்னார்கள். (ஆனால் அண்மையில் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் தமது தகப்பனாரது மரணச் செய்தியை வெளிநாட்டி-லுள்ள தனது சதோதரிக்கு அறிவிக்க ரெலிக்கொம் மின் உதவியை நாடிய போது, அந்தச் சேவை அவருக்கு வழங்கப்பட முடியாது, என ரெலிக்கொம் வருத்தம் தெரிவித்ததாம்.

அதற்கு அவர்கள் சொன்ன காரணம் தாம் வவுனியா தந்திகளை ஏற்பதில்லை என்பது தான்.

அசராங்கத்தில் தான் பாரபட்சம் என்றால், தனியார் மயமாக்கப்-பட்ட ரெலிக்கொம்மிலும் கூட பிராந்தியப் பாரபட்சங்கள் இருக்கிறதோ?

அல்லது ஒரு வேளை வவுனியா என்றாலே புலிகள் தான் செய்தி அனுப்புகிறார்கள் என்று அது சந்தேகிக்கிறதோ?

ரெலிக்கொம் நிறுவனத்தில் இதுவரை காலமும் அசமந்தப் போக்குத்தான் இருந்தது. இப்போது பாரபட்சமும் கூடச் சேர்ந்து விட்டது. போலும்!

வாடிக்கையாளர்களுக்குள் பாரபட்சம் காட்டும் முதலாவது ஜப்பானிய கூட்டு நிறுவனம் உலகில் இதுவாகத் தான் இருக்க முடியும். நம் நாட்டவர்கள் ஜப்பானியர்கட்கும் கற்றுக் கொடுத்து விட்டார்கள் போலும்!

---

திருத்தம்: இதழ் 175இல் 'பொட்டும் பர்தாவும்' என்ற தலைப்பில் இப்பத்தியில் வெளியாகியிருந்த குறிப்பில் பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தில் நடந்த சம்பவம் தவறுதலாக சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது என்று தவறாகப் குறிப்பிடப்பட்டு விட்டது. இந்தத் தவறு காரணமாக சரஸ்வதி வித்தியாலயத்தின் பெயருக்கும் அதன் ஆசிரியர் மாணவர்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய களங்கத்திற்கு அவர்களிடம் மன்னிப்புக்கோருகிறேன்.


நன்றி - நூலகத்திட்டம்



# இராணுவ நிர்வாகம் Vs புலிகளின் தமிழீழ நிர்வாகம்
## சிக்கித் தவிக்கிறார்கள் மீனவர்கள்

கடந்த சில மாதங்களாக குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலேயே புலிகளின் நடமாட்டமும் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்று வந்தது. வடமராட்சியின் மற்றைய பகுதிகளில் நிசப்தமான அமைதி நிலவியது எனக் கூறமுடியா விட்டாலும் இப்பகுதியில் பெரிய அளவில் புலிகளின் நடவடிக்கைகள் இடம் பெறவில்லை எனலாம்.

பிரிகேடியர் விஜயரட்ன தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் கொல்லப்பட்டதன் பின்னர் இப்பகுதியில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கத் தொடங்கின. திடீர் சோதனை நடவடிக்கைகளும், திடீர் சுற்றி வளைப்புக்களும், பாஸ் நடை முறையும், தீவிர கண்காணிப்பும் நடைமுறைக்கு வந்தன. இதைவிட இராணுவம் சந்தேகமாகக் கருதும் பகுதிகளில் இரவிலும் சோதனை நடத்தத் தொடங்கியது.



தமிழீழ நிர்வாக சேவை
TAMILEELAM ADMINISTRATIVE SERVICE

எனினும், படையினரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு புலிகள் அவ்வப்போது வடமராட்சிப் பகுதிக்குள் ஊடுருவி தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். ஆனாலும், கூடுதலான படையினர் வடமராட்சிப் பகுதிக்குள் நிறுத்தப்பட்டு அப் பகுதியைக் கண்காணித்து வந்தமையால் இப்பகுதியில் நிலை கொண்டு நின்று தாக்குதல் நடத்துவதைப் புலிகள் இயலுமானவரை தவிர்த்து வந்ததாகத் தோன்றியது.

இப்போது படையினரில் ஒரு பகுதியினர் அண்மையில் வன்னி யுத்த முனைக்கு அனுப்பப்பட்டமையால் இப் பிரதேசத்தின் பாதுகாப்பில் ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளதைக் கண்ட கடற்புலிகள் இந்த இடைவெளியைப் பயன்படுத்தி நவீனரக மோட்டார் ஆயுதங்களுடனும் சிறியரக ஆயுதங்களுடனும் வடமராட்சி, பொலிகண்டி பகுதியால் கடல் வழியாக நீந்தி வந்து ஊடுருவியுள்ளதாகவும், ஊடுருவிய கடற்புலிகளில் சிலர் இப்பகுதியில் இருந்த கட்டு மரம் இரண்டை எடுத்துச் சென்று விட்டதாகவும் தெரிய வருகிறது.

வடமராட்சிக்குள் ஊடுருவிய கடற்புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்குமென்பது பற்றி படைத்துறையினர் மத்தியில் தற்போது கேள்வி எழும்பியுள்ளது. இதனால் எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொள்ளும் நிலைக்கு படையினர் தம்மை தயார் படுத்த வேண்டியவர்களாகவுள்ளனர்.

தொண்டமானாறிலிருந்து சுப்பர் மடம் வரையான பிரதேசங்களில் உள்ள மீனவர்களை ஒரு நாளுக்கு இருவர்வீதம் கடற்கரையோரக் காவலில் ஈடுபட்டு கட்டுமரங்களைப் புலிகள் கடத்தாதபடி பார்க்குமாறும் அது முடியாவிட்டால் கட்டுமரங்களை தமது இராணுவ முகாம்களில் கொண்டு வந்து இறக்குமாறும் படையினர் பணித்துள்ளனர்.

மீனவர் சங்க பிரதிநிதிகள் வல்வெட்டித்துறை இராணுவ முகாம் படையதிகாரியைச் சந்தித்து இந்தக் காவல் கடமையில் தங்களுக்கு உள்ள சிரமங்களை எடுத்துக் கூறிய போதும் 'வடமராட்சிக்குள் ஊடுருவியுள்ள புலிகள் கட்டுமரங்களைப் பாவித்து கடற்படைப் படகுகள் மீதும் உணவுக் கப்பல்கள் மீதும் தற்கொலைத் தாக்குதலை நடத்தக்கூடும். எனவே பொது மக்களது சொத்தையும், அரச சொத்தையும் பாதுகாக்கவே நாம் இந்த நடைமுறையைக் கொண்டு வருகிறோம். நீங்கள் அனைவரும் எமக்கு ஒத்துழையுங்கள் என்று கூறியுள்ளார்.

இதனால் மீனவர்கள் தொடர்ந்து விரும்பியோ, விரும்பாமலோ காவற்கடமையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பொது மக்களை கேடயமாகப் பாவிக்கும் இந்நடவடிக்கையைக் கண்டிப்பதற்கோ, அவர்களுடைய உயிருடன் விளையாடும் இந்நடவடிக்கையை எதிர்ப்பதற்கோ எந்தக் கட்சிகளோ அமைப்புக்களோ இன்று வரை முன்வரவில்லை.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாக சேவையின் வடமராட்சிப் பொறுப்பாளரின் கையெழுத்துடன் ஒரு கடிதம் வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் "விடுதலைக்காகப் போராடும் எமது இனத்தை ஒடுக்க எமது மக்களையே கேடயமாகப் பயன்படுத்தும் இராணுவத்தினரின் செயற்பாடுகளில் ஒன்றாக அண்மையில் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் அனைவரையும் இராணுவத்தினருடன் சேர்ந்து காவற்கடமையில் ஈடுபடுமாறு வடமராட்சி வல்வெட் டித்துறை படையதிகாரி வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு அறிவித்தல் விடுத்துள்ளார். ஆனால், எக்காரணம் கொண்டும் தங்களது சமாசத்திற்குட்பட்ட சங்கங்களின் எந்த உறுப்பினர்களையும் படையினரின் இவ்வித நடவடிக்கைகளுக்கு துணைபோக அனுமதிக்க வேண்டாம் எனவும், மீறின் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்றும், இதனைச் சங்கங்களுக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வடமராட்சிப் பொறுப்பாளர் செ. பைந்தமிழன் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளார்.

இதிலிருந்து படையினரின் இராணுவ நிர்வாகத்தில் புலிகள் தலையிட்டு தமது நிர்வாக நடவடிக்கைகளை வடமராட்சியில் விரிவு படுத்தி வருகின்றனர் என்பது புலனாகிறது.

இவ்வாறு இருபகுதியினரும் தமது நிலைப்பாடுகளில் இறுக்கமாக இருப்பதனால் மீனவர்கள் முதற் கட்டமாக என்ன செய்யலாம் என சிந்திக்கக்கூட முடியாத நிலையில் உள்ளனர். எனினும், மீனவர்கள் புலிகளின் கடிதம் காரணமாக, அவர்களது அறிவித்தலை மீறாது காவற்கடமையில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளனர்.


இந்நிலையில் படைத்துறை எடுக்கப் போகும் அடுத்த நடவடிக்கை என்ன? என்பதே இங்குள்ள மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ள பிரதான கேள்வியாகும்.

படைத்துறை இறுக்கமான நிலைப்பாடு ஒன்றை எடுக்குமானால் மக்கள் மனங்களை வெல்லவேண்டும் என்ற படையினரின் அண்மைக்காலக் கோட்பாடு முற்றாகச் சரியும், தற்போது கூட மக்கள் மனங்களை வெல்ல முடியாது படையினர் திண்டாடுகின்றனர். எனவே படையினர் தொடர்ந்தும் இறுக்கமான ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடித்து வெறுப்பை சம்பாதிப்பரா அல்லது மௌனம் காப்பரா என்பது இப்போதுள்ள கேள்வி.

இதேவேளை வடமராட்சி பகுதியிலும், வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் சமூர்த்தித் திட்டம் இராணுவச் சிபாரிசுடனும் இராணுவ அங்கீகாரத்துடனுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இது இராணுவ நலன் கருதும் ஒரு செயற்பாடு என அண்மைக் காலமாகப் பலரால் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இராணுவத்தினரால் வடமராட்சிப் பகுதியில் சமூர்த்தி நியமனம் தகைமை அடிப்படையைத் தாண்டி செல்வாக்கு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக பரவலாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் உண்மையான தகைமையுள்ளோர் பாதிப்படைந்துள்ளனர் என்ற குரல்களும் எழுந்துள்ளன.



தமிழீழ நிர்வாக சேவை
TAMILEELAM ADMINISTRATIVE SERVICE

அதேநடை முறையின்படி வடமராட்சி கிழக்கிலும் சமூர்த்தி ஆள் அணியினரை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இங்கு நேர்முகப்பரீட்சை நடாத்துவதே இராணுவம் தான். இந்த நடைமுறை எப்படியோ புலிகளின் காதுக்கும் எட்டியுள்ளது. இதனை அடுத்து தமிழீழ நிர்வாக சேவையின் வடமராட்சிப் பிரிவினர் மருதங்கேணி உதவி அரச அதிபருக்கும், கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரச அதிபர்களுக்கும் சமூர்த்தித் திட்டம் இராணுவ நோக்கம் கொண்டது என்றும்,ஆகவே அவ்விராணுவ நோக்கம் நிறைவு செய்யப்படத் துணை போக வேண்டாம் என்றும் கடிதம் அனுப்பியிருந்தனர்.

தற்போது இறுதியாக மருதங்கேணி உதவி அரச அதிபருக்கு தமிழீழ நிர்வாக சேவையின் வடமராட்சி பிரிவினர் அனுப்பியுள்ள கடிதத்தில், "தங்களது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூர்த்தித் திட்டத்திற்கான நேர்முகப் பரீட்சைகளை உடன் இடைநிறுத்துவதுடன் எமது மறு அறிவித்தல் வரை தங்களது பிரதேசத்தில் சமூர்த்தித் திட்ட நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவேண்டாம் என்பதை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். மீறி இந்நடவடிக்கையினைத் தொடரின் மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்க நேரிடும் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் அனைத்தும் இராணுவ தரப்பிற்கு சவால் விடும் விதத்திலும் இராணுவ நிர்வாகம் இங்கு இயங்க அனுமதியோம் என்ற தொனியிலுமே புலிகள் செயற்பட்டு வருவதை எடுத்துக் காட்டுகிளன்றன.

குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்திற்குள் ஊடுருவியுள்ள புலிகள் நிர்வாக ரீதியாக மட்டும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நிறுத்திக் கொள்வார்களா? அல்லது வடமராட்சிப் பிரதேசத்தில் தமது தாக்குதல் நடவடிக்கைகள் விரிவுபடுத்துவார்களா என்பது புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மூலம் தான் தெரிய வரும். தாக்குதல் நடத்தும் நோக்கம் இல்லையெனில் கடற்புலிகள் ஊடுருவியதன் மர்மம் என்ன? தாக்குதலுக்கான முயற்சியா, அல்லது தயார்படுத்துலுக்கான திட்டம் தீட்டப்படுகிறதா?

புலிகள் யாழ்ப்பாணத்தை விடுவிக்க வடமராட்சியிலிருந்தா தமது நடவடிக்கையை ஆரம்பிக்கப்போகிறார்கள்.?

இவை நம்முன் எழும் கேள்விகள்.

வில்வம் -வடமர்ராட்சி



நன்றி - நூலகத்திட்டம்



## இந்தியத் தேர்தல்:

# இந்துத்துவம் வாக்குப் பெட்டிகளை நிரப்புமா?

இந்தியாவில் 13வது பாராளுமன்றத்துக்கான தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டு விட்டன. செப்ரம்பர் 4ம் திகதி ஆரம்பமாகும் தேர்தல் தொடர்ந்து 11, 17, 24 ம் திகதிகளிலும் நடைபெற்று ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெறும் இறுதித் தேர்தலுடன் முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும், பிரச்சார வேலைகளிலும் கூட்டணி அமைப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. பா.ஜ.க தலைமையில் ஒரு அணியும், காங்கிரஸ் தலைமையில் இன்னோர் அணியும் களத்தில் இறங்குவதற்கான சமிக்ஞைகள் முன்னரேயே தென்படத் தொடங்கியிருந்தன. தற்போது சரத் பவார் தலைமையில் மூன்றாவது அணியொன்றும் போட்டியிடுவதற்கான



தகவல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இத் தேர்தலில் இந்து அடிப்படைவாத சக்திகளின் நிலை எவ்வாறு இருக்கும்? இந்து அடிப்படை வாதத்தின் வளர்ச்சிப் படியில் இத்தேர்தல் ஒரு மைல் கல்லாக அமையுமா? இந்து அடிப்படைவாதத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்? போன்ற கேள்விகள் எல்லாம் அரசியலாளர்கள் மத்தியில் விஸ்வரூபமாக எழுந்துள்ளன.

இப்பிரச்சினையை மதிப்பிட்டு எதிர்வு கூறல்களைக் கூறுவதற்கு தவிர்க்க முடியாமல் இந்து அடிப்படை வாதத்தின் தோற்றம், அது வளர்ந்து வந்த விதம், அதன் வளர்ச்சியை ஊக்குவித்த காரணிகள், காலத்துக்குக் காலம் இந்து அடிப்படைவாத சக்திகள் பயன்படுத்திய வியூகங்கள் என்பவற்றையெல்லாம் பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது.

### இந்து அடிப்படை வாதத்தின் தோற்றம்

இந்து மதத்தினை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகள் 19ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்து விட்டன. ஆனால் ஆரம்பத்தில் தோன்றிய சிந்தனைகள் இந்து மதத்தில் உள்ள பிற்போக்கான அம்சங்களை சீர்த்திருத்துவதிலேயே கவனம் செலுத்தியிருந்தது. அரசியற் செயற்பாடுகளுடன் அவற்றை இணைக்கும் முயற்சிகள் அவ்வளவாக மேற்கொள்ளப்படவில்லை.

ராஜராம் மோகன் ராஜால் உருவாக்கப்பட்ட பிரம்மசமாஜம் அதனைத் தொடர்ந்து வந்த ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணரின் கருத்துக்களைப் பரப்பும் இராமகிருஷ்ண மடங்கள் போன்ற நிறுவனங்கள் சீர்திருத்தப் பணிகளிலேயே அதிகளவில் ஈடுபட்டு இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க பிரம்ம சமாஜம் இந்துக்களின் பாரம்பரிய வழக்கமான உடன்கட்டை ஏறுதலுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது. சிறிய வயதில் தாயை இழந்து அண்ணியின் அரவணைப்பில் வாழ்ந்த ராஜராம் மோகன்ராஜ் தனது 11வது வயதில் அண்ணன் மாரடைப்பால் மரணமாக, அண்ணியை உயிருடன் சிதையில் தள்ளுவதை நேரடியாகப் பார்த்தான். பாரம்பரியம் எதுவும் அறியாத சிறுவன் கத்திக் கொண்டு அண்ணியைக் காப்பாற்ற முனைந்த போது தனது தந்தையாலும் உறவினராலும் தடுக்கப்பட்டான். தன்னைத் தடுத்த தந்தை எரியும் விறகுக்கட்டையால் அண்ணியின் தலையில் அடித்து சிதைக்குள் தள்ளுவதை நேரடியாகவே கண்டான். அன்று தான் இதற்கு எதிராக போராடி முடிவு கட்ட வேண்டும் என நினைத்து வீட்டை விட்டு வெளியேறி பீகாரின் தலைநகரான பாட்னாவுக்கு சென்று பிரம்ம சமாஜம் எனும் அமைப்பை உருவாக்கினான். அதன் மூலம் உடன் கட்டை ஏறுதல் என்னும் வழக்கத்திற்கு முடிவு கட்டினான். உடன் கட்டை ஏறல் வழக்கம் 1829 தொடக்கம் சட்ட ரீதியாக நிறுத்தப்பட்டது.

அரசியல் தன்மை கொண்ட இந்துமத இயங்கங்கள் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே உருவாகின. 1906 இல் முஸ்லீம் மக்களுக்கான தனியான அமைப்பாக முஸ்லீம் லீக்கை முஸ்லீம்களின் தலைவரான ஜின்னா ஆரம்பித்ததைத் தொடர்ந்து, முஸ்லீம் அரசியல் முனைப்பு பெறத் தொடங்கியது. இதன் எதிர்ப்பு நிலையிலேயே இந்து மத சிந்தனைகளைத் தாங்கி இந்து மத அடிப்படை இயக்கங்கள் உருவாகின. 1920 களின் ஆரம்பத்தில் நடைபெற்ற இந்து-முஸ்லீம் கலவரங்கள் இவ்வாறான அமைப்புக்கள் தோன்றுவதை ஊக்குவித்திருந்தன.

இந்த வகையிலேயே இந்து அடிப்படை வாதத்தின் அச்சாணி எனக் கூறப்படும் "இராஷ்ரிய சுயம் சேவக் சங் (R.S.S)" எனும் இயக்கம் 1925ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ம் திகதி விஜயதசமி நாளன்று மகாராஸ்டிரத்தில் தோற்றுவிக்கப்பட்டது. 1947இல் "ஆர்கனைசர்" எனும் ஆங்கில ஏட்டையும் தொடக்கியது. (இன்று இது பா.ஜ.க அதிகார பூர்வ ஏடாக உள்ளது.) பின்னர் வட மாநிலங்களில் தமது பிரச்சாரங்களை மேற்கொள்வதற்காக "பஞ்ச்சஜன்யா" எனும் இந்தி வார ஏட்டையும் நடாத்தியது.

சமூகத்தின் பல்வேறு தளங்களையும் ஊடுருவதற்காக "பாரதீய வித்யார்த்தி பரிஸத்" (மாணவர் அமைப்பு), விஸ்வ இந்து பரிஸத், (இந்துத்துவ அரசியலை மத அடையாளங்களுடன் முன்னெடுக்கும் அமைப்பு) பஜ்ரங்தள் (ஆயுத அமைப்பு), வனவாசிகல்யாண்ஆசிரமம் (ஆதிவாசிகள் மத்தியில் பிராமணிய வழக்கங்களை பரப்பும் அமைப்பு), "ராஷ்டிரா சேவிகா சமிதி" (பெண்கள் பிரிவு), "பாரதீய மஸ்தூர்சங்" (தொழிலாளர் அமைப்பு), சரஸ்வதி ஷிசு மந்திர் (கல்வி அமைப்பு) போன்ற கிளை நிறுவனங்களையும் உருவாக்கி செயற்படுகின்றது. பல அறக்கட்டளைகளை உருவாக்கி செயற்படுவதுடன் சுமார் 1500 வரையிலான பாடசாலைகளையும் உருவாக்கி நடாத்துகின்றது. அங்கு கற்கும் மாணவர்கள் சிறு வயதிலிருந்தே இந்து அடிப்படைவாத சிந்தனைகளுக்கு பழக்கப்படுத்தப் படுகின்றார்கள். இந் நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்தே சங்கபரிவார் என அழைக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு அரசியல் அமுக்கக் குழுவாகவே செயற்பட விரும்பிய R.S.S இயக்கம் தனக்கென ஒரு அரசியற் கட்சியை உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்தவில்லை. மாறாக, இந்திய தேசிய காங்கிரசிற்குள்ளும், அரச நிர்வாக இயந்திரத்திற்குள்ளும் தமது உறுப்பினர்களை அனுப்பி அவற்றைத் தமது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கவே விரும்பியது. இது தனது நோக்கத்தை நிறை வேற்றப் போதுமானதல்ல எனக்கருதிய போதே பகிரங்க அரசியல் தளத்தில் தமது அரசியற் கருத்தை முன்னெடுக்கும் அரசியற் கட்சியை உருவாக்க முன் வந்தது.

### அரசியற் கட்சி உருவாக்கம்

1951ம் ஆண்டு ஒக்டோபர் 5ம் திகதி இந்து அடிப்படை வாதத்தினை முன்னெடுக்கும் முதல் அரசியற் கட்சியான பாரதீய ஜன சங்கம் R.S.S இயக்கத்தின் பிரதான உறுப்பினரான "சியாம் பிரசாத் முகர்ஜி" தலைமையில் உருவாக்கப்பட்டது. தற்போதைய பிரதமரான வாஜ்பாய் அதன் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

இந்து மத வாதக் கட்சி ஒன்று உருவாக்கப்பட்ட போதும், இந்திய தேசிய காங்கிரசின் அலைக்கு முன்னாலும் இடது சாரிக்கட்சிகளின் பலத்திற்கு முன்னாலும் அதனால் நின்று பிடிக்க முடியவில்லை. சுதந்திரத்தோடு பாகிஸ்தான் உருவாகி இந்து - முஸ்லீம் பிரச்சினை ஓரளவு தணிந்ததால் வட மாநிலங்களில் அதைக் காட்டி இக்கட்சியால் முன்னேறவும் முடியவில்லை. இக்கட்சி உருவான 1951 இலிருந்து 1977 வரை 3% தொடக்கம் 9% வரையான வாக்குகளை மட்டும் பெற்றிருந்தமை இதன் வளர்ச்சியின்மையைக் காட்டியது.

1977 இல் ஜனதா கட்சி உருவான போது பாரதீய ஜனசங்கம் தனது கட்சியைக் கலைத்து விட்டு ஜனதா கட்சியுடன் சேர்ந்து கொண்டது. ஜனதாக் கட்சி காங்கிரசை தோற்கடித்து அரசாங்கத்தை அமைத்த போது அதன் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் அமைச்சராகவும் பதவி ஏற்றார். எனினும் இரண்டு வருடங்களுடன் ஜனதா கட்சி அரசாங்கம் கவிழ்ந்த போது ஜனதா கட்சி உடனான இவர்களின் உறவிலும் விரிசல் ஏற்பட்டது. இவர்களில் பலர் R.S.S. இயக்கத்திலும், ஜனதாக் கட்சியிலுமாக இரட்டை உறுப்புரிமையுடன் செயற்படுவதை ஜனதா தலைமை விரும்பவில்லை. இதனால் இவர்கள் கட்சியை விட்டு வெளியேறினர்.

### பாரதீய ஜனதா கட்சியின் தோற்றம்


ஜனதாக் கட்சியை விட்டு வெளியேறியவர்கள் 1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி அத்வானி தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சியைத் தோற்றுவித்தனர்.

1984ம் ஆண்டு இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டதால் ஏற்பட்ட அனுதாப அலையும், ஜனதா ஆட்சி தொடர்பான மக்களின் கசப்பான உணர்வுகளும், 1984 இல் தேர்தலில் இவர்களை காலூன்ற விடவில்லை. இத் தேர்தலில் 7.7 வீத வாக்குகளை மட்டும் பெற்று 2 ஆசனங்களை இக்கட்சி கைப்பற்றியது. இக்காலத்திலேயே மகராஸ்டிரத்தில் வளர்ந்திருந்த சிவசேனையுடன் கூட்டுச் சேர்ந்தது.

### வியூகங்கள் மாற்றம்

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து வியூகங்கள் மாற்றப்பட்டன. மறைமுகமாக R.S.S. உம் துணை அமைப்புகளும் இந்துமத உணர்வுகளை வெளிக்காட்டும் நிலை மாறி பாரதீய ஜனதாவே நேரடியாக இந்துமத உணர்வை துாண்டும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டன. இதற்கு உதவியாக R.S.S. கிளை அமைப்புக்கள் அனைத்தும் களத்தில் இறக்கி விடப்பட்டன. அயோத்தி பாபர் மசூதி பிரச்சினை ஒரு உணர்வு பூர்வமான பிரச்சினையாக கிளறி விடப்பட்டது. கலை, இலக்கியம், அறிவியல், தொடர்பு சாதனங்கள் எங்கும் சங்கபரிவார்கள் ஊடுருவி இந்துத்துவ அரசியலை நோக்கி மக்களைத் தள்ள முயற்சி செய்தனர்.

1989 தேர்தல் வந்த போது காங்கிரசில் இருந்து வெளியேறி வந்த வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளத்துடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டது. தேர்தலில் 11.5 வீதமான வாக்குகளைப் பெற்றதோடு 86 ஆசனங்களையும் முதன் முறையாக கைப்பற்றிக் கொண்டது. இவ்வெற்றியினால் வட மாநிலங்களில் கட்சி ஓகோ என வளரும் போக்கு தொடங்கியது. தொடர்ந்து வந்த சட்டசபைத் தேர்தல்களில் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம்,



ராஜஸ்தான் மாநிலங்களின் ஆட்சியையும் கைப்பற்றியது. இவ்வெற்றி கட்சியும் சங்க பரிவார்களும் இம் மாநிலங்களில் ஆழக் கால் ஊன்றுவதற்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கியது.

1990 ஒகஸ்ட் 7இல் மண்டல் கமிஷன் சிபார்சுகளை அரசு அமுலாக்க முன் வந்த போது உயர்சாதியினர் பக்கம் நின்று அதனை எதிர்த்தது. இதன் மூலம் உயர்சாதியினரின் ஆதரவை பெருமளவில் தம் பக்கம் இழுப்பதில் வெற்றி கண்டது.

1990 செப்ரம்பர் 25இல் பாரதீய ஜனதா தலைவர் அத்வானி பாபர் மசூதியில் இராமர் கோவில் கட்டுவதற்காக இரத யாத்திரையை ஆரம்பித்தார். ஒக்டோபர் 24இல் அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசுக்கு கொடுத்த ஆதரவை பா.ஜ.க நீக்கியது. வி.பி.சிங் அரசு கவிழ்ந்தது. பெரும் எடுப்பில் ரதயாத்திரையை மேற்கொண்டதன் மூலம் இந்து மக்களைக் காப்பாற்றும் ஒரே சக்தி தான் தான் என்ற பிரதிமையை மக்கள் மத்தியில் வளர்த்தது. "பாபர் மசூதியை தகர்த்து அவ் இடத்தில் இராமர் கோவிலை அமைப்போம்" என அது சூளுரைத்தது.

1991ம் ஆண்டு தேர்தலில் அதன் வளர்ச்சி நிலை தெளிவாகத் தெரிந்தது. இதில் 20.9 வீதமான வாக்குகளைப் பெற்று 119 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. எதிர்கட்சித் தலைமைப் பொறுப்பும் இதனிடம் வந்து சேர்ந்தது. அத்வானி எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி தேர்தல் பிரச்சாரத்தில் குறிப்பிட்டபடி பா.ஜ.கட்சி சங்க பரிவார்களின் துணையுடன் பாபர் மசூதியைத் தகர்த்தது. இதன் மூலம் தனக்குள்ள இந்துமத வெறியின் கோரத்தை உலகெல்லாம் பறை சாற்றியது.

பாபர் மசூதி தகர்ப்பின் பின்னர் ஒன்றை மாத்திரம் அது வெகுவாக உணர்ந்தது. தனித்து உயர் சாதியினரதும், நடுத்தர வர்க்கத்தினரதும் ஆதரவு மட்டும் தனக்கு போதாது. பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துக்கள் போன்றவர்களின் ஆதரவும் பெறப்பட வேண்டும் என உணர்ந்தது. சங்க பரிவார்கள் இவர்கள் மத்தியிலும் வேலை செய்வதற்கு பணிக்கப்பட்டார்கள். இந்து மத சிந்தனைகள் இவர்களுக்கு ஏற்றதாகவும் விரிவாக்கப்பட்டது. புராணக் கதைகளுக்குள் உத்தரப் பிரதேசத்தின் கபீர், பீகாரின் ராஜ்தாஸ், கேரளாவின் அய்யன்காளி போன்ற பெயர்களையும் சேர்த்துக் கொண்டனர்.

இவ்வாறான சில விரிவாக்கங்களைச் செய்த போதும் 1996 தேர்தலில் அதற்கு தனித்து பெரும்பான்மை பெறக் கூடிய வெற்றி கிடைக்கவில்லை. இத் தேர்தலில் ஆசன எண்ணிக்கையை 161 ஆக உயர்த்திய போதும் 20.3 வீத வாக்குகளையே பெற்றிருந்தது. அதி கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற வகையில் ஆட்சியை அமைத்த போதும் ஏனைய கட்சிகள் எதிர்த்து வாக்களித்ததால் 12 நாட்களுக்குள் பரிதாபமாக ஆட்சி கவிழ்ந்தது.

### 1998 தேர்தலும் வியூகங்களில் மாற்றமும்

1998 தேர்தலில் ஆட்சி அமைக்கக் கூடிய வகையில் வியூகங்கள் மாற்றப்பட்டன. பல்வேறு மாநிலங்களிலும் காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளுடன் கூட்டணிகள் அமைக்கப்பட்டன. தான் மிகவும் பலமாகவுள்ள வடமாநிலங்களில் தனது மேலாதிக்கத்தின் கீழும் ஏனைய மாநிலங்களில் அந்தந்த மாநிலங்களில் செல்வாக்குள்ள மாநிலக் கட்சிகளுடனும் கூட்டணிகளை அமைத்துக் கொண்டது. பிற்படுத்தப்பட்ட மக்களின் கட்சிகள், தலித் மக்களின் கட்சிகளுடனும் கூட்டணிகள் அமைக்கப்பட்டன. இந்த வகையில் வட மாநிலங்களில் சமதாக் கட்சியுடனும் பஞ்சாப்பில் அகாலிதள்ளுடனும், ஒரிசாவில் பிஜு ஜனதாதள்ளுடனும், மகாராஸ்டிரத்தில் சிவசேனையுடனும், ஹரியானாவில் ஹரியானா லோக்தள்ளுடனும், கர்நாடகத்தில் லோக் சக்தியுடனும், மேற்கு வங்காளத்தில் திரீணாமூல் காங்கிரசுடனும், தமிழ் நாட்டில் அ.தி.மு.க கூட்டணியுடனும் கூட்டணி வைத்துக் கொண்டது. இக்கூட்டணி தென்மாநிலங்களில் அதன் விரிவாக்கத்திற்கும், காலூன்றுவதற்கும் வழிகளை உருவாக்கிக் கொடுத்தது. தேர்தலில் பா.ஜ.க தனித்து 25.6 வீத வாக்குகளை பெற்று 182 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. பா.ஜ.க கூட்டணி 37.2 வீத வாக்க்களைப் பெற்று 252 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. தேர்தலின் பின்னர் தெலுங்கு தேசம் உட்பட வேறு சிறிய கட்சிகளின் ஆதரவையும் பெற்று 277 ஆசனங்களுடன் ஆட்சியை அமைத்தது. ஒரு வருடத்தின் முடிவில் அ.தி.மு.க ஆதரவை வாபஸ் பெற்றதால் 1 ஆசன வித்தியாசத்தில் தோல்வி அடைந்து ஆட்சியையும் பறிகொடுத்தது.

### வரும் தேர்தலில் இதன் நிலை எவ்வாற இருக்கும்

வரும் தேர்தலில் பா.ஜ.க கூட்டணி உறுதியாக இருப்பதாலும், சரத்பவார் கோஷ்டியின் வெளியேற்றத்தினால் காங்கிரஸ் பலவீனமுற்றிருப்பதாலும் அனுதாப அலை, கார்கில் போரின்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# ராஜ துரோகிகள் ஒழிக!
# ஜனாதிபதி படை வீரர்கள் வாழ்க!!
# வாழ்க சந்திரிகா நாமம்!!!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக இருப்பதில் எள்ளளவேனும் விருப்பமில்லாதவரும், எளிமையும், மக்கள் சேவை மனோபாவத்தை மட்டும் கொண்டவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க



அவர்கள் இப்பதவிக்கு நிர்ப்பந்தம் காரணமாக முடிசூட்டிக் கொண்டு ஐந்தாண்டு காலம் ஓடிவிட்டதைக் கொண்டாடுவதற்காக, அந்தப் பதவியைக் கட்டிக்காத்து அதன் அதிகாரங்களையெல்லாம் உயர்ந்த பட்ச அளவுக்குப் பயன்படுத்தி நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சாவீடு கொண்டாட வழிவகுத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் நிகழும் பிரயாதி வருடம் ஆனி மாதம் முப்பதாம் நாள் இங்கிலிசு ஆண்டு




ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது யூலை 15ம் தேதி கொழும்பு நகரமண்டப அருகாமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்த திட்டமிட்டிருந்ததும், அன்றைய தினம், சனாதிபதி மாளிகையில் இருப்பதும், அதை அலுவலகமாகப் பயன்படுத்துவதும், அந்தப் பதவியை கிஞ்சித்தும் விரும்பாதவரும், அதை இல்லாதொழிப்பதற்காகவே அந்த ஒரே நோக்கத்துக்காகவே அப்பதவியை ஏற்றவருமான மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களது கொள்கை கோட்பாடு மற்றும் நடவடிக்கைகட்கு ஒவ்வாது என்ற காரணத்தால், அந்த மாளிகைச் சுகத்தை தூக்கியெறிந்து விட்டு, தான் பிறந்த வளர்ந்த குடிசையான அலரிமாளிகையினை தனது அலுவலகமாக மாற்றிக் கொண்ட பெருந்தன்மை மிக்கவருமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க அவர்களது பாதுகாப்புப் படைப்பிரிவினர், அங்கு வந்த ஐ.தே.க. ஆட்களை அடித்தும் உதைத்தும் படம்பிக்க வந்த பத்திரிகைக் காரர்களது படம் பிடிக்கும் கமெராக்களை உடைத்தும், படச்சுள்களை உருவி எறிந்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எய்தும் தம் வீரசாகசங்களை காட்டியதையும், அந்தச் செய்திகளையெல்லாம் திரித்தும், இராசவிசுவாசம் அற்ற இராசத் துரோகிகளான ரூபவாஹினி, இலங்கை வானொலி மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் எல்லாம், இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளின் மீது ஐ.தே.க குண்டர்கள் தாக்க முயன்றதாகவும், அவர்கள் தமக்குள் சண்டையிட்டதாகவும் அறிவித்து அரசாங்கத்தின் பெருமைக்குப் பங்கம் தேடித் தந்ததையும் வாசகர்கள் அறிந்திருத்தல் கூடும்.

ஆயினும், ஆர்ப்பாட்டம் செய்ய நினைத்த ஐ.தே.ககாரர்கள், ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கப் போவதாக கூறிய ஜனாதிபதி அவர்கள் இன்றை வரை அதை ஒழிக்காமல் ஐந்து வருடங்கட்குக் முன்பாக சூட்டப்பட்ட முடியை இன்னமும் கழற்றிக் கொள்ளாமல் இருப்பதைக் காரணம் காட்டியே அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ய வந்தார்கள் என்பதை முற்றுமுழுதாக நம்புவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதால், இதற்கான காரணம் என்னவாக இருக்கலாம் என்று சிந்திக்கத்தவறியதும் சிந்திக்கத் தெரிந்தோர் கடமை என்று ஆங்கில மொழி ஏரிக்கரை வாரப் பத்திரிகையில் ஒருவர் எழுதியதையும் கூட முழுக்க முழுக்க மறுக்க முடியாதுள்ளதும் உண்மை தான். இதற்கு காரணம் என்னவோவெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மண்கவ்வும் வரை, ஒரு மாமாங்க காலத்துக்கு மேலாக இப்பதவியை தொடாந்து பேணிவந்தவர்களான ஐ.தே.கவினர், கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்த கடைசி ஜனாதிபதியான விஜேதுங்கவின் விட்டுக் கொடுக்கும் போக்கை விமர்சித்தவர்களும், அவரை அப்பதவியில் இருக்க விடாமல் வெளியேற்றிவர்களும் அவருக்கு முன்னைய ஜனாதிபதிகள் எல்லோரும் செய்தது போல ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்குவதையும் தவிர மற்றெல்லாவற்றையும் செய்யக் கூடிய ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்தாமல் இருந்து விட்டார் என்று ஐ.தே.கவினர் திடீரென அந்த அதிகாரத்தின் மீது பொறுப்புக் கொண்டு புலாலுண்ணாமை பற்றி போதிக்க வந்த கிழட்டுப் புலியின் செயல் போன்ற ஒரு நடவடிக்கையாக இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்த முயன்றார்கள் என்றால் அது ஏன் என்று கேட்காமல் இருக்க முடியாது.

சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதில் இன்றைய ஜனாதிபதிக்கு சற்றும் குறைவில்லாத விதத்தில் செய்ற்பட்ட அவர்கள் இப்போது திடீரென அதை எதிர்ப்பதற்கு காரணமே தமது இழந்து போன செல்வாக்கை மீளப்பெற இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதை தவிர வேறொன்றும் இல்லை என்றும், அடுத்த வருடம் வரப்போகும் தேர்தலுக்காக இப்போதே தயாரிப்பில் ஈடுபட எத்தனிக்கிறார்கள் என்றும் இதுபற்றி விபரமறிந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் அப்படி கத்தினால் கத்தி விட்டுப் போகட்டும் என்று இராமல் அதைக் குழப்பத்திட்டமிட்டு ஆட்களை அனுப்பியதும், ஜனாதிபதியின் பாதுகாப்பு படைப் பிரிவினரை சிவிலுடையில் அங்கு அதற்காகவே அனுப்பி வைத்ததும் அரசாங்கத்தினதும் மாண்பு மிகு ஜனாதிபதியின் பெருமைக்கு இழுக்குத்தரும் விடயங்கள் என்று தெரிந்தும் ஏன் செய்தார்கள் என்று நம்பமுடியவில்லை என்று ஒரு சிலர் அங்கலாய்க்கிறார்கள். இதிலுள்ள உண்மையைத் தெரிந்து தானோ



என்னவோ அப்படி ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அங்கு வரவில்லை என்றும், சண்டை நடந்ததெல்லாம் ஐ.தே.க. குண்டர்களுக்கு இடையிலான சண்டையே என்றும் தகவல் தொடர்புக்கான மந்திரி மங்கள சமரவீரனாரும் அவர் அதிகாரத்தின் கீழ் இயங்கும் தொடர்பு சாதனவியலாளர்களும் கூறுகின்றார்கள் போலும். அப்படியானால் எதற்காக அங்கு வந்தவர்கள் பத்திரிகையாளர்களது புகைப் படச்சுருள்களைப் பிடுங்கினார்கள் என்ற கேள்வியும், ஒரு



பத்திரிகையாளர் சொன்னது போல தம்மை தேடித்தேடி தாக்கியது ஏன் என்ற கேள்வியும் எழுவது தவிர்க்க முடியாமல் உள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு படையினர் சிவில் உடையில் பொதுமக்கள் போல கூட்டத்தோடு கூட்டமாக வந்திருந்ததை படமெடுத்தால் அவை பிறகு தெரியவந்து விடும் என்பதற்காகவே அவை பிடுங்கப்பட்டன. அவர்களை இனங்காணக் கூடிய பத்திரிகையாளர்களே தேடித் தேடித் தாக்கப்பட்டனர் என்பது ஒரு இடைத் தகவலாகத் தெரியவருகிறது.

ஆக, அரசாங்கத்தின் பெருமையை மாசுபடுத்தும் இராசத் துரோக செயலை ஏரிக்கரைப் பத்திரிகைகளும் வானொலியும், ரூபவாஹினியும் செய்ததாக சொல்ல முடியாது. அவர்கள் இராச விசுவாசத்துடன் நடந்து கொண்டுள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

எது எப்படியோ, பத்திரிகையாளர்களைக் குறிவைத்துத் தாக்கும் வீரச் செயலில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படையினர் பங்கு கொண்டிருப்பதை மறுக்க எத்தனிப்பதை ராஜத்துரோகம் என்று சொல்ல வேண்டும் என்றே தோன்றுகிறது. அவர் வல்லமை பெற்ற அதிகாரம் கொண்ட அந்தப் பதவியை இல்லாதொழிக்குமாறு கோரும் கபடத் தனமான கோரிக்கைக்கு பிரச்சாரம் செய்யப் புறப்பட்ட பத்திரிகைக்காரர்களுக்குத் தண்டனை வழங்கும் கடமையை ஆற்றிய அந்த வீரர்களுக்கு வெகுமதி மற்றும் பாராட்டு விழாக்கள் நடாத்த வேண்டிய நிலையில் அதை மறைப்பதும் எதிர்ப்பதும் எந்த விதத்தில் நியாமானது என்று கொஞ்சமும் விளங்கவில்லை.

பதவி ஆசைக்காகவோ, அதிகாரத்தை வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அல்லாமல், தமிழ் முஸ்லிம் மக்களது விருப்பங்களை அறிய வேண்டும் என்பதற்காகவும் நாட்டுக்கும் மகா சனங்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவும் அந்தப் பதவியில் இருக்கும் மாண்புமிகு சந்திரிகா அவர்களை அப்பதவியை இல்லாதொழிக்குமாறு கோரும் கோரிக்கை, முன்பு ஒருக்கால் அவர் அப்படிச் சொன்னார் என்பதற்காக அப்படிக் கோரும் கோரிக்கையை எதிர்க்க முழு நாடும் மக்களும் முன்வந்தாநிற்கவேண்டும். யுத்தம் எம்மைக் கொல்லட்டும். பசியும் பட்டினியும் எம்மை விழுங்கட்டும். நாடு முழுவதையும் பிறநாட்டார் சுருட்டிக் கொள்ளட்டும். ஆனாலும் நாம் அப்பதவியைக் காப்போம். அதை எதிர்த்து கிளர்ந்தெழும் எல்லாச் சலசலப்புகளையும் ஒழிப்போம். வாழ்க மகா ராணி சந்திரிகா வாழ்க என்று வானம் நடுங்க முழக்கிடுவோம்.

**இராஜ துரோகிகள் ஒழிக!**

**ஜனாதிபதி படைவீரர்கள் வாழ்க!!**

**வாழ்க சந்திரிகா நாமம்!!!**

கே.வி.

நன்றி - நூலகத்திட்டம்



# வெளிநாட்டுப் பணிப்பெண்கள்:

## பிரச்சினைகள் மாற்றங்கள் குறித்து சில அவதானங்கள்

இறக்கமம் நவூப்


Pic. By: Shakeep

இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளின் அபரிதமான வறுமை, வளப்பற்றாக்குறை என்பவற்றின் விளைவாக இந்நாடுகளின் அபிவிருத்தி மதிப்பீடுகள் குறைவிருத்திக்கும், அதிகூடிய பொருளாதார அழுத்தங்களுக்கும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளமை தெளிவான விடயம். ஒரு புறம், கோடிக்கணக்கான ரூபாய்களை உறிஞ்சிக் கொண்டிருக்கும் யுத்தமும், அடுத்தபக்கம் வினைதிறனோ (Efficiency) விளைதிறனோ (Effectivness) இல்லாத மக்கள் தொகை பெருக்கமும் நாட்டின் பொருளாதார செயற்திட்டங்களை பின்னோக்கித் தள்ளிக்கொண்டிருக்கின்றன. இத்தகு சூழலிலே இந்நாடுகள் உல்லாச பயணக் கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் போன்ற பொருளாதார மூலங்களையும், மாற்றுகளையும் நோக்கி விரைகின்றன. விளைவாக இத்தேசங்களின் தனித்துவ மிக்க பண்பாட்டுப் பேணுகைச் சிதைவும் தரச்சிறப்பு மிக்க கலாசாரக் கூறுகளின் தேய்மானமும் தவிர்க்க வியலாத நியதிகளாகிப் போகின்றன.

பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு பொருந்தும். இந்தப் பொதுவுண்மையிலிருந்து இலங்கை விதிவிலக்கானதல்ல. 1970களில் முளைத்து 70களின் கடைக் கூற்றில் தளைத்துக் கிளைத்து இன்று விருட்சமாக விரவி நிற்கும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் கரிவிற்ற பணம் கறுப்பாகுமா எனக் கருதும் அரசாங்கத்துக்கு பல மில்லியன் ரூபா அந்நியச் செலவாணியை அள்ளி இறைக்கிறது உண்மை தான். எனினும், அடுத்த பக்கம் தார்மீகப் பெறுமானங்களையும், ஒழுக்க விழுமியங்களையும் பற்றியொழுகும் இலங்கை மக்களின் சமூக இயக்கப் போக்கின் பல்வேறு தளங்களிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தோற்றுவிக்கும் பிரச்சினைகளின் பரிமாணங்கள் அனந்தம். குறிப்பாக வெளிநாடு செல்லும் பணிப் பெண்கள் உட்படும் சூழ்நிலை அழுத்தங்கள், ஆட்படும் சமுதாயக் கொடுமைகள் என்பன குறித்த அண்மைக்கால தகவல்கள் இதற்கான மாற்றுக் குறித்து சிந்திக்கத் துாண்டுகின்றன.

1985களுக்கு முன்னர் மிக மந்த கதியில் இருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு வீதம் அதற்குப் பின்னைய ஆண்டுகளில் அசுரவேகத்தில் வளர்ந்து வந்துள்ளது. 97-98ம் ஆண்டுகளில் மாத்திரம் வெளிநாடுகளில் தொழில் பெற்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 7846பேர் ஆகும். நடப்பாண்டில் இதைவிட அதிகமானோர் தொழில்பெறும் வாய்ப்பு உள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறுகின்றது. எது எப்படி இருப்பினும் இன்று ஒட்டுமொத்தமாக அந்நியநாடுகளில் பணிபுரிவோர் சுமார் 10,00,000மாகும். மத்தியக் கிழக்கு நாடுகளில் லெபனான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பணியாற்றும் பெண் ஊழியர்களின் தொகைப் பெருக்கம் அண்மைக் காலமாக பல அடிப்படைக் கேள்விகளை எழுப்பியுள்ளன.

### பெண்கள் வெளிநாடு செல்வதன் விளைவுகள்

இன்று கொழும்பு நகரில் மருதானை, பஞ்சிகாவத்தை, ஜா - எல மற்றும் ராஜகிரிய பகுதிகளில் இயங்கிவரும் லொட்ஜ்களிலும் வாடகை வீடுகளிலும் அதிகமான பெண்கள் வாரக்கணக்கில் மற்றும் சிலர் மாதக் கணக்கில் கூட தங்கியிருக்கிறார்கள். எங்கு செல்லப்போகிறோம் என்றோ, என்ன தொழில் என்றோ எவ்வளவு ஊதியம் என்றோ அறிவிக்கப்படாத இவர்கள் விசாவுக்காக காத்துக் கிடக்கிறார்கள். "இன்று சென்று நாளை..." என்னும் கம்பராமாயணப் போர்க்களத்து வாக்கியங்களைச் சொல்லிச் சொல்லி சுரத்துக் கெட்டுப் போன "சப்புகள்" (Sub Agency) சிலர் விமா னம் ஏறுவதற்கு முன்னமே பலரை தவறாகப் பிரயோகித்தும் விடுகிறா ர்கள். இது ஊகம் அல்ல அப்பழுக்கற்ற உண்மை. பணிப் பெண்களுக்கான விஸா பற்றிய திகதியை பருமட்டாக அறிந்து வைத்துள்ள முகவர்களும் அதனை மூடிமறைத்து ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்துக்கு முன்னரேயே அவர்களை தலை நகருக்குக் கொண்டு வந்து விடுவதன் மர்மம் இதுதான். இதற்கு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. ஆனால், இதுதான் விதி என்பதை நிராகரிப்பவர்கள் விளக்கம் இல்லாதவர்கள்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற விரும்பும் பணிப் பெண்களுக்கு வர்ணப் புகைப்படப் பிரதிகள் சில ஏலவே மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவை அங்குள்ள ஆளணி முகாமைத்துவ மற்றும் மனித வள விநியோக திணைக்களங்களினால் பார்வையிடப்பட்டு மீண்டும் அவை பணிப் பெண் தேவைப்படும் தொழிலதிபருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தொழிலதிபரும் பணிப்பெண்ணின் புகைப் படத்தில் திருப்தி கண்டதன் பின்னரே அப் பெண் தகுதியான வளாக கருதப்படுகிறாள். சிலபோது பிரதி முகவர் மற்றும் முகவர்கள் அக்குறிப்பிட்ட நாட்டிலுள்ள "இறக் குமதியாளர்கள்", தொழிலதிபர் என எல்லா மட்ட அதிகாரிகளையும் ஒரு பணிப்பெண் திருப்திப்படுத்த வேண்டிய சமுதாய நிர்ப்பந்தங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். 'பசி வந்தால் பத்தும் பறக்கும்' என்பது போல் பொருளாதாரத்தில் மிக அடிமட்டத்தின் அழுத்தங்களுக்கும், நெருக்குதல்களுக்கும் இரையாகி வறுமையின் கோரத்தாண்டவத்தினுள் சிக்குண்டு பரிதவிக்கும் இப்பெண்கள் 'வருமானம்' பெறுவதற்காக எதையும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இனி 'அவள் பறந்து போனாளே, எனை மறந்து போனாளே' என்ற சினிமாப் பாடலாய் அவள் பல வருடங்கள் வெளிநாடுகளில் பணிபுரிகிறாள். தொழில்புரியும் காலப்பகுதியில் பல சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவிக்கிறாள். காசோலையைக் கண்டவுடன் கடைவாய்பற்கள் தெரிய வாயைப் பிளந்து கொண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிடும் உறவினர்களுக்கோ, கணவன்மார்களுக்கோ இந்தத் துயரங்கள் துலங்குவதில்லை என்பது துக்ககரமானது. பல பணிப்பெண்களுக்கு பெண் என்ற தன்மையைப் புறக்கணித்து பல பழுவான வேலைகள் கொடுக்கப்படுகின்றன. முழு நேர ஊழியர்களாய் உருகிக் கொண்டிருக்கும் சிலர் வாழ்க்கையில் சிலபோது விரக்தியடைகிறார்கள்.

போய்ச்சேரும் வரை எங்கு செல்லப் போகின்றேனோ, என்ன வேலை கிடைக்குமோ, எவ்வளவு ஊதியம் தருவார்களோ என்றெல்லாம் முன் கூட்டியே அறிவிக்கப்படாது, அளவுக்கு மீறிய வேலைப் பழுவைச் சுமக்கவும், குறைந்த சம்பளம் வழங்கப்படவும், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படவும், ஏதுவாக அமைகிறாள். மானத்தை, நாணயத்தை, இழக்க வேண்டிய எல்லாவற்றையும் இழந்து அவள் 'பொஸ்ஸு'க்கே கட்டுப்படவும் வேண்டியுள்ளது. ஆனால், இங்கு குறித்துக் காட்டப்பட வேண்டிய உண்மை என்னவெனில், பெண்கள் இந்தச் சூழ்நிலையின் நிர்ப்பந்தங்களுக்கு ஆட்பட்டு அதற்கு அடிமையாகி பழக்கப்பட்டு போகிறார்கள் என்பதே. இவர்களைப் பொறுத்தவரை காலப்போக்கில் வெளிநாட்டு அனுபவம் ஒரு வரப்பிரசாதம். ரசம் கண்ட பூனை அடுப்பங்கரையையே சுற்றி வருவதுபோல் பலர் இரண்டு மூன்று வருடங்களுக்கு அப்படியே ஐந்தாறு வருடங்களுக்கு பின்னர் நாடு திரும்பினாலும் மீண்டும் அங்கு ஓடிவிடுகிறார்கள். பல பெண்கள் வெளிநாடுகளிலேயே தங்கி விடுகின்றனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து வெளிநாடு சென்ற சில பணிப்பெண்கள் சுமார் 10 வருடங்களாகியும் இடைக்கிடையே நாடு திரும்பினாலும் வெளிநாட்டுக்கே மீண்டும் செல்ல ஆர்வம் கொள்கிறார்கள். இதில் சிலர் தொழிலதிபரின் "சின்னவீட்டு" வைப்பாட்டிகளாகவும் மற்றும் சிலர் அங்கு பணிபுரியும் இலங்கையரை திருமணம் செய்து கொண்டும் காலங் கடத்துகின்றனர். இதற்கு உதாரணங்கள் ஒன்றிரண்டல்ல ஒரு நூறு சொல்ல முடியும். விரிவஞ்சி விளக்குவதைத் தவிர்க்கிறோம். இங்கு சமுதாய நிர்ப்பந்தத்துக்கு விருப்பத்தோடு முகங்கொடுப்பவர்களுக்கு இது 'விபசாரமாகிறது'. வெறுப்போடு எதிர்கொள்பவர்களுக்கு பாலியல் வல்லுறவாகிறது. எது எப்படியாயினும் இலங்கையில் இன்று அதிகரித்துவரும் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களுக்கும், கருத்தடை மாத்திரைகளுக்கும் ஓரளவு 'மவுசு' ஏறுகின்றது என்பது மாத்திரம் உண்மை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வுகளின்படி விபசாரம், பாலியல் வல்லுறவுகள், தகாத பாலியல் உறவுகள், வறுமைப் பிரச்சினையினால் ஏற்படும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் என்பன கருக்கலைப்பு வீதத்தில் கூடிய செல்வாக்குச் செலுத்துவதுபோல், வெளிநாட்டுப் பணிப்பெண்களது கருக்கலைப்பும் இதில் அடங்கும். ஆனால், ஓர் ஆழமான உண்மையை இங்கு சொல்லியாக வேண்டும். அதாவது, வெளிநாடு செல்லும் எல்லாப் பெண்களும் இந்த நிலைக்கு உட்படுவதில்லை. வெளிநாடு சென்று வரும் பெண்ணை இரண்டாம் பட்சக் கடைக் கண்ணோடு பார்த்து திருமணத்தைத் தட்டிக் கழிக்க நினைக்கும் ஆண்கள் இந்தக் கருத்தை மனங்கொள்ளத்தக்கது. ஏனெனில், அவள் செய்யாத பாவத்துக்கு பழி சொல்லி சமுதாயம் மட்டும் ஓரக்கண்ணால் சாடைகாட்டி ஒதுக்கி வைக் கும் மனோநிலை நமது சமுதாயத்தில் கணிசமான அளவு நிலவிவருவது விசனத்துக்குரியது.

இவ்விடயத்தில் இன்னொரு யதார்த்தத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதாவது, மத்திய கிழக்கில் பணிப் பெண்களை வேலைக்கமர்த்தும் அதிபர்கள் அனைவருமே தமக்குக் கீழ் தொழில்புரியும் பெண்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பது நூறு வீத அபத்தம். இது விதி விலக்காகவே நிகழ்கின்றது. ஆனால், உண்மை யாதெனில், இலங்கையிலிருந்து பணியாட்களாக மத்திய கிழக்குக்குச் செல்லும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் ஆரம்பிக்கும் சந்திப்புக்கள் நாளடைவில் "சதை உறவுகளுக்குக்" கூட வழிகோலுகின்றது. சிலர் திருமணமே முடித்துக் கொள்கிறார்கள். பலர் நாடு திரும்பி தமது உறவுகளைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள். மிக வேதனையான விடயம் வெளிநாட்டில் தொழில் செய்யும் பல ஆண்கள் அங்கு ஒரு சில விபசார விடுதிகளையே நடாத்தி வருவதாகவும் தகவல்கள் காட்டுகின்றன. இந்த அந்தரங்கங்கள் இங்கு அரங்கத்துக்கு வந்தது பலருக்கு வியப்பாக இருப்பினும் இப்படியும் நிகழ்கிறது என்பது மாத்திரம் நிராகரிக்க முடியாத நிஜமாகும்.

திருமணம் முடிக்காத பெண்கள் வெளிநாடு சென்று வருவதனால் அவர்களது எதிர்காலம் பெரிதும் கேள்விக்குள்ளாகின்றது. சமுதாயத்தில் அவள் இரண்டாம் பட்சமாகவே நோக்கப் படுகின்றாள். பெரும்பாலான மாப்பிள்ளைகள் இத்தகையவர்களை மணம் முடிக்கத் தயங்குகிறார்கள். இத்தனைக்கும் திருமணம் என்ற கனவை நனவாக்கும் ஏக சாதனமாகவும் மணமகளை கொள்வனவு செய்யத் துணை நிற்கும் வழிமுறையாகவும் விளங்கும் 'சீதனத்தைத்' தேடவே அவள் மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து வந்தாள். எனினும், காலம் செய்த கோலமோ கடவுள் தந்த சோதனையோ அவள் இளக்காரமாகவே பார்க்கப்படுகிறாள்.

மற்றொரு தளத்தில் திருமணம் முடித்த பெண்கள் வெளிநாடு செல்வதால் இன்னும் சில பிரச்சினைகள் தலைத் துாக்குவதையும் தவிர்க்க முடியாமல் போயிற்று. தங்களது குறைந்த வயதுக் குழந்தைகளை உறவினர்களிடம் அல்லது நெருங்கியவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் செல்வதால் "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பதை வார்த்தையளவேனும் தெரியாத நமது சமூகத்தின் அங்கத்தவர்கள் உரிய முறையில் அவர்களைப் பராமரிக்கத் தவறுகிறார்கள். குழந்தை தொந்தரவுகளைப் பொறுத்துப் பாசம் காட்டுவதற்குப் பதிலாக கண்ட நின்ற வேளையெல்லாம் அவர்களை கண்டிக்கிறார்கள். பலர் அவர்களை அனாதை இல்லங்களிலும், பராமரிப்பு மடங்களிலும் விட்டு விடுகின்றனர். சின்னஞ் சிறுவயதில் தாய்ப் பாசத்தில் கொஞ்சிக் குலாவப்படவேண்டிய பிஞ்சிக் குழந்தைகள் இத்தகு சூழ்நிலை அழுத்தங்களால் மன இயல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்றன. இப்பாதிப்புக்கள் இளஞ்சந்ததியினரின் எதிர்காலத்தைக் கணிசமாகப் பாதிக்கின்றன.

மனைவிமார் களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அவள் அனுப்பிவைக்கும் "நோட்டுகளால்" காலங் கடத்திக் கொண்டிருக்கும் கையாலாகாத கணவன்மார் பொறுப்புணர்வற்றர்களாக மாறுவதோடு உடலியல் தேவைக்காக "சின்னவீட்டு" விவகாரத்திலும் சம்பந்தப்பட்டு விடுகிறார்கள். மட்டுமன்றி தான் குற்றம் செய்யும்போதெல்லாம் அதனை பண்பாட்டுடன் விசாரிக்கும் மனைவி கூட தன்னோடு இல்லாததை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி யது, கஞ்சா, குடு போன்ற போதைவஸ்து [illegible] அடிமைப்பட்டுப் போகிறார்கள். [illegible] கணவன்மார் அனுப்பப்பட்ட பணம் அனைத்தையுமே அவர்களது களியாட்டத்துக்கு தாரை வார்த்துவிட்டு கையை விரிப்பதால் வெளிநாட்டிலிருந்து வீடு திரும்பும் மனைவி அதே பழைய வீட்டையும், முன்னர் இருந்ததைவிட தறிகெட்டு நிற்கும் புருஷனையும் கண்டு புருவம் உயர்த்துகிறாள். இந்நிலையும் இலங்கையில் கணிசமான அளவு நிலவுகின்றது. இவ்வாறு பணிப் பெண்கள் விமானம் ஏறுவதன் பரிதாபத்தை அடுக்கிக் கொண்டே போகலாம்.

### பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதற்கான சமுதாய நிர்ப்பந்தங்கள்

கடந்த அரை தசாப்தமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடிச்செல்லும் பணிப் பெண்களது வீதம் அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது. பணிப் பெண்களுக்கான ஒரு வருட வீஸா, இரண்டு மாத சம்பள முற்பணம், சேவைக் முற்பணக் கொடுப்பனவு, காப்புறுதித் திட்டம், மத்திய கிழக்கில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் போன்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிமுகம் செய்துள்ள புதிய சாதகங்கள் இவ்வளர்ச்சி வீதத்தினை தீர்மானித்தாலும், கிராமப்புறங்கள் வரை தமது லாப வீச்செல்லையை விஸ்தாரம் செய்து வணிகப் புற்றீசல்களாய் வளர்ந்துள்ள முகவர் நிலையங்களுக்குத்தான் இந்த வளர்ச்சிப் போக்கு தாக்கம் செலுத்தினாலும் பெண்கள் பணிப்பெண் [illegible] நிலையத்தில் [illegible] உண்மையான காரணங்கள் இன்னும் இனம் காணப்படவில்லை. அல்லது அடையாளங்காணப்பட்டாலும் அவற்றுக்குப் பொருத்தமான பயனுறுதி வாய்ந்த மாற்றுகள் இதுவரை முன்வைக்கப்பட்டதாகவும் தெரியவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அதிகமான இளம் யுவதிகளும் திருமணம் முடித்த பெண்களும் வெளிநாடு செல்வதற்கான அடிப்படைக்காரணம் அங்கு நிலவும் சீதனக் கொடுமைதான் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. வயது வந்தும், தான் பொருளாதாரவளமுள்ள குடும்பத்தில் பிறக்காததன் காரணமாக திருமணம் பல பெண்களுக்கு எட்டாக்கனியாகிவிடும் நிலையிலேயே ஒரு வீட்டைக் கட்டி ஓரளவு பொருளாதார வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு திருமணம் முடிக்க எண்ணும் யுவதிகள் வெளிநாட்டை நாடுகின்றனர். நிற்க நிழலும் சாய்சுவரும் இல்லாத வறுமையின் கோர நகங்கள் வாழ்க்கையின் கழுத்தைப் பிடித்து

⇨ 18

நன்றி - நூலகத்திட்டம்



**மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரியாக பணியாற்றும் உங்களது பணிகள் பற்றி கூறுவதானால்...?**

காவல்துறையினரால் கைது செய்யப்படும் நபரொருவரை விடுதலை செய்யும் வரையில் அவர்கள் எந்நிலையில் கைது செய்யப்பட்டார்கள், எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதைப் பற்றி புலனாய்வு செய்வதே எங்கள் கடமை. அதே நேரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள், மனித உரிமை வன்முறைகள் தொடர்பாகவும் புலன்விசாரணைகளை மேற்கொள்கின்றோம்.

விரிவாகக் கூறுவதானால், கைது செய்யப்படும் நபர் எந்த முறையில் நடத்தப்படுகின்றார். கைதுக்குப் பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்படுகின்றனவா, கைதை மேற்கொள்ளும் நபர் பற்றி கைது செய்யப்பட்ட நபரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்படுகின்றனவா. ஏன் கைது செய்யப்படுகின்றார் என கைது செய்யப்பட்ட நபருக்கு அறியத்தரப்படுகின்றதா என்பவற்றை புலனாய்வு செய்வது அத்தியவசியமான கடமையாக உள்ளது.

**பொதுவாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு ஒரு நாளைக்கு எத்தனை உரிமை மீறல்கள். கைதுகள் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன?**

சாதாரணமாக 30 முறைப்பாடுகள் கிடைக்கின்றன. கைது செய்யப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் கொழும்பில் மிகக் குறைவாகவே உள்ளன. சிலவேளைகள் 8-10 தொடக்கம் முறைப்பாடுகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களுமுண்டு.

**குறிப்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவரை ஆற்றியுள்ள. சாதித்துள்ள விடயங்கள் பற்றி கூறுவதானால்....?**

உயர் நீதிமன்றத்தால் ஆற்றுப் படுத்தப்பட்டுள்ள வழக்குகளை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையிலும், ஆணையாளர்கள் முன்னிலையிலும் விசாரணைக்கு எடுக்கின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்வதற்கு கால அவகாசம் தேவையில்லை. உயர் நீதிமன்றத்திற்கு சம்பவம் நடந்த ஒரு மாதத்திற்குள் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கால அவகாசம் இல்லை. அதைத்தவிர, மனித உரிமைகள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் ஆற்றுப் படுத்தப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரிப்பதிலும் அது சம்பந்தமான அறிக்கைகளை பெறுவதிலும் உயர் நீதிமன்றத்திற்கு உதவி செய்கின்றது.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றும் ஒரு அதிகாரி என்ற வகையில் இலங்கையில் மனித உரிமைகள் பற்றி உங்களது கருத்து?**

இலங்கையில் இனப்பிரச்சினை காணப்படும் தருவாயில் நூற்றுக்கு நூறு வீதம் மனித உரிமைகள் பேணப்படும் என நாம் எதிர்பார்க்க முடியாது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மனித உரிமைகள் மீறப்படுதல் சகஜமான விடயம் தான். வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களில் மனித உரிமைகள் அதிகமாக மீறப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு தரப்பில், இவை பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிகாரிகள் வேலை செய்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு நாம் சென்றால், பட்டிய்லில் உள்ள கைதிகள் அனைவரும் உள்ளனரா என ஆராய்ந்து பார்ப்போம். ஆனால், யுத்தச் சூழல் நடைபெறும் ஒரு பிரதேசத்தில் நாம் பட்டியலை கேட்டு தொல்லைக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. சமாளித்து. ஆசுவாசப்படுத்தி தான் அவர்களிடமிருந்து தகவல்களை பெற வேண்டும். சம்பந்தப்பட்ட வழக்கொன்றிற்கு சென்று பிரச்சினைப்பட்டுவிட்டு திரும்பி அவ்விடத்திற்குச் சென்றால், வழக்கு தொடர்பான ஒத்துழைப்பு குறைவாகவே காணப்படும். இதனால் மிகவும் கவனமான நிலையில் தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**ஏறத்தாழ மூன்று மாதங்கள் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு புலனாய்வு அதிகாரியாக பணியாற்றியுள்ளீர்கள். இது பற்றி கூறுவதானால்...?**

பொதுவாக யாழில் சேவையாற்றும் போது தனிப்பட்ட விடுப்புகள் எதனையும் பெற முடியாது. முறைப்பாடுகள் வந்தவுடன் துரிதமாகச் செயற்பட வேண்டியிருக்கும். கொழும்பில் புலன் விசாரணை அதிகாரிகள் 8 பேர் உள்ளோம். ஒரு வழக்குக்காக 8 பேரும் இணைந்து செயற்படக் கூடிய வாய்ப்பு இங்கு உண்டு. யாழில் அவ்வாறான சூழ்நிலை

*கௌரி சுந்தரலிங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளில் ஒருவராக பணியாற்றுபவர். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றுவது, இன்றைய மனித உரிமைகள் மீறப்பட்ட / மீறப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் முக்கியமானது என குறிப்பிடும் அவரிடம், அவரின் அனுபவங்கள் ஈடுபாடுகள் தொடர்பாக வினவப்பட்டபோது வழங்கிய பதிலுரைகள் இங்கு தரப்படுகின்றன.*

*நேர்காணல்: ரத்னா*



## "சராசரியாக ஒரு நாளைக்கு 30 முறைப்பாடுகள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கிடைத்து வருகிறது"

*– கௌரி சுந்தரலிங்கம்*

இல்லை. முறைப்பாடுகள் வந்தால் இராணுவ முகாமுக்கோ, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கோ சென்று கைதிகளையோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ தனியே சந்திக்க வேண்டியிருக்கும். அது மட்டுமின்றி, கொழும்பில் 24 மணித்தியாலமும் தடுப்பு முகாம்களுக்கோ, பொலிஸ் நிலையங்களுக்கோ செல்லக் கூடியதாகவிருக்கும். யாழில் முன்னறிவித்தல் கொடுத்து செல்லவேண்டிய சூழ்நிலையே காணப்படுகின்றது. அதேநேரம் கொழும்பில் ஒரு முறைப்பாடு கிடைத்தால் அதனை அடுத்த நாள் அல்லது அரை மணித்தியாலயத்தில் கவனத்தில் எடுக்கும் வாய்ப்பும் இருக்கின்றது. யாழில் ஒரு முறைப்பாடு கிடைத்தால் அதனை சிறிது நேரத்திற்குள் விசாரணைக்குட்படுத்தியாக வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் சம்பந்தப்பட்ட நபரை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடும். சில நேரங்களில் அந்த சூழ்நிலை மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் மீறிப்போகக் கூடிய சாத்தியக் கூறுகளும் நிலவுகின்றது. இந்த வகையில் யுத்த பிரதேசங்களில் பணிபுரிவது சவாலான விடயமாகவே உள்ளது.

**சாதாரண ஒரு பிரதேசத்தை விட யுத்தம் நடைபெறும் ஒரு பிரதேசத்தில் இருந்து மனித உரிமைகள் மீறப்படுகின்றன என ஒருவர் முறைப்பாடு செய்வார் என நீங்கள் எண்ணுகிறீர்களா?**

யாழ்ப்பாணத்தில் கைதுகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யும் அளவுக்கு இடம்பெறும் வேறு மனித உரிமைகள் மீறல்கள், கைதைத் தவிர - குறிப்பாக இராணுவத்தினர் ஒருவர் தாக்கிவிட்டுச் சென்றால் அல்லது வேறு தாக்குதல் சம்பவங்கள் பற்றியோ சரி, தாக்குதலுக்கு பிறகு வரும் அசம்பாவிதங்கள் பற்றியோ முறைப்பாடு செய்வது வெகு குறைவாகவே உள்ளது.

**இந்த வகையில் பெண்களிடமிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனித உரிமைகள் மீறப்படுகின்றன என ஒப்பீட்டளவில் முறைப்பாடுகள் ஏதும் கிடைகின்றனவா?**

பொதுவாக பெண்களுக்கு மனித உரிமைகள் பற்றி விளக்கம் இல்லையென்றே கூற வேண்டும். குறிப்பாக முன்னேற்றம் அடையாத பிரதேசங்களில் இந்நிலைமை மோசமானதாகவே காணப்படுகின்றன. தம் உரிமைகள் மீறப்படுகின்றன என்று அறியாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர். இதனால் முறைப்பாடுகளும் வெகு வெகு குறைவாக கிடைக்கின்றன. இதன்படி ஒப்பீட்டளவில் மிக குறைவாகவே முறைப்பாடுகள் உள்ளன.

**சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழு முன் எடுத்துச் செல்லும் பணிகளை குறிப்பிட முடியுமா?**

வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவில் 60 பெண்கள் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களை உறவினர்கள் சென்று பார்ப்பதில்லை. அத்தியவசியமான பொருட்கள் வழங்கப்படுவதுமில்லை. இதுவும் மனித உரிமை மீறல்களே. பெற்றோர்கள், உறவினர்கள் வந்து அவர்களை பார்க்காததினாலும், வெளியுலகத் தொடர்பற்று அவர்கள் இருப்பதினாலும் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் கல்வி அறிவும் வெகு குறைவாகவே காணப்படுகின்றது. இதனால், தமக்கெதிராக என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, நாம் எடுக்கும் அடுத்த நடவடிக்கை என்ன, வழக்குக்கான அடுத்த திகதியென்ன போன்ற விடயங்களை அறியாதவர்களாகவே அவர்கள் உள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பொறுத்தவரையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் ஏதாவது துன்புறுத்தல்களுக்குள்ளாகியுள்ளார்களா, பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ளார்களா என்று விசாரிக்கும் வரையறை மட்டும் அதற்கு உள்ளது.

குறிப்பாக 60 பெண்களில் 75 வீதமானவர்களுக்கு இதுவரை அடுத்த தவணை திகதி குறிக்கப்படவில்லை. தவணை குறிக்கப்படாத ஒரு மாத காலத்திற்குள் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யலாம். அவ்வாறான அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாம் விளக்கமளித்த பின் தான் அவர்களுக்கு அவ் விடயங்கள் பற்றி தெரிகின்றது.

**சிறையில் இருக்கும் 60 பெண்களில் 75 வீதமானவர்களுக்கு இதுவரை அடுத்த தவணை திகதி குறிக்கப்படவில்லை. தவணை குறிக்கப்படாத ஒரு மாத காலத்திற்குள் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யலாம். அவ்வாறான அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாம் விளக்கமளித்த பின் தான் அவர்களுக்கு அவ் விடயங்கள் பற்றி தெரிகின்றது.**

மேலும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது. சோப், பற்பசை போன்ற பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு உள்ளது. அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தமக்கு இவ்வுதவிகளை செய்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஆனால், அவ்வாறான உதவிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுத்துச் சென்றதில்லை. சேவை மனப்பான்மை கொண்ட ஸ்தாபனங்கள் தான் இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். உளவியல், உடலியல் துன்புறுத்தல்கள் பற்றி விசாரிப்புகள் மட்டுமே எமது பணியாக உள்ளது. இது விடயத்தில் மாறாக சேவை மனப்பான்மையிலான விடயங்களை மேற்கொள்ள விதிமுறைகள் ஆணைக்குழுவிடம் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது.

**காணாமல் போன நபர்களை விசாரிக்கும் வழக்குகளில் நீங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஏதுமிருப்பின்?**

காணாமல் போன நபர்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அதாவது அவர்கள் காணாமல் போனால், எங்கே வைத்து காணாமல் போனார்கள் என்று தெரியாத சூழ்நிலையில் குறிப்பிட்ட நபரை தேடுவது கடினம். குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று திரும்பி வரவில்லை எனின், குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த இராணுவ பொலிஸ் நிலையத்தில் விசாரித்து அறிந்து கொள்ளலாம். சில முறைப்பாடுகள் வீட்டை விட்டு சென்றவர் எங்கு சென்றார் என்ற போது தான் விசாரணைகளில் தர்ம சங்கடமான சூழ்நிலை ஏற்படும். அது மிகச் சவாலானதாகவும் இருக்கும்.

**இராணுவத்தினது மனித உரிமைகள் மீறல்கள் ஒரு புறமிருக்க. தமிழ் மக்களைக் காப்பதற்காக அங்கு வந்திறங்கிய தமிழ் இயக்கங்களே மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டு வருவதாக நாளாந்தம் இங்கு செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. உங்களுக்கும் அவ்வாறு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா?**

ஓம். நான் அங்கு பணியாற்றிய காலத்தில் ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்தன. அவற்றை ஒவ்வொன்றாக நான் இங்கு விவரிக்க அவசியமில்லை. இராணுவத்தின் மனித உரிமைகள் மீறல்களை விளங்கிக் கொள்ளலாம். ஒரு அந்நிய இராணுவம் அவ்வாறு தான் நடக்கும் என்பதில் ஆச்சரியப்பட ஏதுமிருக்க முடியாது.


ஆனால், இராணுவம் யாழ்ப்பாணத்துக்குச் சென்றால் அவர்கள் மக்களை அல்லல்படுத்துவார்கள் என்று கூறி அம்மக்களைப் பாது காப்பதற்கென அங்கு வந்த தமிழ் அமைப்புகளின் மனித உரிமைகள் மீறல்களைத் தான் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் நிலைமை அவ்வாறு தான் உள்ளது என்பது உண்மை.

நன்றி - நூலகத்திட்டம்



**ஜுன் 29ம் திகதி குர்திஷ் தொழிலாளர் கட்சி'யின் தலைவரான அப்துல்லா ஒக்கலானுக்கு மரண தண்டனை விதித்துள்ளது துருக்கியின் இராணுவ நீதிமன்றம்.**

**மூன்று மாதங்களுக்கு முன்னர் வஞ்சகமான முறையில் ஒக்கலான் ஆபிரிக்க நாடான கென்யாவில் கிறிஸ் தூதரகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.**



**அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தமை, தேசத்துரோகம், ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்குக் காரணமாயிருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை சுமத்தி மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவினால் இத்தண்டனையை வழங்கப்பட்டிருக்கிறது.**

**ஒக்கலான் தன் மீது சுமத்தப்பட்ட இக்குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறார். 'தேசத்துரோகம் என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். நாட்டின் ஒற்றுமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தான் போராடினேன் என்றே நான் நம்புகிறேன். எனது போராட்டம் ஒரு ஜனநாயகக் குடியரசு அமைப்புக்காகத் தானே ஒழிய அதற்கெதிரானதல்ல... 'தேசத்தின் எதிர்காலம் சமாதானத்தில் தான் இருக்கிறதே ஒழிய யுத்தத்தில் அல்ல' என்று தனது இறுதி அறிக்கையில் தெரிவித்திருக்கிறார் ஒக்கலான்.**

'Middle East Insight' **என்ற பத்திரிகைக்கு அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பாக அளித்த நேர்காணல் இங்கு முழுமையாகத் தரப்படுகிறது. இது குர்திஷ் தொழிலாளர் கட்சியினதும் அவரதும்நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கும் என்று நம்புகிறோம்.**

ஆ-ர்

***உங்கள் இயக்கத்தின் இன்றைய குறிக்கோள்கள், நோக்கங்கள் யாவை? அவற்றைப் பத்து வருடங்களுக்கு முன்னானவையுடன் எவ்வாறு ஒப்பிடலாம்?***

நேற்றையவைகளுடன் இன்றையவைகளை ஒப்பிடுவதைவிட, அவை இன்றெப்படி ஒரு யதார்த்தமாக மாறியுள்ளது என்பதைப் பற்றி நாம் பேசவேண்டும். பத்து வருடங்களுக்கு முன் என்றால், எங்கள் இலக்கானது துருக்கிய எல்லைகளுக்குள் எம் போராட்டத்தை நிரந்தரமான தொன்றாக்குவதாகத் தான் இருந்தது. அத்துடன் இந்த அரசியல் தந்திரோபாயம்/மூலோபாயம் குர்திய எழுச்சி மூலமும் (இந்திபாதா) இராணுவ ரீதியான கெரில்லாப்போர் முறைமை மூலமும் அடைந்து கொள்ளப்பட வேண்டுமென்று தான் பத்து வருடங்களுக்கு முன் விரும்பினோம்.

அந்த இலக்கை அடைந்திருக்கிறோம் என்று தான் நான் நம்புகிறேன். எங்களைப் பொறுத்தவரை இது அரசியல் தீர்வுக்கான அடித்தளத்தை இடவேண்டிய வரலாற்றுத் தருணமாகும். குர்திய பிரச்சினையின் பிரதான விடயம் அமைதியான முறையில் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வருவதாக இருப்பினும், இன்று வரை எங்கள் இலக்கில் எந்த மாற்றமுமில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு போலவே இன்றும் நாங்கள் குர்திய மக்களின் சுயவிருப்பின் மூலம் உருவாக்கப்படுகிற தீர்வொன்றையே விரும்பி நிற்கிறோம். இருந்தாலும் இன்று நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டிருக்கின்றன. அம்மாற்றங்கள் பத்து வருடங்களுக்கு முன் இருந்தவை போன்றதல்ல. கெரில்லா யுத்த முறைமையும் 'இந்திபாதாவும்' ஒரு தசாப்தத்திற்கு முந்தி அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. ஆனால், இன்றோ அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கும், அமைதியான போராட்டத்திற்குமே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இதனை நாம் ஒரு வளர்ச்சி, முன்னேற்றம் என்று கருதுகிறோம் என நான் நினைக்கிறேன்.

***துருக்கி, ஈராக் போன்ற நாடுகளுடன் எவ்வகையான நலன்களை குர்திய மக்கள் கட்சி (PKK) கொண்டுள்ளது?***

உங்கள் கேள்வி தெளிவானதாக இல்லை. ஆனாலும் நீங்கள் கதைக்க எண்ணிய விடயம் துருக்கி, ஈராக்கின் குர்திஷ்தான் என்றால் ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது துருக்கிய குடியரசு உருவாக்கப்பட்ட வேளை வடக்கு, தெற்கு குர்திஷ்கள் மனம் போன போக்கில் இரகசிய முறையில் பிரிக்கப்பட்டனர். இந்த இரண்டு பிரதேசங்களின் போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாகவே இருந்தன. தெற்கிற்கான சாதகத்தீர்வு வடக்கிலும் பாதிப்பேற்படுத்தும். வடக்குத் தொடர்பில் தெற்கின் எதிர்மறையான அணுகல் பிரச்சினையைத் தான் உருவாக்கும். ஒரு பக்கத்தின் வெற்றிகரமான முன்னேற்றங்கள் தான் மறுபக்கத்தின் வெற்றிக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்துக் கொடுக்கும். ஆக, வடக்கு, தெற்கு குர்தியர்களிடையே பரஸ்பர எதிர்பார்க்கைகளும், நலன்களும் இருக்கின்றன. இந்த நிலைமையை ஒழுங்கான முறையில் கையாள்வது மிக முக்கியமானதாகும். இந்த விடயத்தில் அக்கறை செலுத்தும் அரசாங்கங்களும், அதிகார சக்திகளும் இந்த இரண்டு பக்க குர்தியர்களிடையே பாரபட்சம் காட்டாத அளவுக்கு மிக, மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். தென் குர்திஷ்தானின் நலன்களில் அதிக அக்கறை செலுத்தி வடக்கை அதே வகையில் கவனிக்காது விட்டால், குர்திஷ்தானை துண்டு-துண்டாக்கி, குர்தியர்களை துடைத்தழித்து விடுகிற ஒரேயொரு நிலைமைதான் எஞ்சும். கடந்த 75 வருடங்களாக இது உண்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. விட்ட தவறுகளையே மீண்டும் மீண்டும் நாம் விட்டு விடாதிருக்க வேண்டும்.

துருக்கியோ, ஈராக்கோ, குர்திஷ் பிரச்சினையை சாதகமான முறையில் அணுகவில்லை. ஒரு வட்டத்தின் குறுகிய எல்லைக்குள்ளே இந்த விடயத்தை இழுத்தடித்து, நிலைமையை அந்நாடுகள் மிகவும் மோசமாக்கிவிட்டன. குர்தியர்கள் தங்கிவாழ வேண்டிய நிலையிலிருக்கிற மத்திய கிழக்கு நாடுகளின் நிலையும் இது விடயத்தில் இப்படித்தான் இருக்கிறது. துருக்கி இவ்விடயத்தில் பிரதான பாத்திரம் வகிக்கிறது. தன்னால் முடிந்தளவான அழுத்தங்களைப் பிரயோகித்து குர்திஷ் பிரச்சினையைத் தீர்க்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த உண்மை ஈராக்கிற்கும் பொருந்தும்.

இந்த இருநாடுகளும் இன்று எதிர்நோக்குகிற ஜனநாயக ரீதியிலான பிரச்சினைகளின் தீர்வு குர்திஷ் பிரச்சினைகளின் தீர்விலேயே தங்கியுள்ளது. இன்று துருக்கிய அரசாங்கத்தில் ஜனநாயக விரோத, மனித உரிமை மீறல் பிரச்சினைகள் அதிகரித்த நிலையில் காணப்படுகிறது. இவை அந்நாடு எதிர்கொள்ளும் உடனடிப் பிரச்சினைகளாகவும் இருக்கின்றன. உண்மையில் இப்பிரச்சினைகளானது குர்திஷ்தானில் நடக்கின்ற யுத்தத்தின் விளைவுகளாகும்.

கூடவே, குர்தியப் பிரச்சினைக்கான ஜனநாயகத் தீர்வே துருக்கிய ஜனநாயகத்தின் வெற்றியாகவும் இருக்கும். இது ஈராக்கிற்கும் பொருந்தும். ஈராக்கிலும் குர்தியப் பிரச்சினைக்கான ஜனநாயகத் தீர்வே ஈராக்கிய ஜனநாயகத்தின் வெற்றியாகவும் இருக்கும். குர்தியப் பிரச்சினைக்கான சமாதான ஜனநாயகத் தீர்வே மத்திய கிழக்கின் ஜனநாயகத்தினதும், அமைதியானதும் தசாப்தத்தின் ஆரம்பத்தின் அடையாளமாகவும் இருக்கும்.

***சிரியாவுடனான உங்கள் இயக்கத்தின் உறவுகளின் தன்மை எவ்வாறானது?***

எங்கள் கட்சிக்கு, எங்கள் உறுதியின் அடிநாதமாக விளங்கும் சிரியாவின் குர்தியர்களுடன் தொடர்பிருக்கிறது. எம் கட்சிக்கும் சிரிய அரசாங்கத்திற்குமிடையிலான உறவு சட்டரீதியானதோ உத்தியோகபூர்வமானதோ அல்ல. இது மிகைப்படுத்தப்பட்டுமிருக்கிறது. உண்மையில் எங்கள் உறுதியின் ஆதாரமே மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் தான். இவர்களில் அனேகர் வடக்கைச் சார்ந்தவர்கள் சிரிய அரசாங்கம் எம்போராட்டத்தை அங்கீகரித்துள்ளதென்பது பலர் சொல்வது மாதிரி உண்மையல்ல.

இது வெறும் ஊகம் தான். எவ்வாறிருப்பினும் பல்வேறு அரபு நாடுகளில் வாழ்கின்ற குர்திய மக்கள் எங்கள் விடயத்தில் நிறையப் பங்களிப்பினைச் செய்து கொண்டிருக்கிறார்கள். லெபனானின் வாழும் குர்தியர்களையும் இந்தப் பட்டியலில் அடக்கலாம். எமது பிராந்திய உறுதிப்பாட்டின் மூலமே இவர்கள் தான்.

***உங்களின் சட்ட மற்றும் அரசியற்செயற்திறன் (Diplomatic) சார்ந்த நிலைமை (PKK)யின் போக்கில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?***

ஐரோப்பாவில் நான் சட்ட அடிப்படையிலான அரசியற் செயற்திற முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்க விரும்பினேன். இம்முயற்சிகள் வெற்றிபெற்று அது எல்லோருக்கும் நன்மை பயக்கும் இன்றியமையாத முன்னேற்றமாக/ வளர்ச்சியாக இருக்கும். தோற்குமானால் இராணுவ அரசியல் யுத்தத்தை பிரதிபலிக்கும் நேரிடை யதார்த்தத்தை நோக்கி எம் பார்வையை மீள்திருப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவோம். இப்போதும் கூட அரசியல் தந்திரோபாயத்திற்கே (Diplomacy) முன்னுரிமையளிக்கிறோம். அதையே வற்புறுத்தவும் விரும்புகிறோம். ஆனால், அது தோல்வியடையுமானால் சந்தேகமில்லாமல் எமது முன்னைய நடவடிக்கைகள் மிக முனைப்புடன் எங்கள் நிரலுக்கு வந்து விடும்.

***நீங்கள் இத்தாலியில் இருந்த போது ஜேர்மனியும், துருக்கியும் உங்களை நாடு கடத்துமாறு வேண்டுகோள் விடுத்தன. ஆயிரக்கணக்கானோரைக் கொன்றதாக உங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் விசாரணைக் குட்பட்டால் உங்கள் தரப்பில் என்ன சொல்வீர்கள்?***

தனிமனிதனாக முப்பதாயிரம் மக்களைக் கொல்லுமளவிற்கு சக்திவாய்ந்த பயங்கரவாதி ஒருவர் அல்லது அவ்வாறான பயங்கரவாதம் ஒன்று இருக்க முடியாது. இருந்தும் இது துருக்கியின் குற்றச்சாட்டுத்தான். துருக்கியிலும், குர்திஷ்தானிலும் மொத்த கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதை விட அதிகம். துருக்கியினால் ஒரு பக்கமாய் ஏவிவிடப்பட்ட யுத்தத்தின் எஞ்சிய பக்கம் இது. பலகாலமாய் யுத்த ஒழுங்கு சட்டம் மீறப்பட்டுக் கொ[illegible] கொஸோவாவில் அல்லது பொஸ்னியாவில் போன்று யுத்த விசாரணைகள் செய்யப்பட வேண்டும் என்று கோரப்படும் குர்தீஷ்தானில் அவ்வாறான ஒன்று இடம் பெறவேயில்லை. அமெரிக்காவும், ஐரோப்பாவும் இரட்டை நிலைப்பாட்டை (Double standard) இவ் விடயத்தில் கொண்டிருக்கிறது. ஆக, மக்களை யார் படுகொலை செய்து வருகிறார்கள் என்பது வெளிப்படையான விஷயம். 4000 கிராமங்கள் அளவில் குர்திய வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டிருக்கின்றன. 3000 அளவில் தீர்வுகாணப்படாத கொலைச் சம்பவங்கள் இருக்கின்றன. இதெல்லாம் Susurluk விசாரணைக் குழுவின் உத்தியோகபூர்வ அறிக்கைகள். இவற்றை பார்க்கும்போது படுகொலையாளர்கள் யாரென்பது புரிந்துவிடும்.

குர்திய மொழி தடைசெய்யப்பட்டிருக்கிறது. கலாசார ரீதியாக மட்டும் இந்த அழிப்பு இடம்பெறவில்லை. உடல் ரீதியாகவும், அழிப்பு நடந்திருக்கிறது. இதை எல்லாப் புத்திஜீவிகளும் ஏற்றும் கொள்கிறார்கள். குர்தியமொழி அழிப்பு இனத்துவேஷ அரசியலின் மீது மிகத்திட்டமிட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. குர்திய இனத்துவ அடையாளம் மறுக்கப்படுகிறது.

இது ஒரு மிக மோசமான மனித உரிமை மீறலாகும். அனைத்து வகை ஜனநாயக கோட்பாடுகள், கொள்கைகளுக்கு முரணானதாகும். ஒரு தேசத்தின் இருப்பை, அதன் அடையாளத்தை மறுப்பதைக் காட்டிலும் மிக மோசமான குற்றம் வேறொன்றுமிருக்க முடியாது.

பல்வேறு உத்திகளைக் கையாண்டு அரங்கேறிவரும் பல மனிதப் படுகொலைகளுக்கு நாங்கள் முகம் கொடுத்து வருகிறோம். இதெல்லாம் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். பொதுவாகவே அனைத்து யுத்தத்தங்களுக்கும் இரு பக்கங்களுண்டு. நாம் அதன் ஒரு பக்கத்தில் இருந்தால் அதன் மறுபக்கத்தில் இழைக்கப்படும் குற்றங்களை வெளிக்கொணருமாறு, அவற்றைக் கண்டுபிடிக்குமாறு நாம் கோருவோம். 'டிமாண்ட்' பண்ணுவோம். அமெரிக்காவிடமிருந்தும் ஐக்கிய நாடுகளிடமிருந்தும் நாம் எதிர்பார்ப்பதும் இதைத் தான். இதுதான் நேர்மையானதும், சரியானதும் கூட. என் மேல் மாத்திரம் குற்றஞ் சுமத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக குர்திஷ்தானுக்கான சர்வதேச சட்டக் குழுவொன்றை ஏன் அமெரிக்காவால் தோற்றுவிக்க

## "வன்முறை எதிர்த்தரப்பாலேயே கட்டவிழ்ந்து விடப்பட்டுக் கொண்டிருக்கையில் எங்களை மட்டும் ஆயுதங்களை கைவிடச் சொல்வது கேலிக்கூத்தாகும்"

**– குர்திஷ் தொழிலாளர் கட்சியின் தலைவர் அப்துல்லா ஒக்கலான்**



*ஒக்லானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய மக்கள்*

⇨

நன்றி - நூலகத்திட்டம்



முடியாதுள்ளது? எங்கள் எதிர்பார்க்கைக்கும் வரலாறு சட்ட மரபுகளுக்கும் இதுவே பொருத்தமானதாய் இருக்கும்.

1990ல் என்னைக் கைது செய்யும் பிடி-விறாந்தொன்றை ஜேர்மன் பிறப்பித்தது. நான் ஐரோப்பாவிற்கு வந்த பின்னரும் கூட இதை அமுல் படுத்தவில்லை. என் வருகையைப் பற்றி எந்த வேண்டுகோளும் விடுக்கவில்லை. இது ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும். இது ஒரு சிக்கலான விடயம் என்பது. என்னைக் கைது செய்து குற்றஞ்சுமத்த அவர்கள் தகுந்த ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதல்ல இங்குள்ள விடயம். அவர்கள் அரசியல் தீர்வுக்கான பாதையில் தடையாக இல்லாமலும், நிலைமையை மேலும் சிக்கலாக்காமலும் இருக்கிற ஒரு பாதைத் தெரிவு செய்தார்கள்.

**பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக நீங்கள் அறிக்கை விடுத்தீர்கள். இந்தச் சூளுரைப்பின் பின்னால் ஏதாவது நிபந்தனைகள் இருக்கின்றனவா?**

நாம் பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவேயில்லை. ஒரு அமைப்[illegible] வகையில் நாம் இராணுவ யுத்த முறை[illegible]க் கையாண்டது தனிப்பட்ட [illegible]வோ, கொடுங்கோலான மனம்போன காரணங்களுக்காகவோ அன்று. நாம் ஆயுதந்தூக்கியிருப்பது உண்மை தான். ஆனால், அது எம் மக்கள் மீது அரசு மேற்கொள்கிற பயங்கரவாதத்தை எதிர் கொள்வதற்கானதே. எங்கள் தனித்துவ அடையாளம், அரசியல், கலாசாரம், மொழித்துவ பாரம்பரியம் எல்லாம் அரச பயங்கரவாதத்தால் மிகக் குரூரமான முறையில் நசுக்கப்படுகின்றன. இப்பயங்கரவாதம் உடலார்ந்தது மட்டுமல்ல சிந்தனா ரீதியானதும், கலாசார ரீதியானதும் கூட. இவ்வுண்மைகளின் வெளிச்சத்தில் பார்க்கையில் எமக்கு இராணுவ யுத்த முறைமைகளைக் கையாள்வதைத் தவிர வேறு மாற்று இருக்கவில்லை. இவ்விடயம் மிகத் தெளிவான முறையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

"நாம் குர்திய தன்னடையாளத்தை ஏற்றுக் கொள்கிறோம். அவர்களின் தேசிய, ஜனநாயக உரிமைகளையும், அவர்களின் கலாசார உரிமைப் பாடுகளையும் ஏற்கிறோம். அவற்றை முழுமையாய் புரிந்து கொள்கிறோம்..." என துருக்கி இன்று கூடச் சொல்லுமானால் நாம் உடனடியாகவே ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு விடத் தயார். ஆனால், நடக்கும் மனிதப் படுகொலையையிட்டு என்ன செய்வது...? எந்தத் தேசம், எந்த மக்கள் தான் தங்கள் மொழியை விட்டுக் கொடுப்பார்கள்? அல்லது சொந்தக் கலாசாரத்தையே மறுப்பார்கள்? துருக்கி பலவந்தமான முறையில் செய்து வரும் இவைகளையெல்லாம் சர்வதேச உலகம் காது கொடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை. மேற்சொன்ன விடயத்தைவிட பெரும் பயங்கரவாதம் வேறொன்றுமிருக்காது. இதுவும் கூட தெளிவாக விளங்கிக் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

பயங்கரவாதிகள் என்ற எங்கள் மீதான எழுந்தமாறான முத்திரை குத்தல் நியாயமான (வா)தமல்ல. எல்லாவற்றுக்கும் முதலில் இவ்வகையான கருத்து திருத்தப்பட வேண்டும் என நினைக்கிறேன். எம் தேசத்தின் இருப்புக்கான இப்போதைய ஒரே வழி ஆயுதப் போராட்டமாகத் தான் இருக்கிறது. துருக்கி சமாதானமான முறையில் அரசியல் தீர்வு யோசனைகளை ஓரளவுக்காகினும் முன்னெடுக்குமானால் நாம் எம் ஆயுதங்களை களைந்து விடுகிறோம் என்பதை மீண்டுமொரு இங்கு சொல்லி வைக்கிறேன்.


அமெரிக்காவை இது விடயத்தில் ஒரு முன்னணியாகவும், ஐக்கிய நாடுகள் சபையை மத்தியஸ்தராகவும், ஐரோப்பிய யூனியனை கண்காணிப்புக் குழுவாகவும் இது விடயத்தில் காண விரும்புகிறேன். இது விடயத்தில் என்னுடைய கடப்பாட்டை, நம்பிக்கையை நான் உங்களுக்கு உறுதி செய்து தருகிறேன்.

வன்முறை எதிர்த்தரப்பாலேயே கட்டவிழ்ந்து [illegible]டுக் கொண்டிருக்கையில் எங்களை மட்டும் [illegible]களை கைவிடச் சொல்வது எங்களுக்கு மட்டும் நிபந்தனையிடுவது கேலிக்கூத்தாகும். நேட்டோவும், அமெரிக்காவின் அரசியல், பொருளாதார ஆதரவும் துருக்கிய அரசாங்க வன்முறையின் பின்னாலுள்ளது. இவ்வாறான ஆக்கிரமிப்புக்கான எதிர்ப்பு, உயிர்வாழ்வதற்கான இருப்புக்கான எங்கள் உரிமையாக இருக்கிறது. இவ்விடயத்தை மனிதாபிமான முறையிலும், ஒழுங்கான வழியிலும் பார்க்க வேண்டும்.

**உங்கள் அமைப்பினுள் நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டிய செயற்பாடுகள் என்றும். இனியும் அனுமதிக்க முடியாத செயற்பாடுகள் என்றும் ஏதாவது இருக்கின்றனவா?**

குர்திஷ் தொழிலாளர் கட்சியின் சில செயற்பாடுகள் ஒழுக்கம் சார் (Ethical) அங்கீகாரமின்மையுடையதாக இருக்கின்றது என்பதே நீங்கள் கேட்க விரும்பும் கேள்வியாகப்படுகிறது. கட்சி எடுக்கிற நிலைப்பாட்டில் அதன் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையிலும் நான் அதன்பாலே நிற்கின்றேன். அதில் பெரும் மதிப்பும் வைத்திருக்கிறேன்.

அமைப்பு குர்திய தேசிய ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் கோரி நிற்கிறது. இந்தக் கோரிக்கைகள் மனித இன அடிப்படை உரிமைகளாகும். இதை நானோ வேறெந்தத் தேசமோ கைதுறந்து விடமுடியாது. எங்கள் போராட்டத்தில் தனிப்பட்ட அடிப்படையிலான தளர்வான அணுகல்கள் இருக்கின்றன. இவை கூட விமர்சனங்களால் போக்கப்பட்டிருக்கின்றன. துருக்கிய அரசாங்கத்தால் தூண்டப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிற குறித்தளவான சிலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டும் வருகிறார்கள். ஏற்றுக் கொள்ளப்பட முடியாத செயல்களை நான் அங்கீகரிப்பதில்லை என்பதும், அதற்கு எதிராக இருப்பவன் என்பதும் யாரும் மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். குர்திஷ் தொழிலாளர் கட்சி பற்றி ஆழ்ந்து படிப்பவர்களுக்கு நான் கொண்டு செல்லும் போராட்டம் எப்படி என்று விளங்கும். சில விடயங்களை தீர்மானிப்பதாக தனிப்பட்டதும், மனம்போன போக்கிலானதுமான "குர்திய இயல்பு" இருப்பினும் கூட தேவையில்லாத முறையில் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்க்க ஏதாவது வழியிருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். உதாரணத்திற்கு தெற்கில் (வட ஈராக்கில்) 'பர்ஸானி', 'தலபானி' ஆகியவை முன்னெடுத்த போராட்டங்களின் போது தேவையற்ற முறையில், ஆயிரக்கணக்கான குர்திஷ் மக்கள் இறந்தனர். இருந்தும் கூட, இன்னுமிருக்கிற இவ்வாறான உச்ச பிரச்சினைகளைக் கூட நாம் சரியான முறையில்



அணுகவில்லை என்று தான் கருதுகிறேன். அண்மையில் தான் நாம் இவ்வாறான பொதுமக்களுக்கெதிரான செய்கையில் ஈடுபடுவோரை, அதற்குப் பொறுப்பானவர்களை தண்டிக்கிற வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். உண்மையில் இந்த விடயங்களை நாம் புலனாய்வு செய்யவும்

'நாம்குர்திய தன்னடையாளத்தை ஏற்றுக் கொள்கிறோம். அவர்களின் தேசிய, ஜனநாயக உரிமைகளையும், அவர்களின் கலாசார உரிமைப் பாடுகளையும் ஏற்கிறோம். அவற்றை முழுமையாய் புரிந்து கொள்கிறோம்...' என துருக்கி இன்று கூடச் சொல்லுமானால் நாம் உடனடியாகவே ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு விடத் தயார். ஆனால், நடக்கும் மனிதப் படுகொலையையிட்டு என்ன செய்வது... எந்தத் தேசம், எந்த மக்கள் தான் தங்கள் மொழியை விட்டுக் கொடுப்பார்கள். அல்லது சொந்தக் கலாசாரத்தையே மறுப்பார்கள். துருக்கி பலவந்தமான முறையில் செய்து வரும் இவற்றையெல்லாம் சர்வதேச உலகம் காது கொடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை. மேற்சொன்ன விடயத்தைவிட பெரும் பயங்கரவாதம் வேறொன்றுமிருக்காது. இதுவும் கூட தெளிவாக விளங்கிக் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

வேண்டியுள்ளது. ஏனெனில், இவ்வாறான செய்கைகள் போராட்டத்தினை களங்கப்படுத்துவது மட்டுமல்லாமல் கட்டுங்கடங்காத, கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலைமையையும் தோற்றுவித்துள்ளது. இவ்வாறான காரணங்களுக்காகவே நாம் அங்கீகரிக்கப்படாத செயல்களை / குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்யாது அதிலிருந்து தவிர்வதற்கான ஆரம்பப் படிகளை எடுத்திருக்கிறோம். அத்துடன் போர் இன்னும் தொடர்கிற ஒரு நிலை இருக்குமானால், அப்போர் ஒழுங்கான சட்ட அடிப்படையில், நீதியான முறையில் தொடர்வதற்கான உத்தரவாதத்தையும் நாம் வழங்கியிருக்கிறோம். இந்தச் செயற்பாட்டுக்கான முன்னெடுப்புக்களை நாம் வெற்றிகரமான முறையில் அமுலுக்கு கொண்டு வந்துள்ளோம். இருந்தும் துருக்கிய அரசின் படுமோசமான யுத்தக் கையாள்கை மிகுந்த அச்சுறுத்தல் தருவதாயுள்ளது. அது எந்த யுத்த ஒழுங்கையும் பின்பற்றுவதாகவோ, மதிப்பதாகவோ தெரியவில்லை. குர்திஷ்தானில் துருக்கி யுத்தக்களங்கத்தை ஏற்படுத்துகிற ஒரு போரைத்தான் செய்து வருகிறது என்று தான் சொல்ல வேண்டும். இது விடயத்தில் உங்கள் கவனம் திரும்ப வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த உண்மைகளை நான் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுவவும் தயங்க மாட்டேன். 'சர்வதேச நிரலில்' குர்திஷ் பிரச்சினையும் ஒரு விடயமாக முன்வைக்கப்படுமானால் நாங்களும் அரசியல் ஞானோபாயத்தினூடாக அதில் அக்கறைப்படத் தயாராகவே இருக்கிறோம். அது எமக்கொரு ஆறுதலாகவும் இருக்கும். அப்படி நடந்தால் நான் துருக்கிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு முன்னுரிமையளிப்பேன். ஏனென்றால், அதுதான் துருக்கியின் உள்ளேயும், வெளியேயும் இருக்கிற பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தருவதாய் இருக்கும். இருக்கின்ற துருக்கியின் எல்லைகளுக்குள்ளேயே ஜனநாயகக் கோட்பாடுகளுடன் கூடிய வகையில் துருக்கிய அரசாங்கத்தை மறுசீரமைக்கக் கூடிய வகையிலான தீர்வொன்றுக்கு அழுத்தம் கொடுப்பேன். பன்மைத்துவ/ பன்முகத்தன்மையான ஜனநாயக வழிமுறைகள் மூலமே குர்திஷ் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியும். இந்த நோக்கை அடைய துருக்கியிலும், சர்வதேச அளவிலும் இருக்கின்ற ஜனநாயக சக்திகளின் ஆதரவை நான் கோருகிறேன்.

இதுதான் என் தற்போதைய அணுகல்/ தந்திரோபாயம். நான் வைத்த முன்னெட்டுக்கள் வெற்றிபெறும் என்பது, என் நம்பிக்கை. சந்தேகமின்றி, எம் போராட்டம் தொடரும். அதாவது குர்திஷ் போர் 2000தையும், அதையும் தாண்டியும் செல்லலாம். எவருக்கும் இதன் மூலம் எதுவும் கிடைக்காது. அத்தோடு மத்திய கிழக்கின் சமாதான முன்னெடுப்புக்களும் தாமதமாகலாம்

**விரைவில் துருக்கியுடனான பேச்சுவார்த்தையொன்றை எதிர்பார்க்கிறீர்களா?**

உண்மையைச் சொல்வதானால், துருக்கிக்கு இப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமான ஒரே மாற்றுவழி அரசியல் பேச்சுவார்த்தை தான். அது தவிர குர்திஷ் பிரச்சினையைத் தீர்க்கும் வேறு வழியிருக்க முடியாது. அத்துடன் துருக்கி என்றுமில்லாதவாறு கடுமையான பிரச்சினைகளை எதிர் நோக்கும் காரணமும் இதுதான்.

உங்கள் கேள்விக்கு பதிலளிக்கையிலே பல முறை சுட்டிக் காட்டியது போல், இந்தப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காணவே நான் முழு முயற்சி எடுத்துக் கொண்டு ஆர்வமாயிருக்கிறேன். இது ஒரு முடிவைப் பெறவேண்டும் என்பதற்காக எம் கோரிக்கையைக் கூட ஒரு தாழ்ந்த அளவிற்கே வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். உதாரணத்திற்கு எல்லைகளுக்குள்ளே இருக்கிற இராணுவ நிலைமைகளை கருத்திற் கொண்டு நான் யுத்த நிறுத்தமொன்றையும், துருக்கியுடனான பேச்சுவார்த்தையையும் முன் மொழிந்தேன். ஆனாலும் கூட துருக்கி தன் இராணுவ பலத்தில் மிகை நம்பிக்கை வைத்த நிலையில் குர்திய அடையாளத்தை மறுத்து வருகிறது. இது அநீதி! எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றது. இவ்வாறான தந்திரோபாயம் விஷேச நலன் குழுக்களைத்தான் (special Intrest Groups உருவாக்கும். அவைகள் யுத்த நீட்சியிலேயே பிழைத்துக் காலந்தள்ளும். இது யாருக்கும் பயன் தராது. சர்வதேச மக்கள் அபிப்பிராயத்தின் கவனத்தைக் கோரும் என் இறுதி முயற்சிகளிலும் அடி எடுத்து வைத்துள்ளேன். அத்துடன் துருக்கியின் ஒரு தலைப்பட்சமான இராணுவத் தீர்வை சர்வதேச சக்திகள் தடுத்து நிறுத்தும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன். நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா போன்றவை தாங்கள் துருக்கிக்கு அளித்துவரும் உதவிகளை நிறுத்துமானால் நாம் துருக்கியுடனான அரசியல் தீர்வொன்றை நடைமுறைச் சாத்தியமாக்கிப் பார்க்கலாம். அதுதான் தகுந்த நடவடிக்கையாகவும் இருக்கும்.

**குர்திஷ் தொழிலாளர் கட்சி உத்தியோகபூர்வமாக பிரதிநிதித்துவப்படுத்தாத ஒரு பேச்சுவார்த்தைக்கு நீங்கள் ஆதரவளிப்பீர்களா?**

இங்கு முக்கியமானது குர்திஷ் தொழிலாளர் கட்சியின் இலக்குகள். குறிக்கோள்கள் தான். குர்திஷ் பிரச்சினை சீரியஸான முறையில் பேச்சுவார்த்தைக்குட்பட்டு, குர்தியர்களின் பங்களிப்புடன் சில முன்னேற்றங்களைக் கொண்டு வருமாயின் குர்திஷ் தொழிலாளர் கட்சி உத்தியோகபூர்வமாக கலந்து கொள்வது கூடத் தேவையில்லை. நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியது போல் துருக்கி குர்திஷ் தொழிலாளர் கட்சியுடனோ அதன் தலைமைகளுடனோ பேச மறுத்தால் கூட அது ஒரு பெரிய விடயமல்ல. எல்லா அமைப்புகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். இது சாத்தியமானது. ஏற்கெனவே வட குர்திஷ்தானின் அரசியற் கட்சிகள் இவ்வாறான பிரதிநிதிகள் குழுவொன்றை அமைக்க வேண்டுகோள் விடுத்துள்ளது. குர்திஷ் தொழிலாளர் கட்சி இது விடயத்தில் நல்ல பங்களிப்பைச் செய்யும்.

யாரில்லாவிட்டாலும் இந்தக் குழுவுடன் அமர்ந்திருக்க வேண்டியது துருக்கி. நாம் பின்னாலிருந்தாலும் கூட எம் ஆதரவை வெளிப்படுத்துவோம். எப்படியிருப்பினும் இது விடயத்தில் எமது பங்களிப்பு அவசியமானது என்று நம்புகிறேன்.

தமிழில் : எம்.கே.எம். ஷகீப்.

## இலையுதிர் காலத்தை நேசித்தல்

இந்த இலையுதிர் காலத்தின் இறுதி
எமது உரிமை.
எங்கள் உடல்கள் நிலக்கரிபோல
கிடத்தப்படுவது
மற்றுமொரு இலையுதிர் காலத்திலா?

இக்காலம் தனது
இலைகளைத் தங்கமென உதிர்க்கிறது.

நாங்கள் விரும்புவது அத்திமர இலைகள்
பட்டுப்போன செடிகளாயிருந்து
பருவகாலங்களைத் தரிசிக்க
விரும்புகிறோம்.

எமது தந்தையர்
ஈட்டியின் முனைகளில் அமர்ந்து கேட்டதை
நாங்கள் கேட்க இயலாது.

கடவுளும் காகிதமும்
எம்மிடம் கருணையுள்ளவை
எமது பெண்களின் உலர்ந்த இரவுகள்

திசைகாட்டியை அடைவதற்கு
வடக்கே தவம் கிடக்கும்
இரு வழிப்போக்கர்களின் இரவை
எது சுருக்குகிறது
என்று பேசினோம்

இலையுதிர்காலத்தை நுகர்ந்து
இரவை ஒரு கனவைக் கேட்டோம்.

ஒரு கனவு
கனவாளிகளைப் போல பிணியானதா?
ஜனங்கள்
கில்லட்டினிலிருந்து பிறக்க முடியுமா?

நாங்கள் எப்படிச் சாக விரும்புகிறோமா
அப்படியே.

கோதுமையின் காதுகளில்
பொத்திக் கொள்ளட்டும் உமி

## நெற்றியும் கோபமும்

எனது தாய் தேசமே
எனது மரச் சட்டங்களுக்கிடையில்
என் கண்களில்
தீயின் அலகைச் சொருகும் கழுகே.

சாவின் பிரசன்னத்தில்
நான் கொண்டிருப்பவையெல்லாம் என்
நெற்றியும் கோபமும் தான்.

எனது உயிலில் நான் வேண்டிக்
கொண்டிருக்கிறேன்
எனது இதயம் ஒரு மரமாக நடப்பட
வேண்டும்
எனது நெற்றி
வானம்பாடியின் வீடாக ஆக வேண்டும்.

ஹோ கழுகே
உனது சிறகுக்கு நான் தகுதியில்லை
தீயின் மகுடமாக நான் விழைகிறேன்
என் தேசமே!

நாங்கள் பிறந்தோம்
உனது காயங்களில் நாங்கள் வளர்ந்தோம்
கடுவாலிக் கொட்டையைப் புசித்தோம்

உனது சிறகுகளின்
இறகடிப்பை நாம் சாட்சியமாயிருந்து
பார்த்தோம்

ஹோ கழுகே
காரணமற்று அரையுயிராய்
விலங்கிடப்பட்டிருக்கும்
என் தேசமே
நேசிக்கப்பட வேண்டிய காவிய மரணமே.

உனது சிவந்த அலகு
தீயின் வாளாக என் விழிகளில் இன்னும்
இருக்கிறது.
உனது சிறகுக்கு நான் தகுதியில்லை
சாவின் பிரசன்னத்தில்
நான் கொண்டிருப்பதெல்லாம் என்
நிமிர்ந்த
முநெற்றியும் கோபமும் மட்டும் தான்.

மொஹமத் தார்வீஷ்

நன்றி: 25 கவிதைகளும் 500 காவன்டோக்களும்

நன்றி - நூலகத்திட்டம்





# வவுனியா: இறந்தது யார்?

கடந்த மாதம் 26 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் மேற்குக் கரையோரப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ 4 இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்தால் கொல்லப்பட்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்பட்ட 36 சடலங்கள் கடல் வழியாக 28 ஆம் திகதி பள்ளிமுனைக்குக் கொண்டு வரப்பட்டு மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அன்றைய தினம் மாலை மேலும் ஒரு சடலம் புலி உறுப்பினருடையது எனத் தெரிவித்து மன்னார் வைத்தியசாலையில் பொலிசாரின் ஊடாக இராணுவத்தினால் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலங்களில், ஒரு சடலம் அதாவது 37 ஆவது சடலம், ஏற்கனவே அனுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட 30 இராணுவ சடலங்களுடன் கொண்டு செல்லப்பட்டது என்றும், அது விடுதலைப் புலிகளின் சடலம் என அனுராதபுரத்தில் அடையாளம் காணப்பட்டு, (அதாவது இந்தச் சடலம் இராணுவத்தினருடையது அல்ல என்று இனம் காணப்பட்டதை அடுத்து) அவசர அவரசமாக மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த 37 சடலங்களும் கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் மன்னார் பொது

மயானத்தில் தனியாக அடையாளமிடப்பட்ட ஓரிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சடலங்களே இவை எனக் கூறப்பட்ட போதிலும், அவற்றைப் பொறுப்பேற்று, வன்னிப் பகுதிக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கொண்டு செல்ல, ஏதோ காரணத்திற்காக மறுத்து விட்டார்கள். இதனையடுத்தே, அவைகள் அனைத்தும் மன்னாரில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டு, அடக்கம் செய்யப்பட்ட இடத்தின் வரைபடம் மன்னார் நீதிமன்றத்தில் ஆவணமாகப் பத்திரப்படுத்தப்பட்டது.

இப்போது, மன்னார் நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற இந்த 37 சடலங்கள் மீதான மரண விசாரணைகளில் பல்வேறு முரண்பட்ட தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. முன்னர் அனுராதபுரத்தில் புலி உறுப்பினருடைய சடலம் என இனம் காணப்பட்டு, அங்கிருந்து மன்னாருக்குக் கொண்டு வரப்பட்ட 37 ஆவது சடலம் இராணுவ சிப்பாய் ஒருவருடையது என்று இப்போது உரிமை கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில், மன்னார் பதில் நீதிவான் கயஸ் பெல்டானோ முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின் போது, இந்தக் கோரிக்கை பற்றி இராணுவ தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் பதில் நீதிவான் கயஸ் பெல்டானோ, நீதிமன்ற நடைமுறைகளுக்கு அமைய, நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து நீதிபதியின் உத்தரவுக்குப் பின்னரே, அந்தச் சடலம் பற்றி ஏதாவது முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த ஆலோசனையின் படி, பாப்பாமோட்டை பகுதியில் உள்ள இராணுவ முகாமின் தளபதி கேணல் ஜயவர்தன என்பவர் மன்னார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த விண்ணப்பம் ஏற்கப்பட்டு, செவ்வாய்க்கிழமை அந்த 37 ஆவது சடலம் மன்னார் மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் தோண்டிஎடுக்கப்பட்டது.

இச்சடலம் 4ஆவது கெமுனு காவல் படையணியைச் சேர்ந்த சிப்பாய் நளின் பெரேரா என்று அடையாளம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இந்தச் சடலத்தைத் தோண்டி எடுப்பதற்கான உத்தரவு மன்னார் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகிய இந்தச் சடலத்தைத் தோண்டும் நட்வடிக்கை பிற்பகல் 4 மணி வரையும் நீடித்துள்ளது. இந்தச் சடலத்தைக் கண்டு பிடிப்பதற்காக, 37 சடலங்களில் 8 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இந்த குறிக்கப்பட்ட 37 ஆவது சடலத்தின் கழுத்தில் ஒரு திறப்பும், தாயத்து ஒன்றும் நூலில் கட்டப்பட்டிருந்ததாகவும், வயிற்றில் வெள்ளை பண்டேஜ் ஒன்று இருந்ததை தான் அவதானித்திருந்ததாகவும் மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இந்த அடையாளத்தையும், 8ஆவது கெமுனு படை அணியைச் சேர்ந்த இராணுவ பிரைவேட் சமணசிறி அடையாளம் காட்டியதைத் தொடர்ந்தும் குறிப்பிட்ட சடலம் 37 ஆவது சடலம் என்பதை மன்னார் நீதிமன்றம் முடிவெடுத்து, அதனைத் இராணுவத்திடம் அது ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட அடையாளங்களைக் கொண்டு, 37 ஆவது சடலம் நளின் பெரேரா என்பவருடையது என்று இராணுவ தரப்பினர் உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இதனையடுத்து, இந்தச் சடலம் 8 ஆவது கெமுனு காவல் படையணியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலத்தைத் தோண்டுவதற்காக பாப்பாமோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த சுமார் 200 இராணுவத்தினர் மயானப்பகுதியில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

பாப்பாமோட்டை பகுதியில் நடைபெற்ற சண்டைகளிலும், பெரியமடு பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளிலும் கொல்லப்பட்ட 30 சடலங்கள் அனுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போது, புலியாக இருந்த ஒரு சடலம் பின்னர், எப்படி இராணுவ சடலமாக மாறியது என்பது புதிராகவே உள்ளது.

ஏனைய 36 சடலங்களும் கூட, பொதுமக்களுடையவை என்ற அபிப்பிராயமும் பல மட்டங்களில் இன்னும் நிலவுகின்றது.

இப்போதைய மரண விசாரணைகளின் போது, மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட வைத்திய பரிசோதனைகளின் அறிக்கைக்கும், அச்சடலங்களை மன்னார் வைத்தியசாலை சவ அறையில் பார்வையிட்ட மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எடுத்திருந்த அவதானக்குறிப்புகளுக்கும் வித்தியாசம் இருப்பது நீதிமன்ற வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவ பொலிஸ் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் சமூகமளித்திருந்த வேளையிலேயே, மன்னார் பதில் நீதிவான் கயஸ் பெல்டானோ இந்த அவதானக்குறிப்புகளை எடுத்துள்ளார்.

இந்த 37 சடலங்களில் 28 பெண்களுடையவை என்றும், 9 ஆண்களுடையவை என்றும் அவதானிக்கப்பட்டிருந்தது. 37 சடலங்களில் பாதி சடலங்கள் முழு நிர்வாணமாக இருந்துள்ளன. இவற்றில் 6 சடலங்கள் இராணுவ சீருடைக்கு ஒத்த சீருடையை அணிந்திருந்தது கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது. ஏனைய சடலங்களில் இருந்த ஆடைகள் எவ்விதமான உடைகள் என மதிப்பிட முடியாமல் இருந்தது. அத்துடன், இராணுவ சீருடைகள் சேதமுறாமல் அவசரமாக அணியப்பட்டது போன்று தோற்றமளித்ததாகவும், ஆடைகள் கழற்றப்பட்டு, கொல்லப்பட்ட பின்னர் இந்த இராணுவ சீருடைகள் அணியப்பட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இருந்ததாகவும் அவருடைய குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையில் 37 சடலங்களும் இராணுவ சீருடை, காக்கி உடை மற்றும் கொமாண்டோக்கள் அணியும் உடைகள் அணிந்திருந்த நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில் நீதிவானுடைய அவதானக் குறிப்புகளுக்கும், வைத்திய அறிக்கைக்கும் இடையே காணப்பட்டுள்ள பல வித்தியாசங்கள், வைத்திய அறிக்கையைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளதாகவே தெரிகின்றது.

மரண விசாரணைகள் இன்னும் முழுமையாக முடிவடையவில்லை. இந்த விசாரணைகள் முடிவடையும் வேளையில் மேலும் பல முரண்பாடுகளும், சடலங்கள் பற்றிய புதிய தகவல்களும் வெளியாகலாமோ என்ற எதிர்பார்ப்பும் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் உள்ளது.


இந்தச் சடலங்கள் யாவும், உண்மையில் யாருடையவை என்பது குறித்து பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. பாப்பாமோட்டை, பெரியமடு பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள், சண்டைகளின் பின்னர் வன்னிப்பகுதிக்கான பாதை மூடப்பட்டுள்ளது. வன்னிப்பகுதி நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து இப்போது முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்களில் எத்தனை பேர் இந்தச் சடலங்களில் இருக்கின்றார்கள் என்பதைப் பற்றிக் கூற முடியாமல் உள்ளது.

இந்தச் சடலங்கள் 36உம் புலிகளுடையவை என்றால், இவற்றை விடுதலைப் புலிகள் ஏன் பொறுப்பேற்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. பொதுமக்களுடையவை என்றால், யார் அவர்கள் என்ற கேள்வியும் எழுகின்றது.

அனுராதபுத்தில் புலி உறுப்பினருடைய சடலமாகத் தெரிந்த சடலம் மன்னாருக்குக் கொண்டு வந்த பின்னர் எப்படி இராணுவ சடலமாக மாறியதோ, அப்படி விடுதலைப் புலிகளுடையவை என்று இராணுவத்தால் மட்டும் கூறப்பட்ட இந்தச் சடலங்கள் பொதுமக்களுடையவையாகவும் இருக்கலாம் என்று சந்தேகப்படுவதில் எவ்விதமான தவறும் இல்லை அல்லவா?

எதற்கும் மரண விசாரணைகள் முழுமையாக முடிவடையும் வரை மட்டுமல்லாமல், வன்னிப்பகுதிக்கான பாதை ஒன்று திறக்கப்பட்டு, அப்பகுதி மக்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வரத் தொடங்கும் வரையும் பொறுத்-திருக்கத் தான் வேண்டும்.

**…ஏனைய 36 சடலங்களும் கூட, பொதுமக்களுடையவை என்ற அபிப்பிராயமும் பல மட்டங்களில் இன்னும் நிலவுகின்றது……**



- துரை

**மர்வான் மாக்கான் மாக்கார் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர். அண்மையில் முஸ்லிம் மக்களின் அரசியல் நிலை தொடர்பாக மோர்ஜ் ஒழுங்கு செய்த கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு அவர் ஆங்கில மொழியில் ஆற்றிய உரையின் சுருக்க மொழிபெயர்ப்பு இங்கு வெளியிடப்படுகிறது. முஸ்லிம் மக்களிடையே நிலவும் மூன்று வித்தியாசமான போக்குகளை சுட்டிக்காட்டும் மாக்கான் மாக்கார், இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இவ்வித்தியாசங்கள் அடையாளம் காணப்படுவது அவசியம் என்று இவ்வுரையில் வலியுறுத்துகிறார்.**

ஆ-ர்

# முஸ்லிம்களின் இரண்டக நிலை!

(The Muslim Dilemma)

## மர்வான் மாக்கான் மாக்கார்

- தமிழில்: அருண்

இலங்கை முஸ்லிம்களில் பெரும்பகுதியினரிடையே இன்னமும் சல்மான் ருஷ்டி ஒரு இழிவான பிரகிருதியாகவே கருதப்பட்டு வருகிறார். 1997 நவம்பர் மாதத்தில் லண்டன் பி.பி.சியினர் அவரது நாவலான Midnight Children (நள்ளிரவுச் சிறுவர்கள்)ஐ இங்கு திரைப்படமாக எடுப்பதற்கு முயன்ற போது அவருக்கு எதிராக எழுந்த பலத்த கூட்டு எதிர்ப்புத்தான் அவருக்கெதிரான இறுதியான கூட்டு எதிர்ப்பாகும். இப்படியான ஒருமித்த எதிர்ப்புச் சம்பவம், இலங்கை வாழ் இரண்டாவது பெரிய சிறுபான்மை இனமான முஸ்லிம்களிடையே ஒரு இறுக்கமான ஐக்கியம் நிலவுகிறதாகக் காட்டவும், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிற பிரச்சினைகளில் இந்த ஐக்கியம் தொழிற்பட்டு அவர்களது குரல் ஒரு ஒருமித்த ஒற்றைக் குரலாக வெளிப்படும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் கூடும்.

ஆனால், இது உண்மைதானா என்று அறிய வேண்டுமானால் இத்தகைய சம்பவங்களுக்கு மேலாக தனது கவனத்தை ஒருவர் குவித்துக் கொள்ள வேண்டும். இன்றைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னஎன்பதை அறிய ஆர்வமுள்ளவர்களுக்கு இது மிகவும் அவசியமாகும். அப்படி கூர்மையாக ஒருவர் அவதானிப்பாரானால், மேலோட்டமாகத் தான் காண்கிற விடயங்களுக்குப் புறம்பான ஒரு படத்தை அவரால் அவதானிக்க முடியும்: முஸ்லிம்களின் மரபுசார் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், மதச்சடங்குகள் தொடர்பாக நிலவிவரும் ஒரு ஒற்றைத் தன்மையான பிம்பத்திற்கும்



உண்மைக்குமிடையில் ஒரு நீண்ட இடைவெளிளையை அவரால் காண முடியும்.

உள்ளூர் அரசியலைப் பொறுத்த வரையான முஸ்லிம்களின் மனப்பாங்கை எடுத்துக் கொண்டால் இந்த வேறுபாடு குறிப்பாகத் தெரியும். தீர்க்கப்படாமல் உள்ள இனப்பிரச்சினை தொடர்பான விவாதங்களில் அது நன்றாக வெளிப்பட்டும் இருக்கின்றது. உதாரணமாக கடந்த 20 ஆண்டு காலத்துள் நான் முஸ்லிம் சமூகத்தில் மூன்று விதமான ஒன்றுக்கொன்று வேறுபட்ட - குரல்களை அடையாளம் கண்டிருக்கிறேன். அவை ஒவ்வொன்றும் முஸ்லிம் மக்களுக்காக பேசுவதாகக் கூறும். இம்மூன்றும் தாம் கூறும் கருத்துக்களே அச்சமூகத்திற்குரிய மிகச்சிறந்த கருத்துக்கள் என்று கருதுகின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்துவமானவையாகவும், ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டதாகவும் கருதுகின்றன. அவை தாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் விரும்புகின்றன.

இன்றைய கலந்துரையாடலில் இம்மூன்று குரல்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதும், அவற்றை அடையாளம் கண்டு கொள்ளவும், அவை ஒவ்வொன்றும் யாரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று அறிந்து கொள்ளவும், அவற்றை இனங்காட்டும் முக்கியமான அம்சங்கள் எவை என்று வெளிப்படுத்துவதே எனது பங்களிப்பாக அமையும். எனது இந்த உரை, நான் இவ்விடயம் தொடர்பாக வாசித்தவைகள், நான் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் வடக்கு -கிழக்குக்குப் பயணித்த போது சேகரித்த தகவல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக, இன்றைய சிவில் யுத்தத்தை மனித உரிமை நோக்கில் நோக்குபவன் என்ற முறையில் நான் கொண்டுள்ள கருத்துக்களை ஒட்டியதாக அமையும்.

80களின் நடுப்பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் உருவாகும் வரையில் முஸ்லிம் சமூகத்திற்காக எழுப்பப்பட்டு வந்த ஒரு குரல் தான் மேட்டுக்குடியினரான நாட்டின் மேற்குப் பகுதியைத் தளமாகக் கொண்டிருந்தவர்களால் எழுப்பப்பட்ட குரல் தான் அது. இந்தக் குரலை எழுப்பியவர்கள் ஐ.தே. க. அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாவார். உதாரணமாகச் சொல்வதானால் 17 ஆண்டுகால ஐ.தே.க. ஆட்சியில், முஸ்லிம்களின் தலைவர் என்ற பெயரைச் சுமந்து வந்தவர் ஐ.தே.கவின் சிரேஷ்ட அமைச்சராக இருந்த எம்.எச். முகமட் அவர்கள் தான். அதற்கு முன்பு ஸ்ரீ.ல.சு.க. காலத்தில் இப்பெயருக்கு காரணமானவர் அதேபோன்ற சிரேஷ்ட அமைச்சர் பதவி வகித்த பதியுதீன் மஃமூத் அவர்கள். இவர்களுக்கு முந்தியவர் சேர் ராஷிட் ஃபரீட்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்து மேலே சொன்னவர்கள் கொண்டிருந்த அபிலாஷைகள் பெருமளவுக்கு வேறுபட்டவையல்ல. சிங்களம் மட்டும் சட்டம் 1956ல் கொண்டு வரப்பட்டு அது ஒரு எரியும் பிரச்சினையாக இருந்த போது, இவர்கள் கொண்டிருந்த அபிலாஷைகளிற்கான கண்ணோட்டத்தின் தந்தையாக ஃபரீட் இருந்தார். எல்லா முஸ்லிம்களாலும் பேசப்படும் மொழியாகத் தமிழ் இருந்த போதும், தமிழர்களைப் போலவே இந்தச் சட்டம் முஸ்லிம்களையும் தாக்கும் என்று தெரிந்திருந்த போதும் அவர்களை ஒரு பிரதி கூலமான நிலைக்கு ஓரிரவிலேயே அது தள்ளி விடப் போகிறது என்ற போதும் ஃபரீட் இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். தான் இப்படி வாக்களித்ததை நியாயப்படுத்தி பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார், "எங்களுக்கு எந்த எசமானரும் தேவையில்லை. ஆனாலும், அப்படி ஒரு எசமான் இருந்து தான் ஆகவேண்டுமானால், அது ஒரு எசமானாக இருக்கட்டும். அந்த எசமான் சிங்களவராக இருக்கட்டும். நாங்கள் அவர்களிற்கு சேவை செய்யத் தயாராக உள்ளோம்".

இவ்வாறு சிங்கள சமூகத்திற்கு கீழ்ப்பட்ட ஒரு சமூகமாக இயங்குவதற்கு தயாரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு மாற்றீடாக முஸ்லிம் தலைமைத்துவம், சமூகத்தின் மத அடையாளத்தை வலுப்படுத்தக் கூடிய விதத்திலான கோரிக்கைகளை முன்வைத்தது. ஃபரித்தின் இந்த நிலைப்பாடு தொடர்பாக அண்மையில் கத்ரி இஸ்மாயில் எழுதிய கட்டுரை ஒன்றில் கீழ்வருமாறு குறிப்பிட்டார்: "இந்தச் செயலில் ஒரு (தென் பிராந்திய) முஸ்லிம் அடையாளத்தை - கிழக்கு முஸ்லிம்களை வெளியொதுக்கிய அடையாளத்தை உருவாக்கும் நடவடிக்கையை ஒருவரால் இனங்கண்டு கொள்ள முடியும். ஏனென்றால், கிழக்கு முஸ்லிம்கள் பெருமளவுக்கு தமிழ் மொழிக்கு நெருக்கமானவர்களாக இருந்தார்கள்" பிரதான அரசியல் கட்சிகளில் இருந்த பிற முஸ்லிம் தலைவர்களும், ஃபரீத்தின் இந்தப் பாதையைப் பின்பற்றுவதை சௌகரியமான ஒன்றாகக் கருதினார்கள்.

இன்று இந்தப் போக்கு ஏ.எச்.எம். பௌசி போன்ற அரசு சார்பாளர்களிலும், இம்தியாஸ் பாக்கீர் மக்கார் போன்ற ஐ.தே.க.வினர்களிலும் தெளிவாக வெளிப்படுகிறது. அதிகாரப் பகிர்வு விவாதம் மோதலுக்கு வரும் போது அவர்கள் ஐக்கியம் பற்றியும், பல் கலாசாரத் தன்மை பற்றியும் பேசுகிறார்கள். முஸ்லிம்களுக்காக ஒரு தனி மாகாணம் பிரித்தெடுக்கப்படுவதை அவர்கள் எதிர்க்கிறார்கள். முஸ்லிம்கள் எந்தச் சிக்கலுமின்றி சிங்களவர்களுடன் ஒற்றுமையாக பல இடங்களிலும் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்று அடிக்கடி அவர்கள் சொல்லுவார்கள். சிங்களவர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு தீர்வுக்கு அவர்கள் எப்போதும் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால், கிழக்கிலுள்ள முஸ்லிம்களோ தமக்கென ஒரு தனியான கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். இது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பினால் தெரிவிக்கப்படும் கருத்துக்களில் தெளிவாக வெளிப்படுகிறது. அங்குள்ள முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள யதார்த்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்த வேறுபாடு பெரிதும் அமைந்துள்ளது. அவர்களது தாய் மொழி தமிழாக இருக்கிறது. அவர்கள் கல்வி கற்றமொழி தமிழ் மொழியாக இருக்கிறது. அவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்ள உதவும் மொழியாகவும் அதுவே இருக்கிறது என்பது இதற்கான ஒரு காரணமாகும். தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, தமிழர்கள் என்ன உணர்ந்தார்களோ அதே உணர்வினைத் தான் அங்குள்ள முஸ்லிம்களும் உணர்ந்தார்கள். தாம் தமது முஸ்லிம் தலைவர்களால் கைவிடப்பட்டு விட்டதாக அவர்கள் அன்று உணர்ந்ததில் வியப்படைய எதுவும் இல்லை. இது, தமிழர்களை அதிகமாகக் கொண்ட வடக்கு. கிழக்கின் சுயாட்சிக்காக போராடிய தமிழ்க் கட்சிகளுடன் சொற்ப காலம் ஏன் அஷ்ரஃப் இணைந்திருந்தார் என்பதை விளக்குகிறது. 1975ல் கொண்டுவரப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் சார்பில் ஒரு பிரதிநிதியாகக் கலந்து கொண்டு அஷ்ரஃப் கையொப்பம் இட்டிருந்தார். இத்தகைய கலப்பு நிகழ்வுக்கு காரணம் அவர்கள் பொதுவான ஒரு மொழியைப் பேசியதும், அப்போது தமிழ் பேசும் சமூகத்தின் கோரிக்கைக்கு ஒரு அரசியல் தீர்வு போதுமான பரிகாரமாக இருந்திருக்கும் நிலை நிலவியதுமே காரணங்களாகும்.

ஆனால், அந்தக் கூட்டு நீண்டகாலம் நிலைக்கவில்லை. தமிழர்கட்கும் முஸ்லிம்கட்குமிடையில் பிணக்குகள் உருவாகின. தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களிடமிருந்து பணம் பறிமுதல் செய்வதன் காரணமாக இப்பிணக்கு ஏற்பட்டது. இது, அரசியல் கலாசாரத்தில் ஒரு புதிய முஸ்லிம் சிந்தனையை உருவாக்க ஏதுவாக அமைந்தது. தமிழர்கட்கும் முஸ்லிம் கட்குமிடையிலான வேறுபாடு எப்படி வெளிப்பட்டதென்றால், முஸ்லிம்கள் தமிழர்களை தமது சகோதரர்களாக - பொதுவான பிரச்சினைகளில் - சகோதரர்களாகப் பார்க்கும் தன்மையைக் கைவிடும்



போக்காக வெளிப்பட்டது.

இதற்கு மேலும் துணை சேர்ப்பதுபோல, வெடித்துக் கிளம்பிய பிரச்சினைகளின்போது தாம் பாதிக்கப்படுவதாகவும், தமக்காக குரலெழுப்ப யாரும் இல்லை என்றும் முஸ்லிம்கள் எண்ணத் தலைப்படவுமான சம்பவங்கள் நடந்தேறின. இந்த மாதிரியான ஒரு சூழலைத் தான் அஷ்ரஃப் தன்னுடைய தளமாக அடையாளம் கண்டு கொண்டார். இந்தச் சூழ்நிலை தான் முஸ்லிம் காங்கிரசின் உருவாக்கத்திற்கு உந்துதலாக அமைந்தது.

முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் தேவை என்ற கோட்பாடு கிழக்கில் மிகவும் ஆழமாக வேரூன்றியது. தமது எண்ணத்தில் இருந்த பிரதேசத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்று அடையாளம் கண்டு கொண்ட அஷ்ரஃப் அதை ஒரு பலமான பிரச்சினையாக மாற்றினார். அவரது கட்சி அங்கு நடைபெற்ற சில தேர்தல்களில் பெற்ற வெற்றிகள் மூலமாக இந்த கருத்து சட்ட பூர்வமானதாகவும் ஆகியது. விரைவில் கொழும்பில் இருந்த அரசாங்கங்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டன. முஸ்லிம்களுக்கு ஒரு தனியான சபை தேவைப்படுகிறது. இதுதான் நான் சொல்ல விரும்பும் இரண்டாவது முஸ்லிம் குரல்.

எவ்வாறாயினும், இப்பகுதியில் உள்ள எல்லா முஸ்லிம்களும் இதை ஏற்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. 90களின் நடுப்பகுதியில் இத்தகைய தீர்வு தென்கிழக்குக் கரையில் உள்ள நெருக்கமான ஒரு சிறு பகுதியினர் மட்டும் இலாபமடைவார்கள் என்று பலர் புரிந்து கொள்ளத் தொடங்கினர். இதனால் விரைவிலேயே இப்போக்குக்கு எதிர்ப்பும் கிளம்பத் தொடங்கியது. ஆயினும், இது முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வரும் அளவுக்கு வெற்றி பெறவில்லை. தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு "முஸ்லிம்களின் கோரிக்கை"யான தனியான சபைக்கான கோரிக்கையில் கவனம் செலுத்துவதாக அமைய வேண்டும் என அஷ்ரஃப்பின் கட்சி கூறி வருகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில், முஸ்லிம்கட்காகக் குரல் எழுப்பும் இன்னொரு குரலும் எழுந்துள்ளது - வடக்கு முஸ்லிம்கள். அவர்கள் கிழக்கு முஸ்லிம்களதோ, தெற்கு முஸ்லிம்களினதோ அனுபவங்களை ப் போன்ற அனுபவங்களால் உருவானவர்கள் அல்ல. அவர்கள் புலிகளால் விரட்டப்பட்டவர்கள். அவர்களைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு, முஸ்லிம் பிரச்சினை - என்பன வேறு கோணங்களில் நோக்கப்பட வேண்டியவை. தமது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் அவர்கள் வடக்குக்குச் சென்று தமிழர் பெரும்பான்மையுடன் வாழ விரும்புகிறார்கள். அவர்களுக்கு கிழக்கு முஸ்லிம் தலைவர்களது கருத்துக்களும் தெற்கு முஸ்லிம் தலைவர்களது கருத்துக்களும் அதிகளவு அர்த்தம் கொண்டவை அல்ல.

துரதிர்ஷ்டவசமாக இந்தக்குழு, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இன்மையால் மூன்று பிரிவுக்குள்ளும் உள்ள குரலற்ற குழுவாக உள்ளது. தங்களது நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்ல அவர்கள் வடக்கு முஸ்லிம் அகதிகட்கான அமைப்பு (NMRO) போன்ற அமைப்புகளிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவர்களது கருத்தை முஸ்லிம் காங்கிரஸோ அல்லது பிரதான கட்சிகளிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களோ அக்கறையுடன் அணுகுவதாகத் தெரியவில்லை.

ஆக, தெளிவாகத் தெரிவது என்னவென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று வந்து விட்டால் முஸ்லிம்களிடையே ஒரு ஒருமித்த குரல் இல்லை என்பது தான். சமாதானத்தை கொண்டு வருவதற்கான ஒரு அரசியல் வடிவம் பற்றிச் சிந்திப்பவர்கள் முஸ்லிம் நிலைப்பாடுகளில் உள்ள இந்த வேறுபாட்டை அங்கீகரித்து ஆக வேண்டும். ஏனென்றால், இந்தச் சமூகம் உண்மையாகவே இன்று ஒரு இரண்டக நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது.

அதை ஓரளவுக்கு திரை நீக்கம் செய்து காட்ட நான் முயன்றிருக்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# வைத்தியர்களின் போராட்டத்தினாலும் ஜே. வீ. பீயின் வயிற்றிலேயே அடி !

வைத்தியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மாகாண சபைகள் பற்றிய கலந்துரையாடல் புது வடிவம் பெற்றுள்ளது. வைத்தியர்களை மாகாண சபைகளின் கீழ் சேவையில் ஈடுபடுத்துவதால் பலத்த நட்டம் ஏற்படும் என்றே அவர்களது சங்கம் சொல்கின்றது. அதன் காரணமாக அவர்களின் சேவையைத் தேசிய சேவை ஒன்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமாம். உண்மையிலேயே அவர்கள் வைக்கும் தர்க்கத்தின்படி சுகாதார சேவையை மட்டுமல்ல, எல்லாச் சேவைகளையுமே தேசிய சேவையாக ஆக்குவது நல்லதாகும். அதற்கிணங்கச் சுயாட்சி அவசியமான ஒன்றல்ல. அதனால் வைத்தியர்களின் வேலை நிறுத்தம் மிகத் தெளிவாகவே ஒரு அரசியல் வேலை நிறுத்தமாகும். மக்கள் அமைப்பு ரீதியாக அணி திரண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றப் போராட வேண்டும் என்றே அவர்கள் சொல்கின்றார்கள்.

மாகாண சபைகள் வெள்ளை யானை ஆனது பற்றியே கடந்த காலத்தில் எவரும் கதைத்தனர். 13ஆவது திருத்தச் சட்டத்தினால் கிடைத்த அதிகாரங்களும் கூடச் சரிவரக் கிடைக்காத காரணத்தால் மாகாண சபைகள் எதுவித முக்கிய வேலைகளையும் செய்ய முடியாத நிறுவனங்களாகிப் போயின.

மத்திய அரசாங்கத்தின் பராமரிப்பு அலகு ஒன்று என்பதற்கு அப்பால் அதிகாரம் ஏதும் அற்ற ஒன்றை எதற்காக ஏற்படுத்தினார்கள் எனப் பலரும் கேள்வி எழுப்பினர். இவ்வாறு கேள்வி எழுப்பியவர்களுள் இரு சாரார் அல்லது பிரிவினர் உள்ளனர். "இவை பலனற்றவை அதனால் இவற்றை ஒழித்து, இ[illegible]ாது செய்ய வேண்டும்." என ஒரு சாராரும், "இவை அவசியமான நிறுவனங்களே. இவை காரணமாக மேலும் மக்கள் அழுத்தங்கள் உருவாகும். இவற்றிற்கு அதிகாரங்கள் சரிவர வழங்கப்படாமையே தவறு. அதனால் இன்னும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்." என்று இன்னொரு சாராரும் கூறுகின்றனர்.

இந்த விதமாக அதிகாரங்கள் வழங்குவதிலும் இரு அளவு கோல்கள் உள்ளன. ஒன்று, 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளபடி அதிகாரங்களை வழங்குவது. மற்றையது, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பாற் சென்று, அதிக அதிகாரங்களை வழங்குவது. சந்திரிகா இவை இரண்டையுமே செய்வதாகச் சொல்லியே ஆட்சிக்கு வந்தவர். ஆனால் அவர் இப்போது வேறு விழல் வேலைகளையே செய்து கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு மாகாண சபைகளை உருவாக்கியது இந்திய நிர்ப்பந்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக அன்று பண்டாரநாயக்க - செல்வநாயகம், டட்லி - செல்வநாயகம், ஒப்பந்தங்களிலும் இவ்வாறான சுயாட்சிக் கோட்பாடுகள், கருத்துக்களே இருக்கின்றன. சுயாட்சி பற்றிக் கதைப்பதற்காகவே ஜே. ஆர். 1986இல் வட்ட மேசை மாநாட்டைக் கூட்டினார். அதனால் இலங்கையில் முதலாளித்துவவாதிகள் இவ்வாறு "சுயாட்சி" பற்றித் தொடர்ந்தும் கதைத்து வந்துள்ளார்கள். ஆனால் துரதிரஷ்டவசமாக அதனை ஏற்படுத்த முடியாது போனது.

"சுயாட்சி" எனப்படுவது "சுய நிர்ணய உரிமை"யைப் பாதுகாப்பது போன்ற ஒன்றல்ல என லெனின் அன்று சொல்லியிருந்தார். "'ஈழம்' அமைக்கும் உரிமை இருந்தாலும் அவ்வாறு பிரிந்து போக வேண்டாம். அது நல்லதல்ல." என "மாக்சியவாதி" ஒருவர் தமிழ் மக்களுக்குச் சொல்லலாம். ஆனால் 'சுயாட்சி' அமைக்க வேண்டாம். அது நல்லதல்ல." என்று எந்த ஒரு "மாக்சியவாதி"யும் சொல்லவோ, செய்யவோ முடியாது. காரணம் என்னவெனில் "சுயாட்சி" எனப்படுவது மக்களுக்கு உள்ள "சிறப்புரிமை" அல்லது "சலுகை" ஒன்றாகும். அது "இன உரிமை"யை உறுதிப்படுத்துகின்ற ஒன்றாகும்.

அதிகாரவாத (Beauracratic) முதலாளித்துவ ஆட்சியைக் கட்டுப்படுத்தவும், மறுபுறம் புரட்சியாளர்கள் தலையீடு செய்யும் சந்தர்ப்பமும் எல்லாச் சுயாட்சி முறையிலும் உருவாகும். இந்த முறை மாகாண சபை வாக்களிப்பு முறையிலிருந்து அது எவ்வளவு தூரம் அந்தக் கோணத்திலிருந்து படுகுழியானது என மக்களுக்குத் தெரிகின்றது. எல்லா இடங்களிலுமே இடதுசாரிகள் முன்னணிக்கு வந்து இப்போது சவால் விடத் தொடங்கியுள்ளனர். மறுபுறம், மாகாண சபைகளின் செயற்பாடுகளிலும் இப்போது போதியளவு அழுத்தங்களைச் செய்யக் கூடியதாக உள்ளது. புரட்சி செய்வதற்கு அல்ல. ஊழல், அதிகாரிவாதம் போன்றவற்றை அம்பலப்படுத்தித், திருடர்களைப் பட்டை அடித்துத், தோலுரித்துக் காட்டப் பெரும் சந்தர்ப்பம் இதனூடாத் தெளிவாகக் கிடைத்துள்ளது. இவ்வாறான நிறுவனங்களிற்கானஅதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமே தவிர, குறைக்கப்படக் கூடாது. மாகாணத்தின் அபிவிருத்தி, மற்றும் சேவை வசதிகளுக்காகக் கடுமையான விதத்தில் தலையீடு செய்வதைவிடுத்து, அதிகாரங்கள் கிடைக்க வழி சமைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்கும் இடத்தைப் புரட்சிகர மக்கள் எழுச்சிகளைப் போசணை செய்யும் ஒரு வழியாக ஈடுபடுத்த முடியும்.



மாகாண சபைகளினுள் இடதுசாரிகள் அதிகமாக நுழையத் தொடங்கும் போதே இப்போது, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றிப் பெரும் சலனச்(சப்தம்) ஒன்று எழத் தொடங்கி விட்டது.

அன்று கொலை அதிகாரத்தினால் மத்திய அரசாங்கத்தின் தாளத்துக்கு ஆடும் ஏமாற்றுக்காரத் திருடர்களை விரட்டியடிப்பது என்பது உண்மைதான். ஆனாலும் இப்போது அந்த நிலைமையை உடைத்துக்கொண்டு மிகவும் சுயாதீனமான மாகாண சபைகள் உருவாகியுள்ளன. முதலமைச்சர்கள் தங்கள் சாரங்களைத் தூக்கிப் பிடித்தபடியே அகட விகடம் ஆடுவது இப்போது இலேசான காரியமல்ல. இவ்வாறான மாற்றங்கள் நடைபெறும் போதே வைத்தியர்கள் மாகாண சபைகளை ஒழிக்க வேண்டுமென "ஸ்ரைக்" பண்ணுகின்றார்கள். வைத்தியர்கள் என்ன நினைத்தாலும், மக்கள் விடுதலை முன்னணி என்ன சொன்னாலும், சம்பிக ரணவக எதைச் சொல்லாவிட்டாலும் இது மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான, போலிகளான "பயங்கரவாதத்திற்கு எதிரான முன்னணி"க்கு ஆதரவான அரசியல் போராட்டம் ஒன்றேயாகும். இணைந்து, பெருக்கெடுத்து ஓடுவதே விடயமாகும்.

இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் வைத்தியர்களல்லர், மாறாகச் சந்திரிகாவும், நிமல் சிறிபால த சில்வாவுமே ஆவர் என்பதே சுவாரசியமானதாகும். அவர்கள் இருவரும்தான், எந்த முதலமைச்சரிடமும் கேட்காது வைத்தியர்களின் சேவையைத் தேசிய சேவை ஒன்றாக ஆக்குவோம் என்று வாக்கு உறுதியளித்து, அதன்படி செயற்படத் தொடங்கியவர்களாவர். (வட - மேல் மாகாண முதலமைச்சர் எஸ். பீ.) நாவின்ன நீதிமன்றத்துக்குச் செல்லாவிட்டால் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமான சந்திரிகா - நிமல் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும். சந்திரிகா - நிமல் ஆகியோரது ஈனச் செயலுக்கு எதிராக நாவின்ன நீதிமன்றம் போனது மாகாண சபைகள் செய்த அதிர்ஷ்டமே. என் மீது இரும்புக் கம்பி கொண்டு தாக்குதல் நடத்தி என்னை உபசரித்துக் கொலைப் பலத்தினால் பதவிக்கு வந்த ஒருவராக இருந்தாலும் நல்ல விடயமொன்றை அவர் செய்தால் அதனை நல்லதொன்று எனச் சொல்ல வேண்டும்.

மாகாண சபைகளை விடவும் அதிகாரங்கள் கூடிய பிராந்திய சபைகளை அமைக்க வேண்டுமென்றே சந்திரிகா எப்போதுமே அலட்டிக் கொண்டிருப்பார். அப்படி இருக்கையில் இங்கு அவர் செயற்பட்டதோ அதற்கு முற்று முழுதாக நேர்மாறாகவேயாகும். அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தை மாகாண சபைகளுக்கு எதிராக நேரடியாகவே தூண்டி அல்லது சூக்காட்டி அல்லது உசுப்பி விட்டார்கள். வைத்தியர்களைத் தேசிய சேவைக்கு எடுப்போம் என்று பொய் வாக்குறுதி அளித்தார்கள். அடுத்து அதனை நம்பி வைத்தியர்கள் மாகாண சபைகளுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்தவுடன் அவசர காலச் சட்டத்தைப் பாவித்து அதனை நொருக்கிப் போட்டார்கள். இதனையும் விடப் பரிகாசத்திற்குரிய செயற்திட்டமொன்றை இந்த ஜென்மத்திலே எம்மால் கேள்விப்படக் கூட முடியாது.

**கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன.**

**நன்றி : லக்பிம – 19990704.**

**தமிழில் : சி. செ. ராஜா.**

# காரணம் தெரியலையோ?

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதில் ஏதோ பெரிய அக்கறையுடன் செயற்படுவது போல காட்டிக்கொண்ட அரசாங்கம் இப்போது அதனால் வெளிவரும் தகவல்கள் தனக்கும் தனது இராணுவத்தினருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன என்பதைக் கண்டதாலோ என்னவோ அதை மெல்லமாக கடத்த எத்தனிப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. உடனடியாக மறுபகுதிகளையும் தோண்டிப் பார்ப்பதில் நீதிபதி உட்பட முழு உலகுமே அக்கறைக் காட்டியதும், அதை நீண்ட கால இடைவெளிக்குப் பின் அதாவது செப்டம்பர் அளவில் தோண்டுமாறு அரச சட்டத்தரணி கோரியதற்கு என்ன காரணம் இருக்கலாம் என்று வியக்கின்றனர் அங்குள்ள மக்கள்.

தமது கணவன்மார்களையும், பிள்ளைகளையும் தொலைத்துவிட்டு புதைகுழிகளைப் பார்த்து பெருமூச்சுவிடும் பாதிக்கப்பட்டவர்கள், தமது உறவுகளின் எலும்புத் துண்டங்களையாவது விரைவில் காணக்கூடாது என்று அரசு தரப்பு யோசிக்கிறதோ என்னவோ?

"அனேகமாக இந்த விவகாரம் அடுத்த தேர்தல் முடியும்வரை இழுபடும் நீ இருந்து பார் என்கிறார் அனுபவசாலியான என் நண்பர்"

எனக்கும் அதுதான் நடக்கும் போல் தெரிகிறது. உங்களுக்கு?

# ஒரு கிரனைட்டும் கொஞ்சம் பரபரப்பும்!

மூதூர்ப் பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய பிரதேசங்களில் கரும்புலிகள் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்-பட்டிருக்கிறது.

கட்டைப்பறிச்சான் சம்பூர், கூனித்தீவு, சோலையூர் பகுதிகளில் ஜூன் 5 விழா நாளாகக் காட்சியளித்தது. உணர்வைத் தூண்டும் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. மாலையில் சந்திகள் தோறும் விடுதலைப்புலிகளின் பிரச்சாரப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

கூடாரங்கள் பல நிறுவப்பட்டு அவற்றுள் தியாகிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டன. இவ் அஞசலி நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ளும் பொருட்டு சைக்கிள், மாட்டு வண்டி என்பனவற்றிலும் நடந்தும் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

கட்டைபறிச்சான் கிராமத்தில் அன்று மாலை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. விடுதலை உணர்வைத் தூண்டவும் மக்களிடையே அவற்றைத் தக்க வைத்துக் கொள்ளவும் கூடியதாக இவை அமைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை திருகோணமலை நகரத்தில் உவர்மலைப்பிரதேசத்தில் இனந்தெரியாதோரால் கிரனைட் ஒன்று வெடிக்க வைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் நடமாட்டமுள்ள இரவு நேரத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

செயலாளர் ஒருவருக்கு குறி வைக்கப்பட்டிருக்கலாம் என செய்திகள் பரவிய போதிலும் அவ்வாறு இருக்க முடியாது என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது.

நகரத் தெருவொன்றில் சம்பவம் ஏதாவது நடந்தால் அந்த இடம் யாராவது ஒருவர் வீட்டுக்கு முன்புறமாகத்தான் இருக்க வேண்டும். இதேபோல் கிரனைட் வீசப்பட்ட பகுதியில் மாகாண செயலாளர்கள் குடியிருக்கிறார்கள். அவ்வளவு தான். செயலாளர்களுக்கு குறி வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதற்கு பல சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஒன்று விடுதலைப்புலிகள் செயலாளர்களில் எவரையாவது விசாரிக்க வேண்டி என்று நினைத்துக் கூட தங்கள் இடத்துக்கு அழைத்து விசாரிக்கும் வல்லமையுடன் தான் இருக்கிறார்கள். எனவே, செயலாளர்களைப் பயமுறுத்தத் தானும் இவ்வித ரிஸ்க் எடுக்கும் தேவை அவர்களுக்கு இல்லை.

ஏனைய தமிழ்க் குழுக்கள் விடயத்தில் செயலாளர் என் என்றால் எண்ணெய்யாக நிற்கிறார்கள். எனவே அவர்களுக்கும் இவ்வாறான தேவை இருக்கிறது.

தனிப்பட்ட முரட்டு நபர்கள் கூட இத்தகைய செயலுக்குத் துணியுமானவுக்கு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் இல்லாமல் அரசியல்வாதிகள் போல் செயலாளர்கள் பாதுகாப்புடன் செல்வதில்லை. சாதாரண அரச உத்தியோகத்தர்களாகவே நடந்து கொள்வதால் எந்த நேரத்திலும் யார் வேண்டுமானாலும் செயலாளர்களைச் சந்திக்க முடியும். தெருக்களிற் கூட வாகனத்தை நிறுத்திக் கதைக்க முடியும். யாரோ ஒரு துட்டன் எப்போதோ பதுக்கி வைத்திருந்த பழைய கிரனைட் வேலை செய்கிறதா என்று பொருத்தமான சமயத்தில் பரீட்சித்துப் பார்த்து ஊரைக் கலக்கியிருக்கிறார்கன் என்றே நினைக்கத் தோன்றுகிறது

**திரிபுரன்**

நன்றி - நூலகத்திட்டம்



## சக்தி:

# நாளையல்ல இப்பொழுதே!

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் இடம் பெயர்ந்து வாழும் இலக்கிய, அரசியல் பிரக்ஞை உள்ளவர்களிடம் இருந்து பல தரப்பட்ட சஞ்சிகைகள் அவ்வப்போது வெளிவந்தாலும், பின்பு அவற்றில் பல என்ன காரணத்தினாலோ தொடர்ந்து வெளிவராமல் போயிற்று.

பெண்கள் இதழாக சில ஆண்டு காலங்களுக்கு முன்னர் நோர்வேயிலிருந்து வெளிவரத் தொடங்கிய "சக்தி" சஞ்சிகை பல இடர்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து வெளிவருகின்றது. புலம் பெயர்ந்து இயந்திர வாழ்க்கையில் சூழ்நிலைகளின் கைதிகளைாக வாழ்கின்ற போதும், சக்தி பெண்கள் சஞ்சிகை கிரமமாக தன்னை கொண்டுவர முடியாமல் போனாலும் தனக்கு இயலுமான நேரத்தில் தன்னை பிரசவித்துக் கொண்டு வருகின்றது. இம்முயற்சி பாராட்டத்தக்கது.

அதில் இந்த வருடத்தில் வெளிவந்த கடைசி இரண்டு இதழ்கள் (ஜன-மார்ச் 99, ஏப்-யூன் 99) கிடைக்கப்பெற்றன.

"எமது முக்கிய நோக்கமே பெண்களின் எழுத்துத் திறமையையும், வாசிப்புத் திறமையையும் வளர்ப்பதே" என்று தெரிவிக்கும் சக்தி ஆசிரியர் குழு அநேகமாக தமிழ் பெண்கள் வாழும் எல்லா இடங்களில் இருந்தும் தம்மாலியன்றளவு ஆக்கங்களைச் சேர்க்க முயற்சி செய்திருக்கிறது. அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது. அது கூறிக் கொண்டதைப் போலவே புதிய பெண் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றது. பெண்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதென்பதற்கு அப்பால் பெண்கள் தங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளலுக்கு ஆரம்ப களமாக ச்க்தி இருந்து வருகின்றது.

இந்த இரு இதழ்களும் பல தரப்பட்ட படைப்புக்களை உள்ளடக்கி வந்தாலும் பாமதி, றஞ்சனி, தயாநிதி (மொழிபெயர்ப்பு இலக்கியம்) ஆகியோரின் படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. முக்கியமாக பாமதியின் கவிதைகள் குறிப்பிடத்தக்கவை.

*நம்பிக்கை*

*நீ விழாமல் கைப்பற்றிய*
*மரக்கிளை முறிந்து கொண்டதால்...*
*நீ கால்களைப் பதித்து*
*எழுந்து நின்ற சுவர்விளிம்பு*
*உடைந்து விலகிப்போனதால்....*
*நீ பூமியை நோக்கி வந்து*
*கொண்டிருக்கின்றாய்*

*இன்னும் சில நேரத்தில்*
*நீ பூமியை குருதியால்*
*முத்தமிடுவாய்*
*இதயம் தொடங்கி பாத விரல்களும்*
*முறிந்து போனதால் வாய்விட்டுக்*
*கதறுவாய்!*
*உன் கடைசி நம்பிக்கையும்*
*உடைந்து*
*போனதாய் உணர்வாய்!*

*இது இன்னுமொரு குருட்டு*
*நம்பிக்கையில்*
*மரணம் மட்டுமே!*

*இது இன்னுமொரு நிரந்தரமற்ற*
*மனிதனின்*
*கனவு மட்டுமே!*

*எழுந்து கொள்!*
*அனுபவத்தை பலமாக்கு*
*ஆர்ப்பரிக்காமல் சூழ்நிலையைப்*
*புரிந்துகொள்!*
*வாழ்வு உனக்காய் காத்திருக்கிறது!*

*பாமதி (அவுஸ்திரேலியா)*

சக்தி ஏப்-யூன் 99 இதழில் வெளிவந்த துருக்கிய பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரப் பெண்ணியவாதியான குல் ஒஸ்லன் (Gul Ozlen) இன் பேட்டியை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து தந்துள்ளார் கதி (சுவிஸ்). வெறும் பேட்டியாக அல்லாமல் குல் ஒஸ்லனின் வாழ்வனுபவத்தின் தொகுப்பாக வந்துள்ள "நாளையல்ல இப்பொழுதே" (NOT TOMORROW NOW) கட்டாயம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

நல்ல பல ஆக்கங்களை தன்னோடு கொண்டு வரும் சக்தி தொடர்ந்தும் வெளிவருவது அவசியமானது.

ஆனால், தற்போது பெண்நிலைவாதிகள் என்பதை விட பெண்கள் எல்லோர் முன்னிலையிலுமே உள்ள முக்கியமான கேள்வி இதுதான்.



பெண்களுக்கு வீட்டுக்குள் ஏற்படும் பிரச்சினைகள், பெண்களுக்கெதிரான பெண்களை அடிமைகளாகக் கொள்ளும் சமூகக் கட்டுமானம், தீண்டாப் பொருளாக கருதும் மதம், யுத்தத்தினால் பாதிக்கப்படும் பெண்கள் எல்லாம் பற்றியும் தொடர்ந்தும் விமர்சித்துக் கொண்டிருப்பது மட்டும் தான் பெண்களுக்கான விடுதலையா? அநேகமாக எல்லா விடயங்கள் பற்றியும் கேள்வி எழுப்பி எழுதிக் கொண்டோரும் பேசிக் கொண்டோரும் கடைசியில் தாலி கட்டி, அம்மி மிதித்து, வலது காலால் பாற்குடத்தை தட்டிவிட்டு சாமி அறையில் விளக்கேற்றி, அடுப்படியின் கரும் புகையின் பின்னால் தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டார்கள்.

விமர்சித்தல் என்பதற்கப்பால் இவை எல்லாவற்றில் இருந்து விடுபடலும், சரியான கருத்துருவாக்கத்தை நோக்கி நகர்தலும் தேவையானது. இதற்கப்பாலும் இது குறித்துச் சிந்திப்பவர்கள் நிறையவே செய்ய வேண்டியவை உள்ளன.

இதில் சக்தியின் பங்கும் கணிசமானது. சக்தி அதற்காக முயல்வாள் என்று நம்பலாம்.

- ரதி



சனத் குணதிலக்க



ஹலுகல்ல

## சனல் 9:

# ஊழல் எங்கிருந்து ஆரம்பிக்கிறது?

ரூபவாஹினி மட்டும் ஒரேயொரு தொலைக்காட்சிச் சேவையாக இருந்த காலம் போய் இப்போதெல்லாம் எத்தனையோ 'சனல்'கள் வந்துவிட்டன.

தொகையின் அளவுக்கு ஏற்ப அவற்றின் தரமும் வளர்கிறதா என்று யாராவது அங்கலாய்க்கக் கூடும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. பதிலாக போட்டி போட்டுக் கொண்டு அவை வியாபாரத்தில் இறங்கியுள்ளன.

ஆயினும் செய்திகள் விடயத்தில், வெறும் அரசுசார்புச் செய்திகளை மட்டுமே பார்த்துப் புளித்துப் போன கண்களுக்கு இப்போது மாற்றுச் செய்திகளையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்திருப்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இத்தனை சனல்கள் உருவாகிய பின்னணியில் யார் யார் இருந்திருக்கிறார்கள், என்னென்னவெல்லாம் நடந்திருக்கிறது என்பது பற்றிய செய்திகளைப் பார்த்தால் இவை பெருகுவதற்கு வெறுமனே மக்களுக்கு பலவிதமான சேவைகளில் தெரிவைக் கொண்டிருக்கும் வாய்ப்பை வழங்கும் நோக்கத்தை விட வேறு காரணங்களும் இருப்பதாகத் தோன்றுகிறது.

அண்மையில் சண்டே லீடர் பத்திரிகையால் அம்பலப்படுத்தப்பட்டு வந்த சனல்-9 என்ற தொலைக்காட்சி தொடர்பாக வெளிவந்த விவகாரம் பலரதும் அக்கறைக்குரிய ஒரு விடயமாக அடிபடுகிறது.

சனல் 9ஐத் தொடங்கும் விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் வெகுஜன தொடர்புத்துறை ஆலோசகர் சனத் குணதிலக்கவின் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டதாகவும், அதற்கு அவருக்கு பெரும் தொகை ஒன்று கைமாறியதாகவும், இக் கைமாறல் பற்றி ஜனாதிபதிக்கும் தெரிந்திருந்தது என்றும் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தை முதலில் சண்டே லீடர் பத்திரிகை அம்பலப்படுத்தியது. இதைத் தொடர்ந்து அமைச்சரவையில் பலத்த அமளி துமளி ஏற்பட்டதாகப் பேசப்படுகிறது. இந்த விவகாரம் சம்பந்தமாக நடைபெற்ற அதிகாரத் துஷ்பிரயோகம், ஊழல் இலஞ்சம் என்பன தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் போவதற்கு தாம் தயாராவதாக இப்போது ஐ.தே.கவும் அறிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் நடந்தது இது தான்:

லக்ஸ்மன் ஹலுகல்ல என்பவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சமிற் மீடியா பிறைவேற் லிமிட்டட் என்ற நிறுவனத்துடன் சேர்ந்து இலங்கையில் ஒரு டெலிவிசன் சனலை நிறுவ முயன்றார். இந்த நிறுவனத்தினை உருவாக்கியவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் குருபரன்.

இலங்கையில் ஜனாதிபதிக்கு மட்டுமே ஒரு தொலைக்காட்சி சனலை உருவாக்கும் அனுமதியை வழங்க முடியும் என்பதால் ஹலுகல்ல ஜனாதிபதியின் பொதுசன தொடர்பு ஆலோசகருடன் தொடர்பு கொண்டார். இதைச் செய்து தருவதற்காக பத்து லட்சம் அவுஸ்திரேலியன் டொலர்களை வழங்க முடியும் என்று ஹலுகல்ல சனத்திடம் தெரிவித்திருந்தார். இதன் பின் ஜனாதிபதியிடமிருந்து அந்த 'நிறுவனத்திற்கு அனுமதியளிக்கும் கடிதத்தைப் பெற்றுக் கொடுத்தார் சனத்.

ஆனால், ஒரு சின்ன வித்தியாசம் ஜனாதிபதி அந்த சனலுக்கான அனுமதிப்பத்திர உரிமையாளராக ஹலுகல்லையை ஏற்றுக் கொள்ள மறுத்து, தனக்கு வேண்டிய ஒருவருக்கு அதை வழங்கினார். ஒரு காலத்தில், தனக்கு ரூபவாஹினி, ஐ.ரி.என். மீது ஆதிக்கம் இல்லாது போனால், இதைப் பயன்படுத்தலாம் என்ற நோக்குடன் அவர் அந்த லைசென்சை தனக்கு நம்பிக்கையான காமினி ராஜ நாயக்கவிற்கு வழங்கப்படுவதையே விரும்பினார். இதற்கு ஜனாதிபதியை நேரில் சந்தித்த குருபரனும் ஒப்புக் கொண்டார்.

பிறகு ஹலுகல்லவை இந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவராக இல்லாமலிருக்கும் படியும் ஜனாதிபதி கோரினார் என்று கூறப்படுகிறது. எப்படியோ லைசென்ஸ் வேறொருவரின் பெயரில் கொடுக்கப்பட்டதால், இந்தத் திட்டத்திற்கான பணம் சேகரிக்கப்பட முடியாமல் போகவே அது தோல்வியடைந்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கு தான் எவ்வளது பணம் பெறுகிறேன் என்று தெரிந்திருந்ததாக சனத் கூறியதாக கூறப்படும் உரையாடலின் ஒலிப்பதிவு நாடா ஒன்று சண்டே லீடர் பத்திரிகைக்குக் கிடைத்ததில் இருந்தே இந்த விவகாரம் வெளித்தெரிய வந்தது.

இப்போது இந்த விவகாரம் மந்திரிசபையில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஐ.தே.க. இதை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு எடுத்துச் செல்லப் போகிறது. ஹலுகல்லயோ தான் இந்தத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டது தொடர்பாக சனல் 9 நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

ஊழலின் ஆட்சி ஜனாதிபதியின் மாளிகைக்குள்ளேயே தொடங்குகிறது என்றால், பிற இடங்களின் நிலமை பற்றி சொல்ல வேண்டுமா என்ன?

நன்றி - நூலகத்திட்டம்



# அனோமா...

ஆங்கிலத்தில்: புண்யகாந்தி விஜேநாயக்க

தமிழில்: இராஜரட்ணம்

- எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

- உன்னை அனோமா என்று கூப்பிட்டால் என்ன!

- அப்படியென்றால் உன்னை அடையாளங் கண்டு கொள்வார்களே.

- அனோமா ஒரு சிறுமி, என் நண்பி, என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள்.

- என்ன இருந்தாலும் நாமிருவரும் இந்த விடயத்தைப் பொறுத்த அளவில் ஒரு தோணியில் தான், இல்லையா!

- என்னுடைய பாட்டி நான் ஏன் தனிமையில் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று சதா கேட்டுக் கொண்டேயிருப்பா.

- என்னுடைய பாட்டி, அது தான் என்னுடைய அம்மாவின் அம்மாவுக்கு உன்னைப் பற்றி ஒன்றும் தெரியாது.

- உன்னுடன் கதைப்பதற்கு காரணம், உனக்கு மட்டும் தான் விளங்கும் நான் என்னத்தைப் பற்றிக் கதைக்கிறேன் என்று. உன்னுடைய உற்பத்தியின் பின்னணி.

- நீ இன்னும் கருவாகத்தானிருக்கின்றாய். இயற்கையன்னை வெளிப்புற தீங்குகளிலிருந்து உன்னைக் காப்பாற்றி வருகின்றாள்.

- நான் உன்னுடன் கதைக்கும் பொழுது நீ கேட்பாய். ஆனால், என்னுடைய தூக்கம் குழம்பிப் போவது போல் உன்னுடைய தூக்கம் குழம்ப மாட்டாது. தீய நினைவு-களினால் நான் அவஸ்தைப்படுவேன். ஆனால், அவற்றினால் நீ பாதிக்கப்பட மாட்டாய்.

- நான் நித்திரையின்றி எனது படுக்கையில் உருண்டு சஞ்சலப்படுவதை உணருகின்றாயா!

- என் துர்ப்பாக்கியம், நான் குழந்தையுமல்ல வயது வந்த மனுசியுமல்ல. நானும் உன்னைப் போல், சிறிதாக ஒரு கருவைப் போல் எனது தாயாரின் கருப்பையில் சுருண்டிருந்தால் என்னை எவராலும் தீண்ட முடியாது.

- மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவோ, கதைக்கவோ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

- எனக்கு வயது 14. தூரத்திய மத்திய கிழக்குக்குச் சென்ற என் அம்மாவின் பிரிவை என்னால் தாங்க முடியாமலிருக்கின்றது.

- அவள் ஏன் அங்கு போக வேண்டியிருந்தது!

- எங்களுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க.

- குடும்பமாக ஒன்றாகவிருப்பதைவிட பணம் முக்கியமானதா?

- அம்மா போகு முன் என்னுடைய கூந்தலை வாரி விடுவாள். முகத்தைக் கழுவி விடுவாள். என்னுடைய ஒரே ஒரு வெள்ளை சீருடையை சலவை செய்து அழுத்தி வைப்பாள். இவை எல்லாம் இன்னும் என்னுடைய மனதில் பசுமையாயிருக்கின்றது.

- இப்பொழுது அந்த வெள்ளைச் சீருடை தேவையில்லை. நான் பாடசாலைக்குப் போவதில்லை.

- என்னுடைய தம்பி இன்னும் பாடசாலைக்குப் போகிறான்.

- அவனுக்கு வயது 11. ஆனால், அம்மாவின் பிரிவால் கவலைப்படுவது போல் அவனில்லை. அவனுடைய துணிகளைச் சலவை செய்து கொடுக்கின்றேன். உணவைச் சமைத்துக் கொடுக்கின்றேன். ஆனால், அவன் என்னை கண் எடுத்துப் பார்ப்பதுமில்லை. முகங்கொடுத்துப் பேசுவதுமில்லை.

- இது என்னைப் பெரிதும் பாதிக்கின்றது. அவன் என்னை அலட்சியப்படுத்துகிறான் என்பது புரிகின்றது. அம்மாவின் இடத்தை அப்பாவிடமிருந்து நான் சூறையாடி விட்டதாக அவன் நினைக்கின்றான். அப்பாவுக்குக் கிட்ட அவன் நெருங்குவதில்லை.

- எப்போதும் பயமும், பீதியுமாயிருக்-கின்றது.

- அம்மா உண்மையை அறிந்தால் என்ன கூறுவாள், செய்வாள்!

- அவள் திரும்பி வந்து உண்மையை அறியுமுன் நான் ஏதாவது கட்டாயமாகச் செய்ய வேண்டும்.

- பகல் வேளையில் அப்பா என்னைப் மதுபோதையில் தான் வருவார். சாராயத்தின் வாடை வீசும்.

- பாட்டிக்கு நன்றாக வயது போய் விட்டது. வீட்டு வேலைகளைக் கவனிக்க முடியாது. பாட்டியிலும் பார்க்க வயது குறைந்த வேறு யாரையாவது பொறுப்பாக விட்டுச் சென்றிருக்க வேண்டும். உதாரணத்துக்கு எனது குஞ்சியம்மாவை. யாராவது அப்பாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களாக. அப்பாவின் தேவைகளை மறந்து விட்டா போலும் அம்மா.

- அனோமா ஒரு எச்சரிக்கை. உன்னுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி உன்னைத் தொந்தரவு செய்வேன். இரவில் தூங்க முடியாவிட்டால் அழவேண்டும் போலிருக்கும். யாருடனாவது கதைக்க வேண்டும் போல் இருக்கும். அப்பாவுக்கு மட்டும் தான் ஆதரவு தேவை என்றில்லை. எனக்கும் தான். அவருடைய தேவை உடலுறவு. எனது தேவை யாருடனாவது அளவளாவுதல்.


- எனக்கு இந்நிலை ஏற்பட வேண்டுமென்று அம்மா ஒரு போதும் நினைத்திருக்க மாட்டா. தான் திரும்பி வரும் வரைக்கும் நான் களங்கமற்ற ஒரு கன்னியாகவேயிருக்க வேண்டுமென்று விரும்பினாள். இன்னமும் எனக்கு நல்ல நினைவு இருக்கின்றது. நான் பூப்பெய்திய பொழுது ஆண்களின் கண்களில் படாதபடி என்னைப் பத்திரமாய் வைத்திருந்தா. என் அப்பாவையும் தம்பியையும் கூட எனதருகே விடவில்லை. தீட்டு நின்ற பின் என் தலையில் குடம் குடமாக தண்ணீர் ஊற்றி என்னைக்குளிப்பாட்டின பின் அப்பாசவால்வையும், தம்பியையும் என்னை அணுக விட்டாள். எனக்கு ஒரு பரிசுப்பொருளும் பரிசளித்தாள். தீட்டுப்பட்ட துணிகளை சலவை செய்தாள். ஆனபடியால் தான் எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கின்றது. இவ்வளவு கண்காணிப்புக்கு பின் ஏன் என்னைத் தக்க துணையின்றி விட்டுச் சென்றாள்.

- அந்தப் பணம் தான் எங்களைப் பாழாக்கியது.

- அம்மா சென்றபின் எங்களுக்குச் கெட்ட காலம் ஏற்பட்டது. எங்கள் வீட்டுக்குள் மூதேவி காலெடுத்து வைத்தாள். இரவில் மாசடைந்த எங்கள் துணிகளின் (அப்பாவினதும், எனதும்) நாற்றத்தை என்னால் அகற்ற முடியாமலிருக்கிறது.

எவ்வளவு தான் குளித்தாலும் அந்த துர்-நாற்றத்தை அகற்ற முடியாமலிருக்கிறது.

- அனோமா, அனோமா எங்கே போய்விட்டாய்! என்னிடமிருந்து ஒழிந்திருக்-கின்றாயா! சமீப காலத்தில் நீ என்னுள் பத்திரமாயிருந்து எனக்கு ஆறுதல் கூறாமலிருப்பதாக ஒரு பிரேமை.



- அம்மம்மா அது தான் என்னுடைய பாட்டிக்குக் காது கேட்பதும் குறைவு. கண்பார்வையும் குறைவு.

- நான் ஏன் தொடர்ந்தும் பாடசாலைக்குப் போவதில்லை என்று ஒரு நாளும் கேட்ட-தில்லை. வீட்டிலிருந்து தேங்காய் துருவி, மிளகாயைப் பட்டாக அரைத்துக் கொடுத்து உதவுவதனால் அவளுக்கு மகிழ்ச்சி.

- உன்னுடன் மட்டும் தான் என்னால் கதைக்க முடியும் அனோமா. நான் யாருடனாவது கதைக்க வேண்டும் போலிருக்கிறது.

பார்ப்பதுமில்லை. கிட்ட நெருங்குவது-மில்லை.

- இரவில் மட்டும் அம்மா இல்லாத தனிமையினால் என்னைக் கூப்பிடுவார்.

- என்னுடைய தனிமையைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை, பொருட்-படுத்துவதில்லை. தன்னைப் பற்றித் தான்.

- தம்பியும் இரவில் நன்றாகத் தூங்கு-வதில்லை என்பது எனக்குத் தெரியும். நாமிருவரும் இரவிரவாக அப்பா எப்போ கூப்பிடுவாரோ என்று பயந்து-கொண்டிருப்போம். பெரும்பாலும்

- என்னுடன் அதிகம் கதைக்க, கதைக்க நீ என்னிடமிருந்து ஒதுங்கிப் போவதாகத் தெரிகிறது. கருப்பையிலுமா உன்னைத் தீண்டினேன்! ஆனபடியால் தானா எது-விதமான அசைவுமின்றி என்னுள் அமைதியாயிருக்கின்றாய்!

- அனோமா, நீ என்னைப் பயப்படுத்து-கின்றாய்! திடீர் என்று நீயார் என்று

⇨

நன்றி - நூலகத்திட்டம்



அடையாளங் கண்டு நான் உன்னுடன் கதைப்பதை சந்தேகிக்கின்றாய்.

- நீ இப்பொழுது அமைதியாகவும், அனுதாபத்துடனும் என் கூற்றுக்களை கேட்கக்கூடிய கருவாகவில்லை. நீ எனக்கு விடுகின்றாய். என் கருப்பையிலிருந்து தப்பி விட்டாய்.

- நீ பாதிக்கப்பட்டிருக்கிறாய். என்னைக் குறை கூறுகிறாய்.

- அமைதியாயிருந்து கேட்காமல் நீ கேட்கிறாய், எனக்கு எதிர்காலமுண்டா! நீ என்னைப் பிரசவிப்பாயா! அல்லது பிரவசத்திற்கு முன்னே என்னை அழித்துவிட யோசிக்கின்றாயா!'


- அனோமா, இந்தச் சூழ்நிலையில் ஒரு திடமான முடிவுக்கு வர. நீ எனக்கு அவகாசம் கொடுப்பதாகத் தெரியவில்லை.

- கதைத்துக் கொண்டிருப்பதால் எனது மனச்சாட்சியைக் கிளறி விட்டாய்.

- இது மிகவும் பயங்கரமானது. நீ எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதாக, என்னை அழித்து விட்டதாக நினைக்கின்றேன். அமைதியாயிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு ஜீவனாக உன்னால் இருக்க முடியாதா!

- தயவுசெய்து நன்றாக விளங்கிக் கொள். நான் உன்னை மனப்பூர்வமாக சிருஷ்டிக்கவில்லை.

- அப்பா உன்னை என்னுள்



சிருஷ்டித்தார். எனது தகப்பனார் தான் உனது சிருஷ்டிக்குக் காரணம்.

- நீ அவருடைய பேரப்பிள்ளை, என்னுடைய பிள்ளையல்ல.

- நான் பரிபூரண பெண்ணாக வாழ்ந்து என்னுடைய தகப்பன் அல்லாத வேறு ஒரு புருஷனின் சிசுவைத் தான் என் கருப்பையில் சுமக்க விரும்புகின்றேன்.

- திரும்பவும் உன்னை மனம் நோகச் செய்து, அமைதியைக் குழப்பி விட்டேன் போலும்.

- நீ தொடர்ந்தும் என்னுள் அமைதியாக இருக்க முடியாது. 'நான் பிறப்பேனா!' என்று என்னைக் கேட்கின்றாய்.' அதற்கு என்னால் எப்படி மறுமொழி கூற முடியும் அனோமா!'

- உன்னுடைய வாழ்வா, அல்லது என்னுடையதா!

- நீ பிறந்தால், நான் நிச்சயமாக இறப்பேன் அவமானத்தால்.

## அன்ப, தெரிகிறதா?

கற்பெனும் இருட்டறையில் என்னைப் போட்(டு)
அடைக்காதே
காதல் என்னும் மாயச் சிறையில் என்னை விழுத்தாதே.
'அற்புதம்' என்காதே.
'அளக்க முடியாத ஆழ்கடல்' என்காதே
காமத்தில் சூல் கொள்ளும் உன் கற்பனையால்
என்னை எடைபோட்டுப் போட்டுக்
கதை எழுதாதே.
ஒரு காலத்தின் உன் காவிய வெற்றியை
இனியும் என் மேல் ஏவாதே.

ஆண் மயிலாய் தோகை விரித்தென்னை அழைக்காதே
சேவல் சிறகடிக்கையில் கிரீடமிடும்
உச்சிப் பூவின் விறைப்பால் புணர்ச்சிக்கு
சமிக்ஞை விடாதே.
கூவி மருட்டும் குயிலின் இசை எடுத்து
என்னை வேசைப் படுத்த விழையாதே.
நீ, நீயாய் இரு.

உன் ஆளும் அழகெனும் ஒவ்வோர் அலகையும்
கீழ்திர்.
அங்கே 'பால்' அற்ற உள்ளமே மேலோங்க நில்.
அப்போ -
உண்மை மனித நேயமே
நாம் இருவர் இணையும் மையம் எனும் ஞானம்
தெரியவரும், அன்ப, தெரிகிறதா?

மு. பொ -

## சிதைவுகள்

நெருங்கியென் விலா உரசி
நானெழுதும் தீயில் எரிந்திருக்க
இன்றுமவள் வருவாள்.

பஞ்சடர்ந்த மார்பை
சற்றே முதுகிலழுத்தி
அச்சமேவ
கதவிடுக்கில் கண்ணெறிவாள்.

முற்றத்தில்
இருளுறைந்து பயமிருக்கும்
வாசற்படியில் காலாவதியான -
நாயொன்றின் உறுமலிடை,
அவர்கள் மறைந்து செல்வர்

ஒரு இரும்புக்குருவி
மரணம் கக்கி சேதாரம் செய்த பூமியில்
உதிர்ந்த சிறுகுடிசைகளின்
அவலக்குரல் சொல்லியழ
அவளிங்கு வருவாள்.

"உன் துயரக் கவிதையை படித்துக்
காட்டென,
கெஞ்சுமவள் விழிகளில்
தேசத்தின் சாபம் துலங்கும்.

பொன்வீடும், மணற்பரப்புமற்ற -
திறந்த வெளிச் சிறையினில்
பிறந்திருக்கும் -
ஊனமிகு மலர்கள் பற்றியும்
அவள் சொல்ல நான் எழுதிக் கொள்வேன்.

எனினும்
எழுதிடாக் கவிதைகளோ
அனந்தம்.

ஒய்யாரமானதொரு பொன்னந்தி,
அவள் காணாமற் போனதென்ற
தீப்பிடித்து -
ஊரெங்கும் எரிந்தது.
நான் மட்டும் வாழ்ந்திருந்தேன்.

தோண்டுமிந்தக் குழிகளில்
எவ்விடமேனும்,
என் வசீகரக் கவிதை
சிதைந்திருக்கும்.

அதையும் நான் எழுத வேண்டும்.
சப்புமல் குமாரர், வீரம் கொப்பளிக்க
பொடியாக்கிய, வண்ணத்துப்பூச்சிகளின்
அழகிய கனவுகளை
அவளுக்காகவே எழுதுவேன் இன்று.
எனினும் நான்
எழுத மறந்தவைகளோ,
அனந்தம்!
மரணம் யாரைத் தான் விட்டது?

– அறபாத்

## 04021999

கோபம் மேலிட
தலையை வெளியே எறிந்தேன்
யன்னலினூடே
தூங்கியெழுந்த அசல் அழகாய்!

என் இமை இறக்கம் பிரியும்படியாய்
அலறியிருந்தது-
மறி கொண்ட பூனையாட்டம்
அந்த இரு சிறுசுகள் தான்!

ஒருவரை ஒருவர்
அடித்துக் கொண்டனர் விளையாட்டாய்
இருவர் கரத்திலும்
கொசுவி எடுத்த
இரு தேசியக் கொடிக் கம்புகள்!

சற்று சிறுகப் பார்த்தேன்
வெளிச் செல்ல எத்தனிக்கும்
ஒரு இளைஞனைத் தடுத்து
அவன் அன்னை நம்பிக்கையாய் சொன்னாள்
"இன்று தேசிய தினம்
எங்கேயும் போகாதே குண்டு வெடிக்கும்!"

இந்த வீதியில்
அதிகமானோர் பேசிச் சென்றனர்
இன்று
பாதுகாப்பற்ற நாளென்றுதான்!

என்றாலும் பார்த்தேன்
தனது துரயங்களையெல்லாம்
வெளிக்காட்ட
ஒரு வெள்ளைக் கொடிக்கே வக்கில்லாத
குடிசைக் கூரைகளிலெல்லாம்
வர்ணக்கொடிகள்!

எஸ். நளீம்

## விதைப்பு

அவனை நாம் சுமந்து சென்ற போது
முரசுகள் ஒலிக்கவில்லை
சோக கீதமும் இசைக்கவில்லை
அவனை புதைத்த இடத்தில்
எவரும் அஞ்சலி வேட்டுத் தீர்க்கவில்லை.
நட்ட நடு இரவில்
அழுது வடிந்த நிலவொளியில்
சத்தமே கேட்காமல்
அவன் புதை குழியை அகழ்ந்தோம்

அவன் வீர நெஞ்சத்தை
சவப்பெட்டி எதுவுமே மூடவில்லை
துணியில் கூட அவனைச் சுற்றவில்லை
மாவீரன் ஒருவன் ஓய்வெடுப்பது போல்
குருதி ஊறியவுடையோடு
அவன் நிமிர்ந்தே கிடந்தான்
அஞ்சலிகள் சுருக்கமாய் செய்தோம்
துக்கமாய் ஒரு வார்த்தையும் பேசவில்லை
மரணத்தில் உறைந்திருந்த முகத்தைப் பார்த்தபடி
நாளைய நினைவுகளில் தோய்ந்திருந்தோம்

ஒடுங்கிய அவன் இறுதிப் படுக்கையை அகழ்ந்து
தலையணையை மென்மையாக்கும் வேளை
நாளை இந்த இடத்தை எதிரி மிதிக்கலாம்
நாம் எங்கோ தூர இருப்போம்
என்று நினைவுகள் உறுத்தின
நாங்கள் செல்வதற்கான நேரம் வந்தது
தூரத்தே எதிரியின் வேட்டுக்கள் கேட்டன.
மெதுவாய் நாம் அவனை இறக்கி வைத்தோம்
அஞ்சலி வரியும் பொறிக்கவில்லை
நினைவுக் கல் கூட நாட்டவில்லை
அவன் மகிமையில் அவனை தனியே விட்டு
அமைதியாய் எழுந்து நடந்தோம்

சாள்ஸ் வூல்பே

தமிழில் : குழல்
நன்றி: ஈழநாடு (வன்னி)

நன்றி - நூலகத்திட்டம்



"கல்லானாலும் தணிகை மலையின் கல்லாவேன். ஒரு மரமானாலும் பழமுதிர்ச்சோலை மரமாவேன்" என்ற பக்திப் பாடலை முருக பக்தர்கள் அறிவார்கள். சுருட்டானாலும் படையப்பாவின் சுருட்டாவேன் என்று ஒரு பாடல் எழுதலாம். கல்லாகவோ மரமாகவோ மாற பக்தர்கள் யாரும் தயாரில்லையெனினும் சுருட்டாக மாற ரஜனி ரசிகர்கள் தயார். பக்தர்கள் மொட்டை போடுகிறார்களா, ரசிகர்கள் ஒருபடி மேலே போய் முடியிலேயே படையப்பா என்று எழுத்து வெட்டிக் கொள்கிறார்கள். ஆனால் திருத்தணி பழனி என்று தலையில் எழுத்து வெட்டிய பக்தர்களை நாம் இதுவரை கண்டதில்லை.

முருகனுக்கு பால்குடமா, ரஜனி கட்அவுட்டுக்கு பால் பரல். பூந்தமல்லியில் 1500 லிட்டர் பாலை மோட்டார் போட்டு குழாய் மூலம் பீய்ச்சியடித்து ரஜனி கட்அவுட்டுக்கு பால் அபிஷேகம் செய்திருக்கிறார்கள். தெருவெல்லாம் உண்மையிலேயே பாலாறு ஓடியிருக்கின்றது.

இருந்தும் என்ன. ரசிகர்கள் பெருமையுடனோ கூச்சத்துடனோ ஒத்துக் கொள்வார்கள்.


ஆனால் தங்கள் தலைவனுக்குத் தாங்கள் செலுத்தும் காணிக்கையைப் பற்றி மட்டும் அவர்களுக்குத் தெரியாது. பக்தர்களுக்கும் ரசிகர்களுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளில் ஒன்று இது.

### 20 அடிக்கு 15 அடி சுவரொட்டி 100க்கு 10 ரூபாய் வட்டி!

படையப்பா வெளியாவதற்கு முதல் நாள் இரவு சுமார் ஒரு மணி. திருச்சியில் ஒரு தேநீர் கடையில் விறுவிறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. வழக்கமாக இரவு 12 மணிக்குள் கடையை அடைக்காவிட்டால் கடையில் புகுந்து அடித்து நொறுக்கும் காவல்துறை, படையப்பா வெளியாவதையொட்டி விடிய விடியக் கடை நடத்த சிறப்புச் சலுகை வழங்கியிருந்தது.

ரசிகர்கள் சிலர் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தார்கள். 6 சுவரொட்டிகள் சேர்ந்த 15 அடிக்கு இருபதடி சுவரொட்டி ஒன்றின் விலை 50 ரூபாய். குறைந்தது 200 சுவரொட்டிகளாவது அடித்திருப்பார்கள் மொத்தம்-10,000 ரூபாய் செலவு.

ஒட்டி முடித்த பின் தேநீர் குடித்தபடியே மறுநாள் டிக்கெட் என்ன விலைக்குப் போகும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். தலைவர் படத்தின் டிக்கெட் விலை அதிகமாக அதிகமாக பெருமை தான் என்றாலும் அவ்வளவு காசு கொடுத்துப் பார்க்க முடியாதே என்ற வருத்தமும் அவர்கள் பேச்சில் கலந்திருந்தது.



படம் பார்க்க முடியாவிட்டாலும் 10,000 ரூபாய்க்கு சுவரொட்டி அடித்த ரசிகர்களில் ஒருவர் ஓட்டை உடைசல் பிளாஸ்டிக் வாங்கி விற்கும் தள்ளுவண்டி வியாபாரியாம்.

மறுநாள் திருச்சியில் 20 ரூபாய் டிக்கெட்டின் விலை ரூபா 450. பொலிஸார் யாருமே இல்லையா என்று வாசகர்கள் யாரேனும் சந்தேகிக்கக் கூடும். இருந்தார்கள். டி.எஸ். பி. தலைமையில் 50 பொலிஸார் கட்டுப்பாடாக நின்று கள்ளச் சந்தை விற்பனையை இடையூறு ஏதுமின்றி ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார்கள்.

திறமைக்குப் பெயர் போனதல்லவா தமிழகக் காவல்துறை! தமிழகம் முழுவதும் படையப்பா திரையிடப்படும் அரங்குகளில் கள்ளச் சந்தை விற்பனையில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படா வண்ணம் முழுப் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருந்தது காவல்துறை.

படையப்பா

### படையப்பா வசூல் சாதனையை உடையப்பா!

சென்னையில் டிக்கெட் விலை ரூபா.500. விழுப்புரத்தில் அமைச்சர் தலைமையில் உடன் பிறப்புக்கள் ஒரு பெரும் படையாகச் சென்று கள்ளச் சந்தையில் என்ன விலையோ அதை முறையாகச் செலுத்தி டிக்கெட் வாங்கிப் படம் பார்த்திருக்கின்றனர். அமைச்சர் என்ற அகம்பாவத்தில் அவர் சட்டம் பேசவில்லையென்பதும், ஆளும் கட்சி என்ற திமிரில் கழக உடன்பிறப்புக்கள் விலையைக் குறைக்கச் சொல்லி கலாட்டா செய்யாமல் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'படையப்பா முந்தைய வசூல் சாதனைகளையெல்லாம் உடையப்பா' என்று கலைஞரே வாழ்த்தி விட்டதால் வசூல் சாதனையை உடைக்க உதவி செய்வது நம் கடமை என்ற காரணத்தினால் எல்லா திரையரங்குகளிலும் கள்ளச் சந்தை விற்பனைக்கு உரிய பாதுகாப்பு அளித்தனர்.

ரஜனியின் புதுப்படம் வெளிவந்தால் கொஞ்ச நாட்களுக்கு கள்ளச் சந்தையில் தான் டிக்கெட் விற்கும் என்பது ஊரறிந்த சேதி. ஆனால் இந்தப் பணமெல்லாம் யாருக்குப் போகிறது. திரையரங்கு முதலாளியும் உள்ளூர் ரசிகர் மன்றத்தின் தலைவர்களும் தான் இந்தக் கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதாக ரசிகர்கள் பலர் நினைக்கிறார்கள். இது உண்மையல்ல.

### ரஜனிக்கு ஒதுங்கியது 100 கோடி

உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவனுக்கு எலும்புத் துண்டு. திரையரங்கு முதலாளிக்கு கறியோடு சேர்ந்த எலும்பு. ரஜனிக்கு எலும்பே இல்லாத கறி என்ற விகிதத்தில் தான் இந்தக் கள்ளச் சந்தைக் கொள்ளை பங்கு போடப்படுகிறது. படையப்பா படத்தில் ரஜனிக்கு ஒதுங்கியிருக்கக் கூடிய கறியின் எடையை ரூபாய்க் கணக்கில் சொன்னால் சுமார் 100 கோடி ரூபாய். (பார்க்க பெட்டிச் செய்தி)

இதைச் சொன்னவுடனே ஒரு கேள்வியை எதிர் பார்க்கலாம். 20 ரூபாய் டிக்கெட்டை 500 ரூபாய் கொடுத்து வாங்குன்னு ரஜனி சொன்னாரா? பத்து நாள் பொறுத்துத் தான் படம் பார்க்குறது. உனக்கு திமிரு. வெறி. அதுக்கு அவரு என்ன செய்ய முடியும்? என்பது தான் அந்த வழக்கமான கேள்வி.

அப்படிப் பார்த்தால் நாம் கொடுப்பதனால் தான் அரசியல்வாதி இலஞ்சம் வாங்குகின்றான். நாம் கவனக் குறைவாக இருப்பதனால் தான் திருடன் கொள்ளையடிக்கிறான் என்று வியாக்கியானம் செய்ய வேண்டியது தான்.

ரசிகன் கண்டிக்கப்பட வேண்டிய முட்டாள். ரஜனியோ தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி.

ரசிகர்களின் வெறி தானாக உருவாவது அல்ல. உருவாக்கப்படுவது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தமிழக இளைஞர்கள் ரசிகர் மன்றம் வைத்துத் தங்களைத் தொல்லை செய்வது போலவும், வேறு வழியில்லாமல் தாங்கள் அதைச் சகித்துக் கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பதைப் போலவும் பம்மாத்துக் காட்டுகிறார்கள் நடிகர்கள்.

### வெறி உருவாக்கப்படுகிறது!

விபசாரத் தரகன், விடுதிக்காரன், விலைமாதர் கூட்டணியைப் போல, சாராயக்கடை சாக்கனாக்கடை வட்டிக் கடை கூட்டணியைப் போல சினிமா கதாநாயகன் முதலாளிகள் பத்திரிகைகள் ரசிகர் மன்றக் கூட்டணி வேலை செய்கிறது.

படம் வெளிவருவதற்கு முன்பே ரஜனி ரசிகன் பத்திரிகை 8 படையப்பா சிறப்பிதழ்கள் வெளியிட்டுள்ளது. 15 லட்சம் ரஜனி போஸ்டர்களை விற்றுள்ளது. ஓட்டோக்களில் ஒட்ட ரஜனி ஸ்டிக்கர்கள் இலட்சக் கணக்கில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. படம் வெளிவருவதற்கு முன் தமிழ் தினசரிகளும் வார இதழ்களும் சினிமாச் செய்தி என்ற பெயரில் வெளியிட்ட படையப்பா பட விளம்பரங்களுக்கு விளம்பரக் கட்டணத்தின் அடிப்படையில் கணக்கு போட்டால் பல கோடி ரூபாய் வரும்.

இவையன்றி பட பூசையில் உடைத்த தேங்காய்க்குள் பூ இருந் ததனால் வெற்றி உறுதி என்பது போன்ற சகுனச் செய்திகள். அரசியலுக்கு வருவதைப் பற்றி இந்தப் படத்தில் தெளிவாக அறிவிக்கப் போகிறார் என்ற வதந்திகள். படையப்பா படத்தை உலகெங்குமுள்ள பயங்கரவாதிகளை வைத்து ஜெயலலிதா தடுப்பதைப் போலவும், ரஜனி அதையெல்லாம் எதிர்த்து உயிரைப் பணயம் வைத்துப் போராடி படத்தை வெளியிடுவது போலவும் கட்டுக் கதைகள். படத்தின் கதை என்ன, கதாநாயகி யார் என்பது பற்றிய ரகசியத் தகவல்கள், புலனாய்வுகள்...

நக்கிப் பிழைக்கும் பத்திரிகையாளர்கள் மூலம் ரஜனி கும்பல் திட்டமிட்டே உருவாக்கிய பரபரப்புக்கள் இவை. நக்கீரனால் நடத்தப்படும் ரஜனி ரசிகன் முதல் அறிவாளிகளின் தினமணி வரை யாரும் இதற்கு விதிவிலக்கல்ல.

இவையனைத்தாலும் போதையூட்டப்படுவதனால் தான் திருச்சி பிளாஸ்டிக் வியாபாரியைப் போன்ற ரசிகர்கள் 5 வட்டி 10 வட்டிக்கு கடன் வாங்கி சுவரொட்டி அடித்து ஒட்டுகிறார்கள்.

படத்தின் தயாரிப்புச் செலவு 5 கோடி ரூபாய் தான். ஆனால் தமிழகத்திலுள்ள ரசிகர் மன்றங்கள் ஒட்டிய சுவரொட்டிகளின் மதிப்பு 10 கோடி ரூபாயைத் தாண்டும். ஏப்ரல் 10ம் தேதியன்று படையப்பா வெளிவருகிறது என்ற ஒரு நிகழ்ச்சியைத் தவிர என்ற தமிழகத்தில் ஒரு கல்யாணமோ காதுக்குத்தோ கருமாதியோ பொதுக் கூட்டமோ கூடக் கிடையாது என்பது போல எல்லா ஊர்களிலும் எங்கு திரும்பினாலும் படையப்பா சுவரொட்டிகள் மட்

இப்படிப் பல முனைகளிலிருந்தும் வெளியேற்றி விட்ட பின் 20 ரூபாய் டிக்கெட்டை 500 ரூபாய்க்கு ஏன் வாங்குகிறார்கள் என்று கேட்பதும், சாராயத்தை ஊற்றி மேளம் அடிக்க விட்டு ஏண்டா ஆடுகிறாய் என்று கேட்பதும் ஒன்று தான்.

### ரசிகர் மன்ற செயலரா, அரசு தலைமைச் செயலரா?

உதிரியாக இருக்கும் ரசிகர்கள், மன்றமாக ஆக்கப்படுவதும் அவை பதிவு செய்யப்படுவதும் மாவட்டச் செயலாளர்கள் மேலேயிருந்து நியமிக்கப்படுவதும் அவர்கள் ஏதோ பன்னாட்டுக் கம்பெனியின் பிராந்திய அதிகாரி போல மாருதி கார் செல்போனுடன் அலைவதும் எதற்காக? கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்று ரஜனிக்கு கோடிக் கணக்கில் சுருட்டிக் கொடுக்கவும் மிச்சம் மீதியைப் பொறுக்கித் தின்னவும் தான்.

ஒரு சாதாரண மனிதனின் பொது அறிவுக்கு எட்டக் கூடிய உண்மை தான்

படையப்பா ⇨

## கள்ளக் கணக்கு!

**படையப்பா திரைப்படத்தின் தயாரிப்பு செலவு 5கோடி ரூபாய். விற்பனை 30 கோடிக்கும் அதிகம் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. பட ஓடியோ கசெட் உரிமை 2.85 கோடிக்கும் வெளிநாட்டு உரிமை 1.80 கோடிக்கும் விற்கப்பட்டுள்ளது. படச்சுருள் 180 பிரிண்டுகள் போடப்பட்டுள்ளன. இவை படையப்பா புகழ்பாடும் இந்தியா டுடே வெளியிட்டுள்ள கட்டுரையில் காணப்படும் தகவல்கள்.**

**இந்தத் தகவல்களில் தயாரிப்புச் செலவு, விற்பனைத் தொகை போன்ற விபரங்கள் சந்தேகத்துக்கு உரியவையெனினும் 180 பிரிண்டுகள் என்பது ஆதாரபூர்வமானதே. இதனடிப்படையிலும் நாம் நேரடியாக கண்டறிந்த விவரங்களின் அடிப்படையில் ஒரு எளிய கணக்குப் போட்டுப் பார்ப்போம்.**

**180 பிரிண்டுகளில் வெளிநாடுகளுக்கு அனுப்பியவை போக, 150 பிரிண்டுகள் 150 திரையரங்குகளில் வெளியிடப்படுகின்றன. குறைந்த பட்சம் படம் வெளியான முதல் மூன்று நாட்களில் 25 ரூபாய் மதிப்புள்ள டிக்கெட் 400 முதல் 500 ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சமாக கணக்கிட்டாலும் ஒரு டிக்கெட்டுக்கு ரூ.300 இலாபம்**

**திரையரங்குகளில் 900 முதல் 1500 இருக்கைகள் உள்ளன. முதல் மூன்று நாட்களில் நின்று கொண்டும் தரையில் அமர்ந்தும் படம் பார்க்கும் ரசிகர்கள் பல நூறு பேர். இருப்பினும் 1200 இருக்கைகள் சராசரி எனக் கொள்வோம்.**

**ஒரு காட்சிக்குக் கள்ளச் சந்தை இலாபம் (ரூ.300 X 1200) 3,60.000 ரூபாய். மூன்று நாட்களில் மொத்தம் 12 காட்சிகளுக்கு (ரூ.3,60,000 X 12) 43,20,000 ரூபாய்**

**அடுத்த ஒரு வாரத்திற்கு 100 ரூபாய் விலையில் டிக்கெட் விற்பதாகக் கொண்டாலும் ரூ.75 வீதம் 84 காட்சிகளுக்கு கள்ளச் சந்தை இலாபம் 25,20,000.**

**மொத்தத்தில் முதல் 10 நாட்களில் ஒரு திரையரங்கின் கள்ளச் சந்தை இலாபம் 70 இலட்சம். 150 திரையரங்குகளுக்கு 105 கோடி ரூபாய்! அதற்கு மேல் இப்படம் 100 நாள் ஓடினால் அதன் இலாபம் கணக்குத் தனி.**

**இந்தக் கணக்குக் கூட மிகவும் குறைவு என்று நிரூபிப்பது போல தமிழன் எக்ஸ்பிரஸ் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. படையப்பா படத்தின் திருட்டு வீடியோ பற்றி திரையரங்க முதலாளிகள் கவலைப்படவில்லையாம். ஏனென்றால் அவர்கள் போட்ட காசை (அதாவது சுமார் 70 இலட்சத்தை ) ஒரே வாரத்தில் எடுத்து விட்டார்களாம்.**

**ரஜனியின் படத்துக்கு விநியோகஸ்தர் அவரே தான். படையப்பா படத்தின் தயாரிப்பாளரோ ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணன்.**

**இந்தக் கணக்கு தவறு என்றோ, வசூல் அவ்வளவு இருக்காது என்றோ விளக்கம் சொல்பவர்களுக்கு நம்முடைய பதில் ஒன்று தான். ஊழல் ராணியை எதிர்க்கும் யோக்கியர் கணக்கை பகிரங்கமாக சொல்லட்டும்!**

நன்றி - நூலகத்திட்டம்



இது. ஆண்டுக்கு ஒரு படம் நடிக்கும் ஒரு நடிகரின் (இப்போது இரண்டு ஆண்டுக்கு ஒன்று) அகில உலக ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணன் மாவட்டந் தோறும் சுற்றுப் பயணம் செய்து இருக்கிறாரே எதற்கு? குளம் வெட்டுவது, தூர் வாருவது, சாலை அமைப்பது போன்ற பணிகளில் ரசிகர் ம்ன்றங்கள் ஈடுபட்டிருக்கின்றனவா, அவற்றை பார்வையிட இவர் சுற்றுப் பயணம் போகிறாரா?

படம் வராத காலத்திலும் கள்ளச் சந்தை தலைவர்களான மாவட்டச் செயலாளர்கள் கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது. அவர்களுக்கிடையிலான தகராறுகளுக்கு கட்டை பஞ்சாயத்து செய்வது. அன்னதானம் தையல்மிஷின் பாடப் புத்தக விநியோகம் போன்ற நாடகங்கள் மூலம் படம் வராத காலத்திலும் ரசிகர்களுக்கு போதை இறங்காமல் கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது. இதுதான் அகில உலகத் தலைவரின் வேலை.

தமிழ்த் திரையுலகமே திவால் நிலையில் மூழ்கிக் கொண்டிருக்கும் போது ரஜனி படம் ... கோடி கோடியா... குவிப்பதும், 50 நாள் ...ய படங்களெல்லாம் அசல் கூடத்

ரஜனியிடம் எதைப் பிடுங்கப் போகிறது?

'அளவுக்கதிகமா ஆசைப்பட்ட ஆணும் அளவுக்கதிகமா கோபப்பட்ட பெண்ணும்



நன்றாக வாழ்ந்ததா சரித்திரமில்லை' என்பது படையப்பாவின் கைதட்டல் பெறும் வசனம். 5 கோடி ரூபாய் முதல் போட்டு 100 கோடி கொள்ளையடிப்பது ரொம்பவும் அளவான ஆசை போலும்!

### முதலாளிகள் ரஜனி கூட்டு சதி

என்று உத்தரவு போட்டவனே தங்கள் தலைவன் தான் என்ற உண்மை அந்த மூடர்களுக்குத் தெரியவில்லை.

கொடி தோரணம் கட்டி, சொந்தச் செலவில் போஸ்டர் ஒட்டி, பச்சை குத்தி மொட்டை போட்டு அலகு குத்தி ஆடும் ரசிகன் அடி முட்டாளாகவே இருக்கட்டும். இத்தனையும் செய்ததற்கு கைம்மாறாகக்கூட ஒரு டிக்கெட்டை, உள்ள விலையில் கொடுக்க முடியாது கள்ள விலையில் ரூபா 400 அல்லது 500 கொடுத்துத் தான் வாங்க வேண்டும் என்று சொல்லும் இந்தக் கும்பலை பிணந்தின்னி என்பதா ஓநாய் என்று அழைப்பதா?

ஏமாளி ரசிகர்களை கொள்ளையடிப்பது வரி ஏய்ப்பு செய்வது ஆகியவற்றைப் பற்றியெல்லாம் இந்தக் கள்ளச் சந்தைக் கதாநாயகர்களான ரஜனி கமல் சரத் விஜய் விஜயகாந்த் ஆகியோருக்கு கடுகளவு உறுத்தல் கூட இருக்காதா? இந்தக் கேள்விக்கு 13.1.99 தேவி வார இதழில் தெளிவாகப் பதில் சொல்கிறார் சரத்குமார்.

### ஏழைகளைக் கொள்ளையடிக்க உதவுங்கள் – சரத்குமார்

சந்திப்பில் ஏதோ மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவம் உள்ளதைப் போன்று எழுதுகிறது. ஊரைக் கொள்ளையடிப்பது எப்படி என்று சூப்பர் ஸ்டாரும், சுப்ரீம் ஸ்டாரும் இரகசியமாகத் திட்டம் போட்டால் அதற்கும் அரசியல் மரியாதை!

### கால் திருடனைப் பிடி
### முழுத் திருடன் பரிசு தருவார்

கள்ளச் சந்தையில் ரசிகன் டிக்கெட் வாங்க வேண்டும். அரங்கு நிறைந்த காட்சிகளாக படம் ஓட வேண்டும் என்பதற்காக அவன் 15 அல்லது 20 முறை திரும்பத் திரும்ப அதே படத்தைப் பார்க்க வேண்டும். ரசிகன் என்ற பிராணியின் கடமை அதோடு முடியவில்லை. திருட்டு கசெட், வீடியோ, சி.டி. யையும் ஒளிபரப்பும் கேபிள் டி.விக்காரனையும் பிடித்துத்தர வேண்டுமாம். தகவல் தரும் ரசிகருக்கு சூப்பர் ஸ்டார் கையால் ரூபா 25,000 பரிசு தரப்படுமாம்.

தமிழகத்தைத் திருட எனக்கு மட்டும் தான் உரிமை உண்டு என்பது தானே இதற்குப் பொருள்!

படையப்பா ஓடுகின்ற திரைய-ரங்குகளில் கள்ளச் சந்தை டிக்-கெட் விற்பதாக ஒரேயொரு ஆளைக் கூடப் பிடிக்காத காவல்துறை திருட்டு வீடியோவை வலைவீசிப் பிடிக்கிறது. அந்தப் பொலிஸ் அதிகாரிகளை பத்திரி-கையில் விளம்பரம் கொடுத்துப் பாராட்டுகிறார் படையப்பா.

### தாலி அறுத்த காசில்
### தருமம் செய்கிறார் எசமான்

படையப்பாவின் வருமானம் சிந்தாமல் சிதறாமல் தன் கைக்கு வந்து சேர வேண்டும் என்று ரஜனி இப்படி அரும்பாடுபடுவதற்குக் காரணம் இருக்கிறதாம்.

இந்தப் படத்தின் மூலம் வரும் வருவாயை வைத்து கல்வி அறக்கட்டளை தொடங்கப் போறதா அறிவிச்சிருக்கிறார் ரஜனி சார். இதன் மூலம் பணக் கஷ்டப்படுகிற ஏழை மாணவர்கள் கல்வி அறிவு பெற முடியும். அவர்களின் குடும்பம் தழைக்கும். ரஜனி என்கிற நல்ல உள்ளத்திடம் உள்ள இந்த உன்னத எண்ணம் ஈடேறனும் அதற்காக இந்தப் படம் மாபெரும் வெற்றியடையணும் (சத்திய நாராயணன் பேட்டி)

கந்து வட்டிக்கு கடன் வாங்கி பெண்டாட்டி நகையை அடமானம் வைத்து பாத்திரம் பண்டத்தை விற்று வீட்டில் காசைத் திருடி எதையாவது செய்து கள்ளச் சந்தையில் டிக்கெட் வாங்கி அந்த நல்ல உள்ளத்திடம் 100கோடி ரூபாயைக் கொடுத்தால் அதை வைத்து அவர் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்வாராம்.


எவ்வளவு உதவி என்பதும் எல்லா பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் வந்து விட்டது. ஒரு மாவட்டத்துக்கு ஒரு லட்சம் வீதம் 29 இலட்ச ரூபாயை 'அள்ளிக்' கொடுத்திருக்கிறார். 100 ரூபாய் தேடி 30 காசு இனாம். பழனி படிக்கட்டுப் பிச்சைக்-காரனிடம் கையேந்தினால் கூட அதிகம் கிடைக்கும் இந்த 29 இலட்சம் தருமத்துக்கு பத்திரிகை செய்திகள் தந்த விளம்பரத்தின் மதிப்பு 30 இலட்சம் இருக்கும்.

ஒவ்வொரு திருடனும் கிடைக்கின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே வள்ளலாக மாற விரும்புகிறான். பிறகு வள்ளலோ அதிகார-பூர்வமாக ஊரைக் கொள்ளையடிக்கும் பொருட்டு விரும்பும் வள்ளலோ முதல்வராக விரும்புகிறான்.

'என் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுண் தங்கக் காசு கொடுத்தது தமிழல்லவா' என்று பாடுகிறார் படையப்பா. முற்றிலும் உண்மை! ஆனால் அந்தத் தங்கம் ஊர் தாலியறுத்த தங்கம்!

**- சூரியன்**

**நன்றி : புதியகலாச்சாரம்**



திரும்ப வராமல் தடுமாறும் போது ரஜனி படம் போட்ட முதலையும் மூன்று மடங்கு இலாபத்தையும் முதல்நாள் வசூலிலேயே பாாத்து விடுவதும் இப்படித்தான்.

### வரி ஏய்ப்புக்கு அரச உடந்தை

இனி பிரச்சினையின் இன்னொரு பக்கத்தைப் பார்ப்போம்.

திரையரங்க முதலாளிகளின் கஷ்டத்-தைப் பரிசீலித்து 10 ரூபாய் டிக்கெட்டை 15 ஆகவோ 20 ஆகவோ விருப்பம் போல ஏற்றிக் கொள்ள ஏற்கனவே அனுமதித்-திருந்தார் ஜெயலலிதா.

தற்போது சூப்பர் ஸ்டார் சுப்ரீம் ஸ்டார் போன்ற கலைஞர்-களின் துன்பத்தை தாயுள்ளத்துடன் பரிசீலித்து 500 ரூபாய்க்கு டிக்-கெட் விற்க அனுமதித்திருந்தார் கலைஞர்.

கள்ளச் சந்தை லாபமொன்றையே குறியாகக் கொண்ட இந்தக் கொள்ளைக் கூட்டம் எந்த அளவிற்கு இரக்கமற்றது நரித்தனமானது என்பதை நிரூபிக்கும் விதமாக தினமலர் நாளிதழில் ஒரு செய்தி வெளிவந்தது.

படையப்பா வெளியாவதற்கு சில நாட்கள் முன்னதாக திரையரங்கு முதலாளிகள் ரஜனியைச் சந்தித்தார்களாம். படம் வெளியாகும் நாளன்று வணிக வரித்துறையின் கெடுபடி இருக்குமென்று ஒரு வதந்தி. உங்களுக்கு இலட்சக் கணக்கில் கொடுத்து படத்தை வாங்கியிருக்கிறோமே கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்காவிட்டால் நாங்கள் கறையேற முடியாதே என்று ரஜனியிடம் புலம்பினார்களாம்.

அதே நேரத்தில் டி.இராஜேந்தர், சரத்குமார் ஆகிய தி.மு.க. பிரமுகர்களின் படங்களும் வெளியாவதால் பிரச்சினை

பெரிய பெரிய ஆர்ட்டிஸ்டுகளின் படங்கள் ரிலீஸ் ஆகும் போது நாலு வாரம் ஐந்து வாரம் ப்ளாட்டா போடும் போது (அதாவது 20ரூபாய் டிக்கெட்டை 400க்கு விற்கும் போது) அதன் கலெக்ஷன் ரேஞ்சே வேற! அதனால் தான் டிஸ்டிரிபியூட்டர்கள் தயாரிப்பாளர்களுக்கு ஹெவி எமவுண்டு அட்வான்ஸ் கொடுத்து புக் பண்ணி விடுகிறார்கள். இந்த எமவுண்டை பட ரிலீஸின் போது நாலைந்து வாரங்களில் எடுத்து விட முடியும். நார்மல் ரேட்டுல படம் ஓடினால் போட்ட பணத்தை எடுக்கிறது ரொம்பவும் கஷ்டம். ரொம்ப நாளாகும். ரிஸ்க்கும் கூட.

அதனால் நமது முதல்வர் கலைஞர் கருணையுடன் புதிய வழியைக் கண்டு பிடித்து சினிமாவைக் காப்பாற்ற வேண்டும். கட்டணத்தை உயர்த்துவது பற்றிக் கூட ஆலோசிக்கலாம். படம் ரிலீஸானதும் தங்கள் அபிமான நடிகனின் படத்தை என்ன

# ரசிகர்களிடம் திருட்டு!
# கோடிகோடியாய் சுருட்டு!!

500 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்குபவன் திமிரெடுத்தவன் என்றே வைத்துக் கொள்வோம். அதற்குரிய கேளிக்கை வரி வசூலிக்கக் கூடாது என்று ரசிகன் தடுத்தானா? சிறு வியாபாரிகளின் ரத்தம் குடிக்கும் வணிக வரித்துறை அதிகாரிகள் யாருக்கும் இந்த வரி ஏய்ப்பு பற்றி தெரியவே தெரியாதா?

5 கோடி ரூபாய் படம் 30கோடிக்கு விற்றதாக இந்தியா டுடே எழுதுகிறது. 60 லட்சம் 70 லட்சம் முற்பணம் கொடுத்ததாக திரையரங்க முதலாளிகள் சொல்கிறார்கள். 60 லட்சத்தை 180 ஆல் (180 பிரிண்டுகள்) பெருக்கினால் கணக்கு வருமான வரித்துறை வருவாய் புலன் ஆய்வுத் துறை அதிகாரி-களுக்குத் தெரியாதா? இதை ஆராயாமல் முட்டைக்கு முடி ஆராய்ந்து கொண்டி-ருக்கிறார்களா?

மின்சார வரி கட்டவில்லையென்றால் மறுநாள் பியூஸ் கட்டையைப் பிடுங்கும் அரசு, கோடிக் கணக்கில் வரி ஏய்க்கும்

எதுவும் இருக்காதென்றும், யாமிருக்கப் பயமேன்? என்றும் சமாதானம் சொல்லியனுப்பினாராம் படையப்பா.

மீண்டும் வந்தார்கள் திரையரங்க முதலாளிகள். கள்ளச் சந்தை விலை அதிகமாக இருந்தால் நாங்களே அதிகாரிகளுக்கு புகார் செய்வோம் என்று ரசிகர்கள் மிரட்டுகிறார்-களே என்று மன்றத் தலைவர் சத்திய நாராயணனிடம் புலம்பினார்களாம். திரையரங்க முதலாளிகளிடம் யாராவது தகராறு செய்தால் உடனே அந்த மன்றங்-களையே கலைத்து விடுவேன் என்று சம்பந்தப்பட்ட ரசிகர் மன்றங்களை மிரட்டினாராம் அகில உலகத் தலைவர்.

இந்த ரகசியம் தஞ்சையின் தெருவுக்கு வந்து விட்டது. ரசிகர் மன்றக் காட்சி என்று வழக்கமாக தரப்படும் சலுகைகூடத் தங்களுக்குத் தரப்படவில்லை என்று திரை-யரங்கத்துக்கு எதிராக சாலை மறியல் நடத்தினார்கள் ரசிகர்கள். தர வேண்டாம்

விலை கொடுத்தாவது பார்க்கணும்னு துடிக்கிறவங்க லோகிளாஸ்ல்ல தான் இருக்கிறாங்க. நாலைஞ்சு வாரம் அடிச்சுப் பிடிச்சு வெறியோட அவங்க தான் படம் பார்க்க வருகிறார்கள். அதற்கு பிறகு கலெக்ஷன் இருப்பதில்லை! ஸோ..முதல் அஞ்சு வாரத்தை பெஸ்டிவல் சீசனா நினைச்சு ஒரு வழியை கலைஞர் காட்ட வேண்டும்.

தன்னுடைய லோ கிளாஸ் ரசிகனை ஏமாற்றவும் திருடவும் உரிமை வேண்டும் என்பதை இதை விடப் பச்சையாகக் கேட்க முடியுமா? படம் வெளியாகி 5 வாரத்திற்கு சந்தையில் டிக்கெட் விற்கவும், வரி ஏய்ப்பு செய்யவும் சட்டப்படியே உரிமை வேண்டும் என்பதை இதைவிட வெளிப்-படையாகக் கேட்க முடியுமா?

சரத்குமாரின் இந்தப் பேட்டி வெளியான தேவி (13.1.99) இதழ் ரஜனி - சரத் இரகசிய சந்திப்பு என்று இதற்குத் தலைப்பிட்டு அவர்களது

## தடம்



ஆரம்பத்தில்
சிறு வட்டப் புள்ளியாய்த்தான் மார்பிருந்தது.
பின்னர்
சற்றேயுயர்ந்த கோபுரம் போலவும்,
என் சட்டையை
அரைவாசிக்கு உயர்த்திக் கொண்டு
ஒரு சர்க்கஸ் கூடாரம் போலவும்
அது இருந்தது.

சொந்தக்காரர்களுக்கான
ஒரு பொதுச் சொத்துப் போலவும் அது இருந்தது.
மாமிமார் அது பற்றி ஆருடங்கள் சொன்னார்கள்.
மாமாமாரின் கண்களை அது அழைத்துக் கொண்டிருந்தது.

கூடவே அது
எனக்கே உரித்தான
என் சொந்தப் பொருளாகவும் இருந்தது.
குளியலறைக் கண்ணாடியில் தெரிகின்ற
என்னுடம்பின் முதலாவது புதிய வரவு அது!
மூச்சடங்கிப்போன இரவுகளில்
என்னை,(என்னுடம்பின்) ஏனையவைகளை
நான் கண்டுபிடித்துக் கொள்ளக் கிடைத்த
ஒரு தடமும் அது!

ஆங்கிலத்தில்: Mary Mclaughlin Slechta.
தமிழில்: ஜிப்ரான்

நன்றி - நூலகத்திட்டம்



# எண்பது தொண்ணூறுகளில் தமிழ் நாடக இலக்கியம்

- வெங்கட் சாமிநாதன்

எண்பதுகளுக்குப் பிறகு எழுதப்பட்டுள்ள தமிழ் நாடகங்கள் பற்றி ஒரு பார்வை செலுத்தும்படி நான் கேட்கப்பட்டிருக்கிறேன். நான் கேட்கப்படுவதும், எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பும், ஒரு விடம்பனமாகத்தான் (Irony) எனக்குத் தோன்றுகின்றன. தியேட்டர் இண்டியா பத்திரிகையை நான் குற்றம் சொல்லவில்லை. தமிழர் அல்லாதாருக்கு என்ன தெரியும், தமிழ் நாட்டில் என்ன நடக்கிறதென்று இன்னமும் தெளிவாக, சரியாகச் சொல்வதென்றால் என்ன நடக்க மறுக்கிறது, என்ன நடப்பதில்லையென்று? தமிழ் நாடக உலகில், ஒரு தொடர்ந்த இயக்கமோ, மரபோ கிடையாது. நாடகக் கலாசாரம் என்ற ஒன்று கிடையாது. இது உண்மை. இந்த உண்மையைக்காண மறுத்துப் பயனில்லை. நான் சற்று தடம் மாறிப் போக வேண்டும். சொல்லப் பணிக்கப்பட்ட விஷயத்தைத் தெளிவுபடுத்த, அதற்கான பின்னணியை அதன் பழமையை, சமீபத்திய, தூரத்திய, பழமையை சரித்திரத்தை வேகமாக அங்கங்கே தொட்டுத் தொட்டாவது சொல்ல வேண்டும். கடந்த இருபது வருடங்களாக நடந்து வரும் விசித்திர அலங்கோல நிலைக்கு வந்து சேர்ந்தது எவ்வாறு என்று விளக்க. இன்றைய நிலை இதுதான் சொல்லி விட்டுச் செல்லலாம் தான். ஆனால், அந்த நிலைக்குத் தள்ளிய ஒரு வரலாறும், பின்னணியும் இருக்கும்போது? - அதை எப்படி ஒதுக்குவது? இன்றைய நிலையை மாத்திரம் சொல்வது, மற்றவர்களுக்குப் புரிந்து கொள்ள கஷ்டமாக இருக்கும்.

இக்கால கட்டத்திய மிகச் சிறந்த படைப்புகளான ஸ்ரீ.பி. தேஷ்பாண்டேயின் உத்வஸ்த் தர்மஸ்தலா, வோ அல்லது மகேஷ் எல் கஞ்சுவரின் விராசத்தோ அதன் மிகச் சிறந்த மேடை இயக்கமான விஜயா மேத்தாவின் தயாரிப்போ, இன்றைய தமிழ், அதாவது "நவீன நாடக"க்காரர்களின் முன் வைக்கப்படுமானால் அவர்கள் இவற்றை "இவை என்ன பழைய உளுத்துப்போன படச் சட்டமேடை தயாரிப்புகள்! காலனிய ஆதிக்கத்தின் விளைவுகள்! மேற்குக் கலாசாரத்தின் நகல்கள்! காலாவதியாகிப்போன யதார்த்த பாணிகள்! முதலாளித்துவ சமூகத்தின் எச்சங்கள்!" என இவற்றிற்கு அவர்கள் கையில் தயாராக இருக்கும் லேபல்கள் குத்தப்பட்டு, குப்பைக் கூடையில் வீசப்பட்டுவிடும். இந்தியா முழுவதுமே பேசப்பட்ட, சிகரப் படைப்புகளான இவை, இவ்வாறு தூக்கி எறியப்படுவதற்கு தமிழ் நாடக உலகின் இந்த "நவீனர்"களின் சாதனைச் சிகரங்கள் தான் என்ன, அப்படி உன்னதங்கள்! என்று ஆச்சரியப்பட்டுப்போவோம். இதற்கான பதிலாக நீங்கள் செய்துள்ளது என்ன என்று இந்த "நவீனர்" களைக் கேட்போமானால், அவர்கள் தரவிருப்பது மிகப் பரிதாபமாக இருக்கும்.

நான் அதிக விபரங்களுக்குப் போக முடியாது. சற்று வேகமாக, சுருக்கமாக இந்தப்பரிதாப நிலைக்கு வந்த சரித்திரத்தைச் சொல்ல வேண்டும்.



2

வங்காளத்தில் 19ம் நூற்றாண்டின் பின் பாதியிலிருந்து அதாவது கிரீஷ் சந்திர கோஷ் தொடங்கி, ஒரு தொடர்ந்த உயிர்த்துடிப்பும், வன்மையும் கொண்ட நாடக இயக்கம் இருந்துள்ளதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதன் தொடர்ந்த பிரயாணத்தில் அநேக கீர்த்திபெற்ற பெயர்களைக் கேட்டிருக்கிறோம். இதே போன்று, மகாராஷ்டிரத்திலும், கிட்டத்தட்ட நூற்றைம்பது வருடத்திற்கும் மேலான, வலிமை மிக்க நாடக இயக்கம் இருந்துள்ளது. 'சினிமா வந்தது, வீடியோ வந்தது. தேய்ந்து போயிற்று. ஆதரவு குறைந்தது. நாடகத்தை விட்டு சினிமாவுக்குப் போனார்கள் என்றெல்லாம் பேச்சே கிடையாது. கால மாற்றத்தால் வரும் எந்த சவாலையும் எதிர்கொண்டு போட்டியிட்டுள்ளன இந்நாடக இயக்கங்கள். தமிழ் நாட்டில் இப்படி ஒரு பலம் வாய்ந்த, வழமையான தொடர்ந்த நாடக இயக்கம் என்றுமே இருந்ததில்லை. இருந்த அளவிற்கு, இருந்த காலத்திற்கு அதற்கு சமூக கௌரவமும் இருந்ததில்லை. எங்கள் நாடகத்திற்கு ஒரு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பார்வையாளராக வருவார் என்று நாங்கள் எதிர்பார்க்க முடிந்திராது. வங்கத்தில் நிகழ்ந்தது இது.

எனக்குத் தெரிந்து, அறுபது எழுபதுகளில் இந்நாடக இயக்கங்கள் பெற்றிருந்த சிறப்பை, மகத்துவத்தை இன்று எண்பதுகளில், தொண்ணூறுகளில் பெறாமல் இருக்கலாம். சற்று மங்கியிருக்கலாம். இருப்பினும் அவை தொடர்கின்றன பலத்துடன். காரணம் பழைய நாடகப் பெருந்தலைகள் இன்றில்லை. இது எங்கும், என்றும் நடப்பது தான். மனித வரலாற்றில் அதன் கலாசார பிரவாஹத்தில் இத்தகைய ஏற்றங்கள், இறக்கங்கள் உண்டு தான். ஒரு கால கட்டம் சிருஷ்டி இயக்கத்தின் வெள்ளப் பெருக்கமாக இருக்கும் ஒரு கால கட்டம். அதன் ஒன்றிணைப்பு, கட்டமைப்பு என்றிருக்கும். ஒரு கட்டம் அதன் தேக்க காலமாகவிருக்கும். அறுபது எழுபதுகளில் டில்லியின் மாலை நேரங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய ஆச்சரியத்தை, உற்சாகத்தை நிகழ்விப்பதாக இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய அனுபவம் தரும் மாலையாக இருக்கும். இப்போது அது மந்தித்துப் போயுள்ளது என்பாரும் உண்டு. அலையின் சீற்றம் அடங்கியுள்ளதாகச் சொல்வாரும் உண்டு. உலக திரைப் படத்தையே எடுத்துக் கொள்வோமே. அறுபதுகள் எழுபதுகள் மேற்கு ஐரோப்பிய, கிழக்கு ஐரோப்பிய சினிமாவின் ஒரு புதிய திருப்பமான கால கட்டம். பல இன்றும் நினை கூரப்படும் பெருங்கலைகள் இயங்கிய காலகட்டம். சாப்ரோல், வெர்னர், ஹொஸாக், பாஸ் பைண்டர் என்று நான் அடுக்கிக் கொண்டே போகலாம். அக்காலகட்டம் தான் மிருணாள் சென், ஸத்யஜித்ரே, குரஸ்வா, புனுவேல், பெர்க்மன் என அது ஒரு பெரும் நட்சத்திரக் கூட்டம். (Galaxy) இன்று அந்த வானம் வெறித்துக் கிடக்கிறது. இந்திய துணைக் கண்டத்தின் எந்த பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் 30க்கள், 40க்களின் சிருஷ்டிப் பிரவாஹம் தொட்ட சிகரத்தை பின் வந்த வருடங்கள் என்றுமே தொட்டதில்லை. இது வரலாற்றின் இயல்பு

விஷயத்திற்கு வருவோம். தமிழில் முதன் முதலாக நாடக இயக்கத்தின் நிர்மாண பூர்வமான வேலை என்று சொல்லக்கூடியது 1891ல் சம்பந்த முதலியார், சுகுண விலாச சபை என்று அமெச்சூர் நாடக சபை தொடங்கியது தான். நாடகப் பிரதி என திட்டவட்டமாக எழுதத் தொடங்கியது அவர் தான். அவரது தான் முதல் நாடகப் பிரதி. அது வரை புராணங்கள், நாடோடிக் கதைகள் - ஏற்கெனவே மக்களிடையே புழங்கியவை. அவரவர் திறமைக்கும், கற்பனைக்கும், மன நிலைக்கும் ஏற்றவாறு கற்பித்துக் கொண்ட அச்சமயத்தில் சம்பாஷணைகளே நாடகத்தில் கேட்டவை. நாடகங்கள் பெரும்பாலும் இசையாடல்களே. இக்கற்பனை சம்பாஷணைகளுக்கு ஒரு முடிவு கட்டி, திட்டவட்டமான பிரதியை வைத்தே மேடையின் உரையாடல்கள் அமைய முதல் அடி எடுத்து வைத்தவர் அவர் தாம். நாடகப் பிரதி என இவ்வாறு பிறந்தது 1891ல். இந்த ஒரு மாற்றத்தைத் தவிர, மற்றபடி அவர் நாடகம் அக்காலத்தில் பார்ஸி நாடகம் தான். நிறையவே அவர் நாடகங்கள் எழுதிய போதிலும் அவருடைய நாடகங்களை நாடக இலக்கியம் என்று கூற இயலாது. ப்ரித்வீ தியேட்டர், பார்ஸி நாடகங்களின் பிரதிகளை நாடக இலக்கியம் என்பார்களா யாரும்?

இதற்கு இணையான இதற்கும் காலத்தால் முந்திய பிரவாஹமாக இன்னொரு நாடகம் இருந்தது. அது இசை நாடகம். தெருக் கூத்தின் திருந்திய வடிவம். பார்ஸி தியேட்டர் போன்றது தான். இதற்கும் நாடகப் பிரதி, ஒரு மாதிரியான பிரதி இருந்தது உண்டுதான். ஒரு மாதிரியான பிரதி தான். இதிலும் கற்பனை உரையாடல், இசையாடலுக்கு நிறைய இடம் உண்டு. இவை உண்மையில் இசை, நாடகங்கள். ஆந்திராவின் யக்ஷகான மரபில் வந்தவை. அரண்மனைகளிலும், கோவில் மண்டபங்களிலும் நிகழ்த்தப்பட்டவை. 17-ம் 18ம் நூற்றாண்டுகளில் இவை தஞ்சாவூர், சரஸ்வதி மஹால் நூலகத்தில் பத்திரப்படுத்தப்பட்டுள்ளன. இவை இன்றைய மேடையில் நிகழ்த்தப்படுவதில்லை. ஒரு சிறிய கால கட்டத்தில் தோன்றி மறைந்தவை. முன் பின் என்ற வரலாறு இவற்றிற்கு தமிழில் இல்லை.

3

இன்னொரு விடம்பனத்தைப் பற்றிச் சொல்லலாமா? ஸமஸ்கிருதத்தைத் தவிர தமிழ் ஒன்றுதான் கிறிஸ்து சகாப்தத்திற்கும் முன்னதாக தன் இலக்கிய வரலாற்றைத் தொடங்கும் மொழி - இந்திய துணைக் கண்டத்தில். அத்தகைய பழங்காலத்திலிருந்தே தமிழ் மொழி தன் சிறப்பைச் சொல்லும் கர்வம் கொண்டது. இயல், இசை, நாடகம் என தான் முப்பெரும் பிரிவுகளை இனம் கண்டது. எது இயல் பிரிவிலும், எது இசைப்பிரிவிலும் வருவது என நாம் இனங்காண முடியும். ஆனால், நாடகம் என ஒரு பிரிவிற்கு நாமம் சூட்ட நிர்ப்பந்தித்த தமிழ் எது, தமிழ் ஆக்கங்கள் எது என நாம் தேடினால் கிடைப்பது ஏதும் இல்லை. நாடகம் என ஒன்று இல்லாமலேயே நாடகம் என ஒரு பிரிவு பெயரிடப்பட்டிருக்குமா? இது எப்படி நிகழ்ந்தது?

தமிழருக்கு மிகப் பழம் மரபு உண்டு. இலக்கியம் எவ்வளவு தொன்மையான வரலாறு கொண்டதோ, அவ்வளவு தொன்மையான வரலாறும் மரபும் கொண்டது. இசையும், ஆடலும் அதைக் கூத்து என்கிறார்கள். கூத்து என்பது மிகச் சரியாக தனி ஒருவரோ, ஒரு குழுவினரோ ஆடுவது. இம்மாதிரியான ஆடல்களுக்கான இசையும், பாடலும், ஆடலும் பதிவாகியிருக்கின்றன - இலக்கியத்தில். உதாரணமாக சிலப்பதிகாரத்தில். தொல்காப்பியம் இதன் ரசங்களைப் பற்றி, மெய்ப்பாடுகளைப் பற்றிச் சொல்கிறது. இவை ஒரு நாடகப் பாவங்கான பரிமாணம் பெறும்பொழுது. அதாவது ஒரு கதை உறவு பெறும் பொழுது, அது கதை சொல்லலாகவே இருந்திருக்கிறது. கதையை நிகழ்த்திக் காட்டலாக அல்ல. எல்லாமே கூத்தாகவே, ஆடலும், பாடலுமாகவே இருந்த போதிலும், வெறும் ஆடல் 'நிருத்தம்' என்றும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தி கதை சொல்லல் 'நாட்டியம்' என்றும் கதையை நிகழ்த்திக் காட்டல் 'நாடகம்' என்றும் மூன்று பிரிவுகள் வட மொழியில் இருந்திருக்கின்றன. தமிழில் மூன்றாவதான நாடகம் என்று எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. நிருத்தமும் நாட்டியமுமான கூத்துதான் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இருப்பினும் நாடகத் தமிழ் என்கிறார்களே ஏன்?

4

13ம் நூற்றாண்டு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், 5ம் நூற்றாண்டு சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதும் முன், முன்னர் வழக்கில் இருந்து தன் காலத்தில் மறைந்து விட்டன என நிறைய நூல்களை - இசை பற்றியும் கூத்து பற்றியுமான நூல்களைச் சொல்கிறார். பின்னர் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பிக்கும்போது, அடியார்க்கு நல்லார்களுக்குக் கிடைத்தவையும் தனக்குக் கிடைக்காமல் மறைந்துபோன கூத்து, இசை நூல்களின் ஒரு நீண்ட பட்டியலைத் தருகிறார்.


பரதரின் நாட்டிய சாஸ்திரம் போன்று எத்தனை இசை கூத்து நூல்கள் தமிழில் இருந்திருக்கின்றன. எத்தனை மாதங்கர்களும், சாரங்க தேவர்களும், ஜகந்நாத பண்டிதர்களும், அபிநய குப்தர்களும் இருந்து, இன்று இருந்த இடம் தெரியாது மறைந்து போயுள்ளனர் என்று நினைக்க வேதனையும் ஆச்சரியமுமாக இருக்கிறது. உவே.சாவுக்குக் கிடைக்காத 9ம் நூற்றாண்டு அறிவனாரின் பஞ்சமரபு இன்று கிடைக்கிறது. பலருக்கு வட இந்தியாவில் ஆச்சரியமாக இருக்கும். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலேயே தமிழில் இரண்டு இராமாயணங்கள், மூன்று மகாபாரதங்கள் இருந்திருக்கின்றன. இந்திய துணைக் கண்டத்தின் எந்தப் பிராந்தியம், எந்த மொழி, இப்படிப் பெருமை கொள்ளும்? இந்திய துணைக் கண்டத்தில் எங்கு எந்த மொழியில் எந்த மூலையில் சிறப்பானதொன்று நிகழ்ந்திருப்பினும் அதன் விவரம் அறிவு, அதன் தாக்கம் தமிழில் இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பெருமை கொள்ளும் உரிமை வேறு எந்த மொழிக்கு இருந்திருக்கிறது? முதல் இரண்டு நூற்றாண்டுகளின் சங்கப்பாடல், புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஒரு புலவன் தமிழ் நாட்டின் தென் கோடிமூலையில் இருக்கும் ஒரு சேர வேந்தனுக்கு ஐஸ் வைக்கிறான் இப்படி, "குரு கோத்திர யுத்தத்தின்போது, கௌரவர் பாண்டவர் இருவர் சேனைக்கும் வேற்றுமை பாராட்டாது உணவளித்த வேந்தன் பரம்பரையில் உதித்தவனல்லவா நீ" என்று. இது சாத்தியமா என்பது பிரச்சினை இல்லை. ரொம்பவும் வெளிப்படையாகக் காதில் பூச்சூட்டும் விவகாரம் தான் இது. ஆனால், அந்தத் தென் கோடி மூலையில் இருந்தவனுக்கும் - புலவனுக்கும் அரசனுக்கும் மகாபாரதமும் குரு சேத்ர யுத்தத்தின் பிரமாண்டமும் தெரிந்திருக்கிறது. அது தான் விஷயம். வடக்கே பஞ்சாப்பில் பேசப்பட பைஸாச மொழியின் பிரஹத் கதா, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அதிககாலம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. நான் சொல்ல வருவது இம்மாதிரியான நெருக்கமான, உடனடியான கொடுக்கல், வாங்கல்கள் இந்திய துணைக்கண்டத்தின் ஒரு கோடி மூலைக்கும் இன்னொரு கோடி மூலைக்குமாக அநாதி காலம் தொட்டு தொடர்ந்து வந்துள்ளது நூற்றாண்டு நூற்றாண்டுகளாக.

சற்று நான் சுட்டும் உதாரணங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். வெண்ணெய் திருடி ரகளை செய்யும் கண்ணனின் விஷமங்களைச் சொல்லி தானாம் பரவசமடைந்து நம்மையும் பரவசம் கொள்ள முயலும் கதக் பாணி நாட்டியமாடுபவள் - இது தமிழ் நாட்டின் 8ம் நூற்றாண்டு கவிஞர் பெரியாழ்வார் அளித்த கொடை. அந்த வெண்ணெய் திருடும் கண்ணன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெரியாழ்வாருக்கு முன் வடநாடு அறிந்த கண்ணன் பார்த்தனுக்கு தேரோட்டிய, கௌரவரிடம் தூது போன கண்ணன், துவாரகா புரி அரசன் தான். வடநாடு அறிந்த மாதிரி பக்தி இயக்கம் குரு நானக்கி-

⇨19

நன்றி - நூலகத்திட்டம்





# இதற்கு யார் பொறுப்பு ?

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1991ம் ஆண்டு தொழிலாளர் தினமாகிய மே 1ல் தொழிலாளர் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும். அஃது ஒரு பட்டப்படிப்பாக வளர்ச்சியடைய வேண்டுமென வேணவா பூண்டார் மறைந்த துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள். ஆரம்பத்தில் 100 மாணவர் வீதம் ஆரம்பித்து வெறும் சான்றிதழ் நெறியாக இன்று வரை நடைபெற்று வருகின்றது. ஆரம்பத்தில் இருந்த மாணவர் பங்களிப்பு தேய்வுற இது வெறும் சான்றிதழ் நெறியாக இன்று வரை தொடர்வதே காரணம். இக்கற்கை நெறியை ஆரம்பிக்க அச்சாணியாயிருந்தவர் அந்நாளின் கலைப்பீடாதிபதியும் இந்நாளின் துணை வேந்தருமான பேராசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள். ஆனால் இக்கற்கை நெறியினை பட்டப்படிப்பாகக் கொணர எவ்விதமுயற்சியுமின்றி வாழாவிருப்பது தமிழ் தொழிலாளர் வர்க்கத்திற்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமாகும்.

இக்கற்கை நெறியை பட்டப்படிப்பாக 1991ல் ஆரம்பித்திருந்தால் இது வரை ஆகக் குறைந்தது 300பேர் பட்டம் பெற்றிருப்பார்.

அவர்கள் 1. தொழிற்சங்கவாதிகளாக மிளிர்ந்திருப்பர்.

2.தத்தம் உரிமை கடமைகளை செவ்வனவே அறிந்திருப்பர்.

3. தாம் எவ்வாறு சுரண்டப்படுகிறோம் என்பதை அறிந்திருப்பர்.

1959ஆம் ஆண்டு காலப்பகுதியினை இலங்கையின் தொழிலாளர் கல்வி ஆரம்ப காலமாகக் கொள்ளலாம். தொழில் அமைச்சின் ஆலோசனைகளின் அடிப்படையில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உதவியுடன் தொழிற்சங்கத் தலைவர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று முதலில் தொழிற் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களின் தொழிலாளர் கல்வி நெறி அறிமுகமாகியது. 1971இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் தொடர் கல்வி பயிற்சி நெறிக்கு 200 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்நெறியில் தொழிலாளர் காட்டிய ஆர்வம் மேலும் இப்பயிற்சிக்கு ஊக்கத்தினை வளர்த்தது.

1973இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கல்வி ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடகால பயிற்சிநெறியில் 6 மாணவர்கள் திறமைச்சித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது கட்டமாக தொழிலாளர் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதாக அமைந்தது. ஆயினும் அரசாங்கமோ அன்றி முகாமையாளர்களோ தொழிலாளர்களுக்குப் பட்டப்படிப்பிற்கான முழுநேர நான்கு வருட லீவு வழங்க முன்வரவில்லை. இதனால் தொழிலாளர் கல்வி நிறுவனத்தில் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு தொழிலாளர்களுக்கு முழுநேர வீவு வழங்கும் சிக்கல் தீர்க்கப்பட்டது. கொழும்பில் 1975இல் நிறுவனம் தொழிலாளர்களுக்கு ஏற்ப டிப்ளோமா பயிற்சிகள் ஆரம்பித்தது.

தொழிலாளர் கல்வியினை உயர்கல்வியுடன் இணைப்பது புதிய ஓர் நிகழ்ச்சியல்ல. உலக உயர்கல்வி நிறுவனங்கள் பல தொழிலாளர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. ஒக்ஸ்போர்ட்டிலுள்ள ரஸ்கின் கல்லூரி தொழிற்சங்க தலைவர்களுக்கு வதிவிடப் பயிற்சியளித்து வருகிறது. இவர்கள் வருடா வருடம் 100 தொழிற்சங்கவாதிகளை எதுவித புகுமுக பரீட்சையுமின்றி தெரிவு செய்து டிப்ளோமா பட்டம் வழங்குவதோடு ஒருவருட பயிற்சியை முடிப்பவர்கள் பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்படுகின்றனர். தொழிற் தேவைகளை மீண்டும் அபிவிருத்தி செய்யும் முறை சாராக்கல்வி மூலம் தொழிலாளர் போதிய பயிற்சியைப் பெறுவதில்லை. தொழிலாளர் கல்வியானது புதிய பரிமாணங்களோடு தொழிலாளரது பரந்த வேலைகளையும் அடிப்படையாகக் கொண்டது. இங்கு எவ்வகைத் தொழிலாளர்களும் தவிர்க்கப்படுவதில்லை. குறிப்பாக பெண்களுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதும் இக்கல்வியின் ஓர் பரிமாணமாகும். தொழில் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு பல புதிய முறைகள் தொழிலாளர் கல்வியில் அறிமுகமாகின்றன. மேலை நாடுகளில் தொழிலாளர்களுக்கு கணினிப் பயிற்சிகள் கூட அளிக்கப்படுகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணம் தவிர்ந்து மற்றைய பல்கலைக்கழகங்களில் தொழிலாளர் கற்கை நெறி பெருவிருட்சமாகக்கிளை பரப்பி பல பட்டதாரிகளை சமூகத்திற்குத் தந்திருக்கிறது. தந்து கொண்டிருக்கறது. ஆனால் யாழ்பல்கலைக்கழகம் இதனை வெறும் சான்றிதழ் கற்கை நெறியாக்கி விட்டது. ஆரம்பத்தில் நூறு நூறு மாணவர் பெருவிருப்புடன் துடிப்புடன் கற்க வந்தும்" தற்போது அஃது தேய்ந்து கொண்டிருக்கின்றது.

இக்கற்கை நெறி சந்திக்கும் தடைகள் என்ன? யாரால்? எப்போதும் போல் அரசைக் குற்றம் சாட்டுவதா? இல்லாவிடில் நம்புத்தி ஜீவிகளே இதற்குக் காரணமா?

*சி.அங்கயர்க்கண்ணன்*
*யாழ்ப்பாணம்*

# எண்பது தொண்.....

லிருந்து தொடங்குவதில்லை. அது தமிழ் நாட்டின் 6ம் நூற்றாண்டு காரைக்காலம்மையார், பேய், பூதம், பொய்கையாழ்வாரோடு தொடங்குகிறது. 8ம் நூற்றாண்டு தமிழ் நாட்டு ஆண்டாளுக்கும், 16ம் நூற்றாண்டு மேவார் மீராவுக்கும் பொதுவானது. கண்ணனிடம் அவர் கொண்ட பிரேமை மாத்திரமல்ல. அவர்கள் பிரேமையை வெளிச்சொல்ல அவர்கள் கொண்ட வெளிப்பாட்டு முறைகளும், மொழியும் கூடத்தான். இரண்டுபேரும் வெகு ஆச்சரியம் தரும் வகையில் ஒரே மொழியில் பேசுகிறார்கள். "நாணி இனி ஒரு கருமமும் இல்லை. அயலாரும் அறிந்தொழிந்தார்" என்று ஆண்டாள் சொன்னதையே மீரா, 800 ஆண்டுகளுக்குப் பிறகு அவ்வளவு தூரத்திலிருந்து (அப் தோ பாத் ஃபைல் கயி) "நம் விவகாரம் ஊர் முழுதும் பேசும் விஷயமாயிற்று. சீக்கிரம் வந்தெனை ஆட்கொள்" என்று புகார் செய்கிறாள். "கோவிந்தா கோவிந்தா" என்று நான் உன் நாமத்தை ஸ்மாணம் செய்வதைக் கேட்டிருந்து தானும் 'கோவிந்'தா, கோவிந்தா" என்று கூவி என் மானத்தை வாங்குகிறது. என்று ஆண்டாள் புலம்பியதையே மீராவும் புலம்புகிறாள். மனதிருந்தால் நூற்றாண்டுகளையும் இட விஸ்தாரத்தையும் தாண்டி பேசக் கூடுமானால் ஆண்டாள் மீராவை நோக்கி "நீயா ஏதாவது பாடேண்டி, என்கிட்டேயிருந்து எதற்கு திருடுகிறாய்?" என்று சொல்லக் கூடும்.

தென்னகத் தமிழுக்கும், வட ப்ராகிருதமோ, ஸமஸ்கிருதமோ, இரண்டிற்கும் எல்லாத்துறைகளிலும் பரந்த, நெருங்கிய, தொடர்ந்த உறவாடல் கொடுக்கல் வாங்கல் இருந்திருக்கிறது.

ஆனால், ஒரு பாஸனையோ, காளிதாஸனையோ, பவபூதியையோ, அஷ்வகோஷையோ, சூத்ரகனையோ மாத்திரம் நாடகாசிரியர்களாக தேர்ந்தெடுத்துப் பார்த்து தமிழ் ஒதுக்கிவைத்துள்ளது ஏன்? நெருங்கி நமக்குள்ளேயே சுற்றிப் பார்வை செலுத்தினால் 7ம் நூற்றாண்டில் மகேந்திர வர்மபல்லவன் பௌத்தர்களையும் காபாலிகர்களையும் கிண்டல் செய்து இரண்டு நாடகங்கள் வடமொழியில் எழுதுகிறான். நடப்பது காஞ்சியில். காவிய தர்ஸனமும் அலங்காரமும் எழுதிய தண்டி இருந்த ஊரிலேயே. ஆனால், மகேந்திர வர்மனின் மட்டவிலாசமும், பகவத் ஜுக்கியமும் தமிழில் எவ்வித பாதிப்பையும் உண்டாக்கியதாகத் தெரியவில்லை. பக்தி இயக்கம் வளர்ந்து கொண்டிருந்த காலம். அப்பருக்கும், பரஞ்சோதிக்கும் பல்லவ சாம்ராஜ்யத்தில் இருந்த செல்வாக்குப் பற்றி என்ன சொல்ல? எவ்வளவு மதமாற்றங்கள்? பல்லவர்கள் கலை, இலக்கிய போஷகர்களாக இருந்த போதிலும், சக்கரவர்த்தியின் நாடகத்திற்கே கூட தமிழில் பாதிப்பில்லை.

இவ்வளவிற்கும் பிறகு கூட நாடகமும் இல்லாது, நாடகத் தமிழ் என்ற பெருமையுடன் தமிழ் முப்பெரும் பிரிவு கொண்டு விட்டது. நூற்றாண்டு நூற்றாண்டாக கிடைத்தது கூத்துக்களே. அவை பற்றித்தான் (நாட்டியம், இசை, வாத்தியம், நாட்டியமாட அரங்கு) எண்ணற்ற நூல்கள் தமிழில்!

இன்றிலிருந்து பின்நோக்கிப் பார்க்கும்போது, கதை நிகழ்த்திக் காட்டும் நாடகம் என்பது தெருக்கூத்தாகத்தான் இருக்கிறது. அதில் தான் கதைப் பாத்திரங்களும் நிகழ்ந்து செல்லும் சம்பவங்களும், கதை நிகழ்தலும் பார்க்க முடிகிறது. தெருக்கூத்தில் தான் நிகழ்ச்சிகளை இயக்குபவன் என்ற அர்த்தத்திலான 'சூத்ரதார்', தெருக்கூத்தில் வரும் நிகழ்ச்சிகளைக் கூறுபவன் என்ற பொருளில் கட்டியங்காரன் ஆகிறான். ஆக, வடமொழி நாடக மரபின் பாதிப்பை தெருக்கூத்து, பாவைக் கூத்து போன்ற கிராமிய, நாட்டுப்புற கலை வடிவங்களில் தான் காண்கிறோம். தெருக்கூத்து, நாடகப் பிரதியை ஆதரித்து இயங்குவதில்லை. கற்பனை உரையாடல் கொண்டது. அவர்கள் பிரதி என ஏதும் வைத்திருப்பதாகச் சொன்னால் அது பெயருக்குத்தான். அதற்கும் நிகழ்ச்சிக்கும் ஏதும் உறவில்லை. இசை நாடகமாக இருந்தவற்றில் சூத்திரதார் இருந்திருக்கிறான். அது 17ம் நூற்றாண்டிற்குப் பின்னரே தெரிய வந்த யக்ஷகானங்கள். அவையும் ஆந்திராவிலிருந்து பெற்றவை.

(வரும்)

# வெளிநாட்டுப்...

நெரிக்கும் தறுவாயில், வசதிவாய்ப்பில்லாததனால் தமது பிள்ளைகள் பாடசாலை வாழ்விற்குப் பிரியாவிடை சொல்லும் வேளையில், இன்னும் அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறும் சந்தர்ப்பத்தில் தான் பெரும்பாலான பெண்கள் வெளிநாட்டைத் தெரிவு செய்கிறார்கள்.

மேலும் இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தமும் அதனடியாக ஏற்பட்ட அகதிவாழ்நிலையும் பலரை வெளிநாட்டுக்குச் செல்ல நிர்ப்பந்தித்துள்ளன. இன்று புத்தளம், குருநாகல், கொழும்பு பகுதிகளில் வாழும் முஸ்லிம் அகதிகளில் பல பெண்கள் வெளிநாட்டில் பணிபுரிவதற்கும் அதே போன்று வடக்கு கிழக்கில் அகதிகளாக யுத்தத்தினால் கணவனை இழந்து நிற்கும் தமிழ்ப் பெண்கள் பலர் வெளிநாடு செல்லவும் இதுவே காரணம் எனலாம்.

இதேபோன்று மீன்பிடி, மேசன்வேலை, தச்சுத்தொழில் போன்றவற்றின் மூலம் உழைப்பில் ஈடுபட்டாலும், குடும்பச் செலவுகளுக்கு கணவனது வருமானம் ஈடுகொடுக்க முடியாத நிலையிலும் மனைவி மாற்றுக் குறித்து சிந்திக்கத் தலைப்படுகிறாள். இந்நிலையில் ஆணை வெளியில் அனுப்புவதைவிட பெண் செல்வது பொருளாதாரச் செலவு குறைவாக உள்ளதால் குடும்பப் பெண் இந்த முடிவை எட்டுகிறாள். அதிகமான ஆண்கள் தங்களது மனைவிகளையே வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்கு இதுவே மூல காரணம்.

ஆனால், இன்று நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு வேடிக்கையான விடயம் யாதெனில், சில ஆண்கள் பொருளாதார மூலமாக திருமணத்தைக் கருதி விட்டார்கள். இன்னொரு வார்த்தையில் சொல்வதாயின் வெளிநாட்டுக்கு பெண்ணை அனுப்பிவைக்கவே திருமணம் முடிக்கிறார்கள். மணம் முடித்து ஒரு சில நாட்களில் மனைவியை மத்திய கிழக்குக்கு அனுப்பிவிட்டால் தாங்கள் தான் தோன்றித்தனமாக உடல்பாடுகளின்றி சொகுசாக வாழலாம் என்று கருதுகிறார்கள். திருமலை மாவட்டத்திலுள்ள முள்ளிப்பொத்தானை, கந்தளாய், சிறாஜ் நகர், மூதூர் போன்ற பகுதிகளில் இது சர்வசாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தாய் தந்தையரின் பராமரிப்பில் இருந்தபோது பொருளாதாரச் சிக்கல்கள் இருப்பினும், அவர்கள் மகளை அனுப்பி வைக்கக் காட்டிய தயக்கம் மணம் முடித்த பின் பெண்ணுக்கு இல்லாமல் போகிறது. ஏனெனில், கணவனே நம்மை அனுப்பிவைக்க விரும்புகிறார் என்பது 'விமானத்தில் பறக்கும் கனவில்' இருந்த பெண்களுக்கு சாதகமாகவே அமைந்து விடுகிறது.

கணவன்மார் மனைவி அனுப்பிவைக்கும் பணத்தில் குடித்துக் கும்மாளமடித்து இன்னொரு 'சட்டரீதியற்ற' மனைவியையும், வைத்துக்கொள்ள முனைகிறார்கள். இந்த நோக்கத்திலும் பலர் தங்களது மனைவிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய கையாலாகாத கணவன்கள், உழைக்கும் பொறுப்பு மனைவிக்கே உரியது என்று தப்புக்கணக்கு போட்டு விடுகிறார்கள். எடுத்துக்காட்டாக அண்மையில் ஏறாவூரில் நிகழ்ந்த ஒரு வேடிக்கையான விடயத்தைக் குறிப்பிட முடியும். ஒரு நடுத்தர வர்க்க மனிதர் தனது மனைவியைப் பற்றி பள்ளிவாசல் நம்பிக்கை சபையில் காழி நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீடு இதுதான். எனது மனைவி வெளிநாட்டில் தொழில் பார்க்கிறாள். கடந்த சில மாதங்களாக அவள் எனக்குப் பணம் அனுப்புவதேயில்லை. எனவே பணத்தைப் பெற தாங்கள் ஆவண செய்யவேண்டும்" எவ்வளவு வினோதமான வேண்டுகோள் இது. குடும்ப வாழ்வை தனது பலத்தால், உழைப்பால் வாஸ்தவப்படுத்த வக்கற்றவர்களின் கெக்கரிப்புக்கள் இவை. இதுபோன்ற ஆண்களின் பெயர்களைத் தாங்கிக் கொண்டு நடமாடும் நடைப்பிணங்கள் சமுதாயத்தில் மலிந்து வருவது விசனத்துக்குரியது.

இனி எல்லாம் இருக்க இத்தகு நெருக்கல்களுக்கும், அழுத்தங்களுக்குமான தீர்வுகள், மாற்றுகள் குறித்து சிந்திக்க நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இன்று இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லும் பெண்களில் 75 வீதமானோர் முஸ்லிம் பெண்களாவார். ஏனைய 25 வீதத்தினயே தமிழ், சிங்களப் பெண்கள் வகிக்கின்றனர். தனது கலாசாரத்தினை எப்போதும் கட்டிக் காக்க வேண்டும் என்ற கடமையும் பண்பாட்டுப் பேணுகையில் மிகை ஆர்வமும் கொண்ட சமூகம் என்ற வகையில் முஸ்லிம் சமூகம் இந்த சவால்களுக்கு முகங்கொடுக்க பெரிதும் கடமைப்பட்டுள்ளது மட்டுமல்ல தார்மீகத்தையும், ஒழுக்க விழுமியங்களையும் போதிக்கும் மதங்களைப் பின்பற்றி வாழும் எல்லா இனத்தவருக்கும் ஒரு மாற்று குறித்து தீவிரமாகச் சிந்திப்பது அவர்களது வரலாற்றுக் கடமை. • சமுதாயத்தில் அதிகவேறுபாட்டில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்க எடுக்கும் முயற்சிகள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஓரளவு பங்காற்ற முடியும். அந்த வகையில் முஸ்லிம்களைப் பொறுத்தவரை 'ஸகாத்', 'ஸதகா' போன்ற மாற்றுக்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதோடு, குடும்பத்தலைவர்களுக்கும் பெண்களுக்கும் உள்நாட்டிலேயே தொழில் செய்யும் வசதிகளையும், அதற்கான களங்களையும் உருவாக்கிக் கொடுப்பதும், இருப்பவற்றை இனங்காட்டுவதும் சமுதாயத்திலுள்ள பரோபகாரிகளினதும், தர்மகர்த்தாக்களினதும் பொறுப்பாக உள்ளது. தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று எல்லோருக்கும் பொதுவாக உள்ள இப்பிரச்சினைகளுக்கு ஒரு பொறுப்பான தீர்வு குறித்து சிந்திப்பதும் நமது தார்மீகக் கடமை. இது குறித்து நாம் சிந்திப்போமா என்பதே நம்முன்னேயுள்ள அடிப்படைக் கேள்வி.

"சாதாரண மனிதன் சம்பவங்களைப் பேசுகின்றான்
சராசரி மனிதன் கருத்துக்களைப் பேசுகின்றான்
உயர்ந்த மனிதர்களோ மௌனமாக இருந்து செயற்படுகிறார்கள்."

# இந்துத்துவம்....

உறுதிநிலை என்பன பா.ஜ.கவுக்கு சார்பாக இருப்பதனாலும், பா.ஜ.க அணி வெல்வதற்கான வாய்ப்புக்களே உள்ளன. வெற்றியை இன்னமும் வலுவானதாக்குவதற்காக ஜனதாதள்ளுடன் கூட்டுச் சேர்வதற்கான பேச்சுவார்த்தையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது வெற்றியளிக்குமானால் வெற்றி வாய்ப்பு மேலும் அதிகரிக்கலாம்.

குறிப்பாக வெற்றி வாய்ப்புக்கள், அதிக ஆசனங்களைக் கொண்ட மாநிலங்களில் கிடைக்கும் வெற்றியிலேயே தங்கியுள்ளது. உத்தரப்பிரதேசம் (85), பீகார் (54), மகராஷ்டிரம் (48), மேற்கு வங்காளம் (42), ஆந்திரா (42), மத்திய பிரதேசம் (40), தமிழ் நாடு (39) போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. பீகாரில் சமதாகட்சி, ஜனதா தளம் என்பவற்றின் கூட்டு வெற்றி வாய்ப்பினை அதிகரிக்கும். மகராஷ்டிரத்திலும், தமிழ் நாட்டிலும் மூன்று அணிகள் போட்டியிடுவதால் வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். அதுவும் தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களின் வாக்குகளில் கணிசமானவை குறிப்பாக தென் மாவட்டங்களில் பா.ஜ.கவை நோக்கிச் சரியும் போக்கு உள்ளது. உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம் நன்கு போட்டி நிலவுகின்ற இடங்களாக இருக்கும்.

பா.ஜ.க தனித்து பெரும்பான்மை பெறுவது கடினம். பா.ஜ.க கூட்டணி பெரும்பான்மை பெறும் நிலை உள்ளது. பெரும்பான்மை கிடைத்தாலும் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்தே ஆட்சி அமைக்கப் போவதாக பா.ஜ.க கூறியுள்ளது. தனித்து பெரும்பான்மை கிடைக்கின் கூட்டணிக் கட்சிகளின் அழுத்தம் குறைவாக இருக்கும். சங்க பரிவார்கள் தாம் நினைத்தபடி ஓடுவதற்கு சற்று இடமிருக்கும். பெரும்பான்மை கிடைக்காவிடின் சங்க பரிவார்கள் சற்று அடக்கி வாசிப்பார்கள்.

### இந்து அடிப்படைவாதத்தில் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்

பா.ஜ.கவுக்கு தனித்து பெரும்பான்மை கிடைக்கின் இந்து அடிப்படை வாதம் மேலும் தன்னை வலுவாக்க இடமுண்டு. கூட்டணி கட்சிகளின் ஸ்திரமற்ற நிலை அவர்களை மௌனமாக இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும். இக்கட்சிகளுக்குள் இருக்கும் மதசார்பின்மைச் சக்திகளின் பலத்தினைப் பொறுத்து இது மாறுபடலாம். சங்க பரிவார்கள் கிடைக்கும் வெற்றியைக் கொண்டு மேலும் தங்களை விஸ்தரித்து காலூன்ற முற்படலாம். அதற்கான நடவடிக்கைகளை அது இப்போதே ஆரம்பித்து விட்டது.

இந்து அடிப்படை வாதத்தின் முதல் எதிரி முஸ்லீம்கள், இரண்டாவது எதிரி தலித்துக்கள், மூன்றாவது எதிரி இடது சாரிகள்.

இம் மூன்று சக்திகளும் இந்து அடிப்படைவாதத்தின் தந்திரோபாயங்களைப் புரிந்து கொண்டு அதற்கெதிராக தங்களை பாதுகாப்பதற்கும், ஸ்திரப்படுத்துவதற்கும் போராடுவதற்குமான மார்க்கங்களைக் கண்டறிவது இன்றுள்ள அவசிய அவசரத் தேவையாகும்.

மதச்சார்பற்ற சக்திகளின் முன்னால் உள்ள மாபெரும் பணி இது.

இல்லாவிட்டால் இந்துத்துவம் எல்லாவற்றையும் விழுங்கிஏப்பம் விட்டு விடும்.

இந்து இந்தி இந்தியா என்ற அதனது அடிப்படையை அது வலுவாக்கி விடுமானால் இந்தியா இரத்தக்காடாவதைத் தவிரவேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
- பாரதி
இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.


## இது ஒரு எச்சரிக்கை அல்ல உண்மை!

மீண்டும் ஒரு முறை பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். ஆச்சரியப்படும் விதத்தில் இம்முறை ஐ.தே.க. ஊர்வலத்தினைப் படம் பிடிக்கச் சென்ற அவர்கள் பொலிசாரால் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றனர்.

பொ.ஐ.மு. அராங்கம் பதவிக்கு வந்த ஒரு சில காலத்திற்குப் பிறகு தொடர்ச்சியாக பத்திரிகையாளர்கள் வெவ்வேறு தளங்களில் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள்.

ஒரு புறம் நீதிமன்ற வழக்குகள், பொய்ப்பிரச்சாரங்கள், ஆட்கடத்தல்கள் என்றால், மறுபுறத்தில் அவர்கள் கடமையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் போது தாக்குதலுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் ஐ.தே.க. ஊர்வலத்தை பார்வையிடச் சென்றது தமது கடமையை - தகவல் சேகரிக்கும் கடமையைச் செய்யவே அன்றி ஐ.தே.கவுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்ய அல்ல என்பது அரசாங்கத்திற்கும் தெரியாமல் இருக்க நியாயமில்லை. தவிரவும் பொலிசாரால் இலகுவிலேயே பத்திரிகையாளர்களை இனங்கண்டு கொள்வதும் கூட அத்தனை கஸ்டமான காரியம் அல்ல.

அப்படியிருந்தும் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பத்திரியாளர்கள் என்று தெளிவாகத் தெரிந்திருந்தும் அவர்களை தேடிப் பிடித்து தாக்கியதுடன் அவர்களது பெறுமதி வாய்ந்த உடமைகளையும் சேதப்படுத்தியிருக்கிறார்கள்.

பொலிசார் இப்படி நடந்து கொண்டமைக்கு நிச்சயம் தெளிவான உத்தரவு இருந்திருக்க வேண்டும் என்று நம்பாமலிருக்க நியாயமில்லை.

ஏனென்றால் அன்றைய சம்பவத்தில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதற்கு எந்த நியாயமும் இருக்கவில்லை என்பது வெளிப்படை.

ஆக, இந்த அரசாங்கம் அவர்களைத் தமது எதிரிகளாக நினைக்கத் தொடங்கிவிட்டதோ என்று சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

ஆட்சிக்கு வரமுதல் பத்திரிகையாளர்கள் பற்றி வாய் நிறையப் பேசிய அம்மையாரின் பாதுகாப்புப் படைகள் தான் அன்று பத்திரிகையாளர்களைத் தாக்கினார்கள் என்கிறார் ஒரு பத்திரிகையாளர்.

அன்றைய தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களில் ஒரு சில சிவிலுடையில் வந்த ஜனாதிபதியின் பாதுகாப்பு படை அதிகாரிகளை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இனங்கண்டு வெளியிட்டுள்ளது.

ஆயினும் அமைச்சரும் அவரது ஆதிக்கத்திலுள்ள ஊது குழல் தினசரிகளும் இதை மறுக்கின்றன.

ஒரு நாட்டின் மனச்சாட்சியாக ஒலிப்பவர்கள் அரசியல்வாதிகள் அல்ல

அந்த நாட்டு மக்களுக்கு உண்மைத் தகவல்களை எடுத்துத் தரும் பத்திரிகையாளர்கள் தான் நாட்டின் மனச்சாட்சியாக இருக்கிறார்கள்.

அவர்கள் மக்களின் மனோபாவத்தை, அவர்களின் எதிர்பார்ப்புகளை, அவர்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்கள்.

ஒரு அரசியல் கட்சி ஆட்சியில் இருக்கிறதா. இல்லையா என்பதை வைத்து அவர்கள் தமது நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதில்லை. இன்று இந்த அரசாங்கம் செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்த்து அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் ஒரு காலத்தில் அது ஆட்சிக்கு வரவேண்டும் என்று மனசார விரும்பிச் செயற்பட்டவர்கள். ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன், யுக்தியவின் சுனந்த தேசப்பிரிய போன்றோர் அன்று இந்த அரசாங்கம் பதவிக்கு வரவேண்டுமென்று அக்கறையுடன் செயலாற்றியவர்கள்.

ஆனால் இன்று அவர்கள் அரசாங்கத்தை தீவிரமாக விமர்சிக்கிறார்கள்.

பட்டங்களுக்காகவும் பதவிகட்காகவும் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டவர்களை விட்டுவிடுவோம். அவ்வாறு ஒட்டிக்கொண்டவர்கள் பிழைக்கவென்று இந்தத் தொழிலைத் தெரிவு செய்தார்கள். ஆனால் அரசாங்கம் தமக்குத் தரும் பதவி பட்டங்களை விட தாம் வாழும் சமூகத்திற்காக செயற்படுவதையே அவர்கள் விரும்புவர்.

அவர்கள் அன்று சந்திரிகா அரசாங்கம் வருவதை ஆதரித்தது அவர் மீது உள்ள தனிப்பட்ட அன்பின் காரணமாக அல்ல, மாறாக அன்று மக்கள் அபிலாசைகட்கு ஏற்ற விதத்தில் சந்திரிகா அரசாங்கம் செயற்படும் என்ற நமபிக்கையுடன் செயற்பட்டார்கள்.

அது நடக்காமல் போகவே அவர்கள் அதைக் கைவிட்டுவிட்டார்கள்.

ஆனால் சந்திரிகா அரசுக்கு இது விளங்கியதாகத் தெரியவில்லை.

அடிகளாலும் உதைகளாலும் மிரட்டி அதிகாரம் செய்யலாம் என்று நினைக்கிறது போலும்.

இது தான் இன்றைய நிலை.

ஏரிக்கரைப் பத்திரிகைகளும், அரச தொடர்பு சாதனங்களும் அரசாங்கத்திற்கு எவ்வளவு தான் முண்டு கொடுத்தாலும் இத்தகைய மிரட்டல்களால் பாதிக்கப்படப் போவது உண்மையில் அரசாங்கமே ஒழிய பத்திரிகையாளர்கள் அல்ல.

இது ஒரு எச்சரிக்கை அல்ல உண்மை!

## பேராதனை:


## தமிழ் மொழி மூல மாணவர் அனுமதி குறைப்பு!

பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்று, அப்பீடத்தில் தமிழ் பேசும் மாணவர்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைப்பதற்கு இரகசிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

வழக்கமாக விசேட உட்சேர்க்கை என்ற பகுதியின் கீழ் சரித்திரம், ஆங்கிலம், மேலைத்தேயச் செம்மொழி போன்ற குறிப்பிட்ட சில பாடங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பேராதனைப் பல்கலைக் கழகக் கலைப்பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிகள் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில், அரபு, இஸ்லாமிய நாகரிகத் துறைகளில் போதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இவ்வாண்டு மேலும் மாணவர்களை அனுப்பி வைக்க வேண்டாம் எனக் கேட்கப் பட்டுள்ளது.

மேலும் இக் கடிதத்தின் இரண்டாம் பந்தியில், தமிழ் மொழி மூல கற்கைநெறிகளுக்குப் பெருமளவு மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளதால், தமிழ் மொழி மூல மாணவர்களையும் அனுப்பிவைக்க வேண்டாம் எனக் கேட்கப் பட்டுள்ளது.

இக்கடிதம் குறித்துக் கருத்து வெளியிட்ட விரிவுரையாளர் ஒருவர், முகத்தோற்றத்தில் வெளிப்படையாக பாகுபாடு காட்டப் பட்டுள்ளது என்று


UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA
OFFICE OF THE DEAN/FACULTY OF ARTS

10 February 99

Mr. R A Piyaratne
Admissions Department
University Grants Commission

Topic: Intake to the Faculty of Arts - University of Peradeniya

Since a larger number of students offering Arabic and Islamic Civilization have been admitted this year, please do not admit any others for these subjects under "Special Intake"

Also, since a larger number in the Tamil medium has been admitted, please note that we are not in a position to admit any more students in the Tamil medium for this year.

Senior Assistant Registrar
Faculty of Arts

கூறமுடியாவிட்டாலும் புத்திசாதுரியமாக, இது குறித்த பிரச்சினைகள் எழுந்தால் சாதகமான விளக்கம் அளிக்கக் கூடிய வகையில் இக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும், இக் கடிதத்தின் உள்நோக்கம், தமிழ் பேசும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பல்கலைக் கழகத்தில் படிப்படியாக மட்டுப் படுத்துவதே எனவும் குறிப்பிட்டார்.

இக்கடிதம், அரபு, இஸ்லாமிய நாகரிகத் துறைகளைப் பற்றியும், தமிழ் மொழி மூல மாணவர்களைப் பற்றியும் மட்டுமே குறிப்பிடுகின்றது. சிங்கள மொழி மூல மாணவர்கள் குறித்தோ, அவர்கள் பயிலும் பாடங்கள் குறித்தோ எந்த மட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இக் கடிதம் தற்போது வெளியே கசிந்துள்ளதுடன், கலைப் பீடத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ் மொழிமூல விரிவுரையாளர்களுக்கு, இக் கடிதத்தின் பிரதிகள் கிடைத்துள்ளன. பேராதனைப் பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.என்.ஓ. தருமதாசா, இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கெனத் தனியான பிரச்சினைகள் எதுவும் கிடையாதென்றும், நாட்டில் இருப்பது ஓர் பயங்கரவாதப் பிரச்சனையே என்றும் வாதிட்டு வருபவர். சிங்கள ஆணைக்குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவர். இவ்விடத்தில் சமீபத்தில் கண்டிப் பகுதியிலிருந்து தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று தீவிர சிங்கள இனவாதிகள் குரல் எழுப்பி வருவதும் குறிப்பிடத் தக்கது.

இது தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், அதிகாரிகள், மொழி அமுலாக்கல் ஆணைக்குழுவினர் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்வருவார்களா?

## தமிழ்ப் பாடசாலை : சிங்கள அதிபர்

குருணாகல் மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு தமிழ் மகா வித்தியாலயமான குருணாகல் இந்து தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இலங்கை அதிபர் சேவை தரமில்லாத சிங்களப் பெண்மணியே வடமேல் மகாண கல்விப் பணிமனையால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அதுவும் அதிபராக இருந்த தமிழரை அகற்றிவிட்டே இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

இப் பகுதியில் அதிபர் தரமுடைய தமிழர்கள் இருந்தும் திட்டமிட்டு இது நடாத்தப்பட்டுள்ளமை இனவாதப் போக்கைக் காட்டுவதாக மட்டுமல்லாமல், மனித உரிமை மீறலாகவும் அமைந்து ள்ளது.

இவர் அதிபராகப் பதவி ஏற்ற பின் தனக்கு எதிரான தமிழ் ஆசிரியர்களை இடமாற்றிய கைங்கரியத்தையும் செய்துள்ளார். இப் பாடசாலையில் ஏற்கெனவே அதிகளவு ஆசிரியப் பற்றாக்குறை நிலவுவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இது திட்டமிட்ட ஒரு செயலாகவே கருதப்படுகின்றது.

அத்துடன் மாவத்தகமை சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியப் பயிற்சி பெறாத சிங்களவர் ஒருவரே அதிபராக உள்ளார். மொதன்னை தமிழ் வித்தியாலயத்திலும் சிங்களவர் ஒருவரே அதிபர்.

இது விடயமாக பல கோரிக்கைகளை பல அமைப்புக்களும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் குரலெழுப்பியும் வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தமிழ்ப் பாடசாலைகளுக்குப் பொறுப்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் இருந்தும் இப்பாடசாலைகளுக்கு தமிழர்களை அதிபராக நியமிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் சிங்களப் பேரினவாதத்திற்கு துணை நிற்கின்றார்.

இது விடயமாக கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-தமிழ்த்துறையன்

## தமிழ் பேசும் சிங்களக் கைதியின் குமுறல்!

யுத்தம் யாரையும் விட்டு வைப்பதில்லை. இங்கே பாருங்கள். சிங்கள நண்பர் ஒருவர் எப்படி சிறையில் நடாத்தப்படுகிறார் என்பதை. அவர் தமிழ் பிரதேசத்திலேயே பிறந்து வளர்ந்துள்ளதால் தமிழ் மட்டுமே பேச எழுத முடிகிறது. அவர் தனக்கு சிறையில் நேர்ந்த அவலத்தை தமிழில் எழுதி அனுப்பி வைத்திருக்கிறார். அவருடைய கடிதம் கீழே.

மில்ட்டன் சந்திரசிறி (35) ஆகிய நான் ஜுன் மாதம் 2ம் திகதி சந்தேகத்தின் பெயரில் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு உடல், உள ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கப் பட்டேன். பின் கே. கே. எஸ். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு ஜுலை மாதம் 2ம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டேன். நீதவான் எனக்கு திகதி குறிப்பிடாமல் (No Date) என்னை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். எனக்கும் என் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கும் சம்பந்தம் இல்லை. எனது தாய் தந்தையர் சிங்களவர்கள். ஆனால், நான் பிறந்து, வளர்ந்தது படித்தது எல்லாம் தமிழ் மொழியில்தான். தமிழ் மொழியைத் தவிர எந்த ஒரு மொழியும் எனக்குத் தெரியாது. நான் திருமணமானவன். எனக்கு மூன்று குழந்தைகள் உண்டு. எனது குடும்பம் ஏழ்மையான குடும்பம். நான் சாரதியாக தனியார் ஒருவரின் வாகனத்தில் வேலை செய்கின்றேன். தற்போது அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளேன். எனக்கு களுத்துறைச் சிறைச் சாலையில் இருக்கத் தான் விரும்பம். எனது அயலவரும், உறவினர்களும் அங்கே இருக்கிறார்கள். இங்கே என்னை சிறை அதிகாரிகள் தாக்குகிறார்கள். தகாத வார்த்தைகளால் இம்சிக்கிறார்கள். நீ ஒரு சிங்கள இனத்தவனாக இருந்தும், எமக்கு துரோகம் செய்கின்றாய் என்று தாக்குகின்றார்கள். என்னை களுத்துறைச் சிறைக்கு மாற்றுவதற்கு உதவி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ம. சந்திரசிறி


வெளியீட்டு விழா
அஷ்ரஃப் சிஹாப்தீனின்
**காணாமல் போனவர்கள்**
(கவிதைத் தொகுதி)
மஹாவலி நிலைய கேட்போர் கூடம்
1999. 08. 03.
பிற்பகல் 4. 00 மணிக்கு

அறிமுக விழா
கே. எஸ். சிவகுமாரன் எழுதிய
1. மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள்
2. ஈழத்து நாவல்களின் சில திறனாய்வுக் குறிப்புகள்
3. இருமை
(சிறுகதை தொகுப்பு)
**ஆகிய நுல்களின் அறிமுக விழா**
ஜுலை 28. 1999 புதன் கிழமை
பி. ப. 4. மணிக்கு
இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில்


வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.